தமிழ் இனம் என்னும் திராவிட
இனத்தை இழிவுபடுத்திய

தமிழ்நாடு பிராமணர் அமைப்புகளுக்கு எச்சரிக்கை!

டாக்டர் மு. தெய்வநாயகம், M.A., Ph.D.,

தமிழ் இனம் என்னும்
திராவிட இனத்தை இழிவுபடுத்திய

தமிழ்நாடு பிராமணர் அமைப்புகளுக்கு எச்சரிக்கை!

(7 கடிதங்கள்)

12/6/2006
ஒருங்கிணைப்பாளர்
இலக்குவனார் இலக்கியப்பேரவை
அம்பத்தூர், சென்னை-600053

இலக்குவனார் இலக்கியப் பேரவை
நாள் 24/3/08
அம்பத்தூர், சென்னை-53

டாக்டர் மு. தெய்வநாயகம் M.A., Ph.D.,

நிறுவனத் தலைவர்.
தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஷெட்யூல்டு வகுப்பினர்
சமயச் சிறுபான்மையினர் உரிமைப் பாதுகாப்புப் பேரவை
278, கொன்னூர் நெடுஞ்சாலை,
அயன்புரம், சென்னை – 600 023.
☎ : 2644 90 32. Email : dravida@eth.net
Web Site : http//www.geocities.com/dravidian_religion

தலைப்பு : தமிழ் இனம் என்னும் திராவிட இனத்தை இழிவுபடுத்திய தமிழ்நாடு பிராமணர் அமைப்புகளுக்கு எச்சரிக்கை

ஆசிரியர் : டாக்டர் மு. தெய்வநாயகம் எம்.ஏ., பி.எச்.டி.

முதற் பதிப்பு : ஆகஸ்டு 2005

விலை : ரூ.50/-

பதிப்பகம் : மெய்ப்பொருள் பதிப்பகம்

அச்சிட்டோர் : மெய்ப்பொருள் அச்சகம்,
278, கொன்னூர் நெடுஞ்சாலை,
அயன்புரம்,
சென்னை – 600 023

All rights reserved

No part of this publication may be reproduced or transmitted in any form or by any means, electronic, or mechanical, including photocopying recording, or information storage and retrieval system, withour permission in writing from the publisher.

மெய்ப்பொருள் பதிப்பகம்
278, கொன்னூர் நெடுஞ்சாலை,
அயன்புரம், சென்னை – 600 023.
☎ : 2644 90 32. Email : dravida@eth.net
Web Site : http//www.geocities.com/dravidian_religion

இலக்குவனார் இலக்கியப்பேரவை
நாள்.....................
அம்பத்தூர், சென்னை-53

காணிக்கை

என் சொந்த நாட்டில் அந்நியர் புகுந்து
என் சொந்த மொழியை 'நீச மொழி' என்றும்
என் சொந்த இனத்தை 'நீச இனம்' என்றும்
என் முன்னர் கூறும் கொடுமை நடக்கிறது.
என் இனம் அடிமைத்தளையில் கிடக்கிறது.
அடிமைத் தளையை உடைப்பது என் கடமை.
அடிமைத் தளையை உடைக்கும் போரில்
உயிரையும் இழக்க முன்வரும் உத்தமர்க்குப்
படைக்கின்றேன் இந்நூலைக் காணிக்கையாக.

- மு. தெய்வநாயகம்
07-08-2005

உள்ளடக்கம்

பக்கம்

I. எச்சரிக்கைக்கான அடிப்படைகள்

1. எச்சரிக்கை விடுவதற்குக் காரணமான இரண்டு நூல்கள் ----6
2. இரண்டாம் நூலின் மேலட்டையில் அச்சடிக்கப்பட்டுள்ள நான்கு வாக்கியங்கள் -------8
3. இந்த நான்கு வாக்கியங்கள் பற்றிய உரிமைப் பாதுகாப்புப் பேரவையின் தீர்மானங்கள் -------------9

II. ஏழு கடிதங்கள்

1. பேரவைத் தீர்மானத்திற்கிணங்க பேரவைத் தலைவரின் முதல் கடிதம் -------12
2. இரண்டு நூல்களின் பிரதம ஆசிரியர் எழுதிய பதில் கடிதம் ------------15
3. பேரவைத் தலைவரின் இரண்டாம் கடிதம் -----------------18
4. பிரதம ஆசிரியரின் இரண்டாம் பதில் கடிதம் -------------24
5. பேரவைத் தலைவரின் எச்சரிக்கையுடன் கூடிய மூன்றாம் கடிதம் ------------26
6. பேரவைத் தலைவரின் நான்காம் கடிதம் ------------------58
7. பேரவைத் தலைவரின் ஐந்தாம் கடிதம் -------------------71

III. பின்னிணைப்புகள்

1. பின்னிணைப்பு – I --77
(தமிழ்நாடு பிராமணர் சங்கத்துக்கு எழுதப்பட்ட கடிதம்)
2. பின்னிணைப்பு – II --82
(திரு. வே. குகரமணனின் கடிதம்)
3. பின்னிணைப்பு – III --85
(திரு. கி. பாலகங்காதரனின் பதில் கடிதம்)
4. பின்னிணைப்பு – IV©24 --92
(ஜூலை 2005 திராவிட சமயத்தின் பகுதிகள்)
5. பின்னிணைப்பு – V --104
(தமிழ்நாடு பிராமண அமைப்பினர் இயேசு கிறிஸ்துவை இழிவுபடுத்தியது ஏன்?)

I. எச்சரிக்கைக்கான அடிப்படைகள்

1. எச்சரிக்கை விடுவதற்குக் காரணமான இரண்டு நூல்கள்

'தமிழ் இனம்' என்னும் திராவிட இனம் ஒரு தெய்வீக இனம். இது மறைந்து கிடக்கும் வரலாற்று உண்மை.

விலங்கு, மனிதன், தெய்வம், பேய் ஆகிய நான்கிற்கும் நான்கு விதமான குணங்கள் இருக்கின்றன.

தீமைக்குத் தீமை செய்தல் – விலங்கு இயல்பு
நன்மைக்கு நன்மை செய்தல் – மனித இயல்பு
தீமைக்கு நன்மை செய்தல் – தெய்வ இயல்பு
நன்மைக்கு தீமை செய்தல் – பேய் இயல்பு

'தமிழ் இனம்' என்னும் திராவிட இனம் தெய்வீக இனமாக இருப்பதால் தீமை செய்தவர்களுக்கும் நன்மை செய்தல் அதன் இயல்பாக இருக்கிறது.

இந்தத் தெய்வீக இயல்பின் காரணமாக அது துன்பத்தையும், வேதனையையும், இழிவையும், அவமானத்தையும் சகித்துப் பழகிக் கொள்ளுகிறது. அதனால் அடிமை நிலையில் காணப்படுகிறது.

ஆணவத்தின் உச்சக்கட்டமே நன்மை செய்தவர்களுக்கும் தீமை செய்யும் பேயின் இயல்பாக மாறுகிறது. ஆரியப் பிராமணர்கள் ஆணவத்தின் காரணமாக நன்மை செய்தவர்களுக்கும் தீமை செய்யும் பேயின் இயல்பைக் கொண்டிருக்கிறார்கள்.

பேய் இயல்பின் காரணமாக மற்றவர்களுக்கு எதிரான சதி, கொலை, கொள்ளை முதலிய தீமைகளில் இறங்கி, துன்பம், வேதனை, இழிவு, அவமானம் முதலியவற்றை மற்றவர்களுக்குக் கொடுத்து அடிமைப்படுத்தி வாழ விரும்பிச் செயல்படுகின்றனர்.

பேயின் ஆட்சி நிலையானது அன்று; தெய்வம் பேயை வெல்லும் என்பதே உலகம் முழுவதும் உள்ள தெய்வீக ஞானிகளின் அனுபவ அறிவுரையாய் இருக்கிறது.

தமிழ்நாடு பிராமணர் சங்கமும், காஞ்சி சங்கரமடமும், தமிழ் இலக்கியம் கூறும் தெய்வீகக் குணமுடைய அந்தணர்கள் தங்கள்

பிராமண ஜாதியினரே என்று உரிமை பாராட்டி

1. அருந்தொண்டாற்றிய தமிழக அந்தணர்கள்
2. தமிழக அந்தணர் வரலாறு

என்னும் தலைப்புகளில் இரண்டு நூல்களை வெளியிட்டுள்ளார்கள்.

மத்தியிலும் மாநிலத்திலும் ஆட்சி செய்து கொண்டிருந்த ஆணவத்தில், தாங்கள் நிலையாக ஆட்சி செய்யப் போகின்றோம் என்ற தப்புக் கணக்கில், தங்கள் இயல்பான பேய்த்தன்மையை இந்த நூல்களின் வழி, தமிழ் இனம் என்னும் திராவிட இனத்திற்கு எதிராக முழுமையாக வெளிப்படுத்தியுள்ளனர். சாதாரணமாகப் படிக்கின்றவர்கள் பிராமணர்களின் பேய் இயல்பை எளிதில் புரிந்து கொள்ள இயலாதபடி, மிகத் திறமையாக சதிமுறையில் எழுதியுள்ளனர்.

பிராமணர்கள் தங்கள் பேய்த்தன்மையை எழுத்து வடிவில் நூல்களாக சதிமுறையில் வெளியிட்டுள்ளமையால், பிராமணர்களின் பேய்த்தன்மையை, ‘தமிழ் இனம்’ என்னும் திராவிட இனம் புரிந்து கொள்ளும் வகையில் விளக்கும் முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

‘தமிழ் இனம்’ என்னும் திராவிட இனத்திற்கு எதிரான கருத்துகளை எழுதி ‘‘நிலைநாட்டி விட்டோம்’’ என்று மார்தட்டுகின்றவர்களை, ஆராய்ச்சி விவாதத்திற்கு அழைத்தால், நேர்மைக்குணம் இருந்தால் வரவேண்டுமல்லவா? நேர்மைக்குணம் இல்லாத பேய்க்குணம் ஓடி ஒளியத்தானே செய்யும். ஓடி ஒளிகின்றவர்களுக்கு எச்சரிக்கை விடுத்துத்தானே ஆகவேண்டும். அந்த முறையில், விவாத ஆராய்ச்சிக்குப் பயந்து ஓடி ஒளியும் தமிழ்நாடு பிராமணர் அமைப்புகளுக்கு எச்சரிக்கை கொடுக்க வேண்டிய இன்றியமையாக் கடமை நமக்கு ஏற்பட்டுள்ளது. தமிழ்நாடு பிராமணர் அமைப்புகளுக்கு எச்சரிக்கை கொடுக்க வேண்டிய இன்றியமையாக் கடமையை இப்பொழுது நாம் நிறைவேற்றியுள்ளோம்.

2. இரண்டாம் நூலின் மேலட்டையில் அச்சடிக்கப்பட்டுள்ள நான்கு வாக்கியங்கள்

தமிழ்நாடு பிராமணர் சங்கத்தால் வெளியிடப்பட்டது "அருந்தொண்டாற்றிய தமிழக அந்தணர்கள்" என்னும் நூல்.

காஞ்சி சங்கர மடத்தால் வெளியிடப்பட்டது "தமிழக அந்தணர் வரலாறு" என்னும் நூல்.

தனித்தனியான இந்த இரண்டு நூல்களின் இலாபத் தொகைகளை, இரண்டு அமைப்புகளும் தனித்தனியாக எடுத்துக் கொண்டன.

இரண்டு நூல்களும் உருவாகக் காரணமான பிரதம ஆசிரியர், ஆசிரியர் குழு தனித்தனியானவை அல்ல. அதனால் சிந்தனை, எழுத்து இவற்றில் இரண்டு நூல்களும் ஒன்றானவையே.

இதனால் இரண்டு நூல்களின் சாரமாக விளங்கக்கூடிய கருத்துகளை நான்கு வாக்கியங்களாக மாற்றி, அந்த நான்கு வாக்கியங்களையும் இரண்டாம் நூலாகிய "தமிழக அந்தணர் வரலாறு" என்னும் நூலின் மேலட்டையில் அச்சிட்டு வழங்கியுள்ளனர்.

அந்த நான்கு வாக்கியங்கள் வருமாறு:-

- ஆரியர் எனப்படுவோர் படையெடுத்து இந்தியாவுக்குள் வந்தார்கள் என்ற கூற்று சுத்தப் பொய் என்று, இந்த நூல் நிறுவுகிறது.

- தமிழ்நாடு உள்ளிட்ட இந்தியாவின் ஆதிக்குடி மக்கள் பிராமணர்கள் என்று, இந்த நூல் நிரூபிக்கிறது.

- ஆரியர் - திராவிடர் வேற்றுமை என்ற வாதம் வெறும் கற்பனை என்று, இந்த நூல் தெரிவிக்கிறது.

- வேத கால நாகரிகமாகிய பண்டைய பிராமணர் நாகரிகமே, உலகமே புகழும் இந்தியாவின் நாகரிகம் என்று, இந்த நூல் நிலை நிறுத்துகிறது.

3. நான்கு வாக்கியங்கள் பற்றிய உரிமைப் பாதுகாப்புப் பேரவையின்

தீர்மானங்கள்

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர், ஷெட்யூல்டு வகுப்பினர், சமயச் சிறுபான்மையினர் உரிமைப் பாதுகாப்புப் பேரவை

278, கொன்னூர் நெடுஞ்சாலை, அயன்புரம், சென்னை – 600 023.

☎ : 91-44-2644 9032 Email : dravida@eth.net

Website : http:\\www.geocities.com\dravidian_religion

டாக்டர் **மு. தெய்வநாயகம்**, எம்.ஏ., பிஎச்.டி.,
நிறுவனத் தலைவர்

நாள் : 13 - 4 - 2005

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர், ஷெட்யூல்டு வகுப்பினர், சமயச் சிறுபான்மையினர் உரிமைப் பாதுகாப்புப் பேரவையின் சிறப்புச் செயற்குழுக் கூட்டம் 13–4–2005 அன்று காலை 10.00 மணிக்கு பேரவையின் நிறுவனத் தலைவர் டாக்டர் மு. தெய்வநாயகம் அவர்கள் தலைமையில் கூடியது.

'தமிழக அந்தணர் வரலாறு' என்னும் நூலின் மேலட்டையில் அச்சடிக்கப்பட்டுள்ள நான்கு வாக்கியங்கள் சிறப்பு ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

நான்கு வாக்கியங்களும், உண்மை வரலாற்றை மறைப்பனவாகவும், தமிழ் இனம் என்னும் திராவிட இனத்திற்கு எதிரான கருத்துகளைக் கொண்டனவாகவும் இருப்பதுடன்,

1. ....இந்த நூல் நிறுவுகிறது
2. ....இந்த நூல் நிரூபிக்கிறது
3. ....இந்த நூல் தெரிவிக்கிறது
4. ....இந்த நூல் நிலைநிறுத்துகிறது

என்று வலியுறுத்துகின்ற காரணத்தால், இவை நம்மை வலிந்து விவாதத்திற்கு அழைப்பனவாகவும் இருக்கின்றன என்பது எல்லோராலும் ஒப்புக் கொள்ளப்பட்டது.

வலிந்து நம்மை விவாதத்திற்கு அழைக்கும் இந்த நிலையை நாம் சந்திக்காவிட்டால், வருங்கால சந்ததியினர் நம்மை மன்னிக்க மாட்டார்கள் என்பதைப் பேரவை உணர்ந்துகொண்ட காரணத்தால், வலிந்து

நம்மை விவாதத்திற்கு இழுத்திருக்கும் நிலையை உரிய முறையில் சந்திப்பது என்று ஒருமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

உரியவர்களை அழைத்து அவர்களுடன் வாதிட்டு, மறைக்கப்பட்டுக் கிடக்கும் வரலாற்று உண்மைகளை வெளியே கொண்டுவந்து, தமிழ் இனம் என்னும் திராவிட இன மக்கள் யாவரும், அவற்றை எளிதில் புரிந்துகொள்ளுமாறு செய்ய, அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு, இந்த ஆராய்ச்சியில் நீண்டகாலமாக ஈடுபட்டுள்ள, பேரவையின் நிறுவனத் தலைவர் டாக்டர் மு. தெய்வநாயகம் அவர்களை நிர்வாகக் குழு ஒருமனதாகக் கேட்டுக் கொண்டது.

பேரவையின் நிறுவனத் தலைவர் டாக்டர் மு. தெய்வநாயகம் அவர்கள் இதன் தொடர்பாக எடுக்கும் எல்லா முயற்சிகளுக்கும், முழு ஒத்துழைப்புக் கொடுப்பதென பேரவையின் நிர்வாகக் குழு ஒருமனதாகத் தீர்மானித்தது.

II. ஏழு கடிதங்கள்

கடிதம் எண் : 1

பேரவைத் தீர்மானத்திற்கு இணங்க பேரவைத் தலைவரின் முதல் கடிதம்

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர், ஷெட்யூல்டு வகுப்பினர், சமயச் சிறுபான்மையினர் உரிமைப் பாதுகாப்புப் பேரவை
278, கொன்னூர் நெடுஞ்சாலை, அயன்புரம், சென்னை – 600 023.
☎ : 91-44-2644 9032 Email : dravida@eth.net
Website : http:\\www.geocities.com\dravidian_religion

டாக்டர் மு. **தெய்வநாயகம்,** எம்.ஏ., பிஎச்.டி.,
நிறுவனத் தலைவர் நாள் : 13 - 4 - 2005

அடையுநர்

1. **தலைவர்**
   தமிழ்நாடு பிராமணர் சங்கம்
   75, சர்.சி.பி. இராமசாமி அய்யர் சாலை,
   ஆழ்வார்பேட்டை, சென்னை – 600 018.

2. **திரு. கே.சி. லட்சுமி நாராயணன்**
   1076, 19–ஆவது மெயின் ரோடு,
   அண்ணாநகர் மேற்கு,
   சென்னை – 600 040.

3. **ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி**
   ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள்
   சங்கரமடம், நெ.1, சாலை வீதி,
   காஞ்சிபுரம் – 631 502.

அன்புடையீர்,

உங்கள் ஒன்றிணைந்த முயற்சியின் பயனாக முதலில் 'அருந்தொண்டாற்றிய தமிழக அந்தணர்' என்னும் நூல் வெளிவந்தது. பின்னர் வெளிவந்துள்ள 'தமிழக அந்தணர் வரலாறு' என்னும் நூலின் மேலட்டையில் அச்சிடப்பட்டுள்ள நான்கு வாக்கியங்கள் தொடர்பாக

எங்கள் பேரவையின் 13–4–2005 நாளிட்ட தீர்மானம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

நான்கு வாக்கியங்களும், உண்மை வரலாற்றை மறைப்பனவாகவும், தமிழ் இனம் என்னும் திராவிட இனத்திற்கு எதிரான கருத்துகளைக் கொண்டனவாகவும் இருப்பதுடன்,

1. ....இந்த நூல் நிறுவுகிறது
2. ....இந்த நூல் நிரூபிக்கிறது
3. ....இந்த நூல் தெரிவிக்கிறது
4. ....இந்த நூல் நிலைநிறுத்துகிறது

என்று வலியுறுத்துகின்ற காரணத்தால், இவை எங்களை வலிந்து விவாதத்திற்கு அழைப்பனவாகவும் இருக்கின்றன.

எனவே, அந்த நான்கு வாக்கியங்களிலும் அடங்கியுள்ள வரலாற்று முரண்பாடுகளை வெளிக்கொண்டு வரவேண்டிய பொறுப்பைப் பேரவை என்னிடம் ஒப்படைத்துள்ளது.

மேலும்,

'நிறுவுகிறது'
'நிரூபிக்கிறது'
'நிலைநிறுத்துகிறது'

என்று குறிப்பிட வேண்டுமானால், தகுந்த விவாதம் நடத்தப்பட்டிருக்க வேண்டும். விவாதம் எதுவும் நடத்தப்படாமல் நீங்கள் இவ்வாறு குறிப்பிட்டிருப்பது முறையானது அன்று என்பதை நீங்கள் அறிவீர்கள்.

இப்பொழுது விவாதத்திற்கு நாங்கள் தயாராய் இருக்கின்றோம். எங்களோடு வாதிட்டு நீங்கள் கூறும் கருத்தை நிலைநாட்ட வேண்டியது இப்பொழுது உங்கள் கடமையாக இருக்கிறது.

தமிழ் இனம் என்னும் திராவிட இன மக்கள் யாவரும், எளிதில் புரிந்து கொள்ளும் முறையில், நம்முடைய விவாதம் நடைபெற வேண்டும், என்று பேரவை தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறது.

அதனால் தமிழ்மொழியிலுள்ள ஏதாவது ஒரு தொலைக்காட்சியின் வழி, நம்முடைய விவாதத்தை நாம் வைத்துக் கொள்ளலாம். அப்பொழுது அது எல்லோராலும் எளிதில் பார்த்துப் புரிந்துகொள்ள ஏதுவாய் இருக்கும்.

பத்திரிகை புத்தகம் எழுதும் எழுத்தாளராய் இருப்பது வேறு;

வரலாற்று உண்மைகளை ஆராய்ந்து, மறைந்து கிடக்கும் உண்மைகளை வெளிக் கொண்டு வரும் ஆராய்ச்சியாளராய் இருப்பது வேறு.

மறைந்து கிடக்கும் உண்மைகளை வெளியே கொண்டுவந்து, மற்றவர்கள் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் கொடுத்து நிறுவ, நிரூபிக்க, நிலைநிறுத்த ஆராய்ச்சி வன்மை தேவை என்பதை நீங்கள் அறிவீர்கள்.

மற்ற ஆராய்ச்சியாளர்கள் எழுப்பும் கேள்விகளைப் புரிந்துகொண்டு, அவற்றிற்கு ஏற்ற பதில் கொடுப்பதற்கு, அந்தந்தத் துறையில் ஆய்வு செய்த ஆராய்ச்சியாளர்களாலேயே இயலும்.

அதனால் உங்கள் கருத்தை, பொதுமக்கள், அறிஞர்கள் அனைவரும் பார்க்கும் தொலைக்காட்சியில், திறம்பட எடுத்து வைக்கவும், எங்கள் கருத்துகளைச் சரியாகப் புரிந்துகொண்டு அவற்றிற்குப் பதில் கொடுக்கவும் ஏற்ற, பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சிப்பட்டம் (Ph.D.) பெற்ற, அறிஞர் குழுவை நீங்களும், அதைப் போலவே நாங்களும் அமைத்துக் கொள்ளுவது, இந்த விவாதத்திற்கு இன்றியமையாத ஒன்றாகும்.

எங்கள் குழு ஒருநாள், உங்கள் குழு பிறிதொரு நாள் என்ற முறையில், கேள்வி பதிலுடன் விவாதங்களை நாம் வைத்துக் கொள்ளலாம். அவரவர் நாட்களுக்குரிய தொலைக்காட்சிக் கட்டணத்தை அவரவர் ஏற்றுக் கொள்ளலாம்.

'இந்த நூல் நிறுவுகிறது'

'இந்த நூல் நிரூபிக்கிறது'

'இந்த நூல் நிலைநிறுத்துகிறது'

என்று உறுதியாக வெளியிட்டுள்ள நீங்கள், உங்கள் உறுதியை எங்களோடு விவாதித்து நிலைநாட்டுங்கள், என்று உங்களை நாங்கள் அழைக்கும்பொழுது, தயங்காமல் எங்களுடன் விவாதத்திற்கு ஏற்பாடு செய்வதுதானே முறையாகும் ?

அந்த முறையில் நீங்கள் உங்கள் அறிஞர் குழுவை அமையுங்கள். எங்களுக்குத் தெரிவியுங்கள். உங்கள் பதில் வந்தவுடன் தொலைக்காட்சி நாட்களை நாம் ஒழுங்கு செய்து கொள்ளலாம்.

உங்கள் பதிலை விரைவில் ஆவலுடன் எதிர்பார்க்கும்

தங்கள் அன்புள்ள,

(மு. தெய்வநாயகம்)

கடிதம் எண் : 2

இரண்டு நூல்களின் பிரதம ஆசிரியர் எழுதிய முதல் பதில் கடிதம்

Phone : 2618 3704, Cell : 9841302121

K.C. Lakshminarayanan, B.A.,
Senior Journalist, Author & Editor
Recipient : Sri Jayendrar Literary Award

1076, 19th Main Road,
Anna Nagar West,
Chennai - 600 040, India.

நாள் : 18 - 04 - 2005

டாக்டர் மு. **தெய்வநாயகம்**
நிறுவனத் தலைவர்,
தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர், ஷெட்யூல்டு வகுப்பினர்,
சமயச் சிறுபான்மையினர் உரிமைப் பாதுகாப்புப் பேரவை,
278, கொன்னூர் நெடுஞ்சாலை, அயன்புரம், சென்னை – **600 026.**

அன்புடையீர்,

தங்களது **13–4–2005** தேதிய கடிதம் கிடைக்கப் பெற்றேன்.

“தமிழக அந்தணர் வரலாறு” நூலை எழுதி வெளியிட்டதில் தமிழ்நாடு பிராமணர் சங்கத்திற்கு எந்த விதமான தொடர்பும் கிடையாது. ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதியான ஜகத்குரு பூஜ்யஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சங்கராசாரிய சுவாமிகள் அவர்களும் இந்த நூல் தயாரிப்பு சம்பந்தமாக எந்தவிதமான ‘‘ஒன்றிணைந்த முயற்சி’’யையும் மேற்கொள்ளவில்லை. சுவாமிகள் அவர்கள் ஆசி மட்டுமே வழங்கினார்கள்.

தமிழக அந்தணர்களின் வரலாற்றை எழுதி வெளியிடுவதற்காக “அந்தணர் ஆராய்ச்சி மையம்” என்ற அமைப்பு காவல்துறை தலைவராக இருந்து ஓய்வு பெற்ற திரு. எஸ். கணபதி, ஐ.பி.எஸ். (ஓய்வு) அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்டது.

“தமிழக அந்தணர் வரலாறு” நூல் எழுதப்பட்டு, அச்சடிக்கப்பட்டு, வெளியிடப்பட்ட பிறகு அந்தணர் ஆராய்ச்சி மையம் என்ற அமைப்பு முறைப்படி கலைக்கப்பட்டுவிட்டது. வெளியிடப்பட்ட பிரதிகள் அனைத்தும்

விற்பனை ஆகிவிட்டன. பல மாதங்களுக்குப் பிறகு தனியார் புத்தக வெளியீட்டு நிறுவனம் ஒன்று இந்த நூலின் அடுத்த பதிப்பை வெளியிட்டது. அதன் பிரதிகள் இப்போது விற்பனை ஆகிக் கொண்டிருக்கின்றன என்று கருதுகிறேன்.

இந்த நூல் சம்பந்தமாக விவாதம் நடத்த அழைப்பு விடுத்திருக்கிறீர்கள். தாங்கள் முதலில் இந்த நூலையும், இதற்கு முன்பாக என்னைப் பிரதம ஆசிரியராக கொண்டு தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்ட "அருந்தொண்டு ஆற்றிய தமிழக அந்தணர்கள்" என்ற நூலையும் தயவு செய்து நிதானமாகவும், முழுமையாகவும் படிக்க வேண்டும். பின்னர், "தமிழக அந்தணர் வரலாறு" நூல் தயாரிப்புக்காகப் பயன்படுத்தப்பட்ட மேற்கோள் நூல்கள், தாள்கள், இதழ்கள் பட்டியலை அருள்கூர்ந்து படிக்க வேண்டும். இந்தப் பட்டியல் இந்த நூலின் இரண்டாவது தொகுதியின் இறுதியில் நூலின் மூன்றாவது இணைப்பாகத் தரப்பட்டுள்ளது. இந்தப் பட்டியலில் 49 ஆங்கில நூல்களும், 22 தமிழ் நூல்களும், இவை நீங்கலாக கால இதழ்களும், ஆய்வுத் தாள்களும் உள்ளன. இவை "தமிழக அந்தணர் வரலாறு" நூலுக்கு உரிய ஆதாரங்களாக அமைபவை.

இந்தப் பார்வை நூல்களையும், இதழ்களையும், ஆய்வுத்தாள்களையும் தயவு செய்து படியுங்கள்.

இந்தப் பணியைச் செய்த பின்னரும் இந்த நூல் சம்பந்தமாக விவாதம் நடத்த விரும்புவீர்கள் என்றால், கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன், இந்த நூலின் பிரதம ஆசிரியர் என்ற வகையில், நான் விவாதத்தில் பங்கு கொள்ளத் தயாராக இருப்பேன்.

விவாத நிபந்தனைகள்

அ. உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக இருந்து ஓய்வு பெற்ற தமிழறிந்த ஒருவர், சென்னை மயிலை சமஸ்கிருதக் கல்லூரியில் முதல்வராக இருந்து ஓய்வு பெற்ற சமஸ்கிருத அறிஞர் ஒருவர், கட்சிச் சார்பு இல்லாத தமிழ்ப் பெரும் புலவர் ஒருவர், வரலாற்றுத் துறை பேராசிரியர் ஒருவர், அகழ்வாராய்ச்சி அறிஞர் ஒருவர் ஆகியோர் விவாதத்தை நடத்தும் நீதிபதிகளாக இருக்க வேண்டும்.

ஆ. விவாதத்தில் பங்கு கொள்ளுவோர், நீதிபதிகளின் முன்னிலையில், நேருக்கு நேர் விவாதம் செய்ய வேண்டும்.

இ. விவாதத்தில் ஆதாரங்கள், நீதிபதிகள் ஒப்புக்கொள்ளும் வகையில், சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

ஈ. விவாதம் ஓர் விசாலமான அறையில் நடைபெற வேண்டும். விவாதத்தைக் காணுமாறு நடுநிலைப் பத்திரிகைகள், இதழ்கள் ஆகியவற்றின் நிருபர்கள் மட்டும் அழைக்கப்பட வேண்டும்.

உ. தமிழகத்தில் தனியார் தொலைக்காட்சி அமைப்புகள் கட்சிச் சார்பு உடையனவாக உள்ளன. எனவே வேறு மாநிலங்களைச் சேர்ந்த ஆங்கிலம், மற்றும் தெலுங்கு, கன்னடம் முதலிய பிற மொழிகளில் இயங்கும் தொலைக்காட்சி அமைப்புகளின் நிருபர்களையும், புகைப்படக் கலைஞர்களையும் தாராளமாக அழைக்கலாம் அவர்களுக்குக் கட்டணம் தரவேண்டிய அவசியம் இராது.

ஊ. விவாதத்தில் பங்குகொள்ளுபவர்கள், நீதிபதிகள், பத்திரிகைத் துறையினர், தொலைக்காட்சிப் பிரதிநிதிகள் ஆகியோர் மட்டும் விவாதம் நடக்கும் இடத்தில் இருக்க வேண்டும்.

எ. நீதிபதிகளின் தீர்ப்பை ஏற்பதாக விவாதத்தில் பங்குகொள்ளுவோர் ஆரம்பத்தில் எழுத்து மூலம் இசைவு தெரிவிக்க வேண்டும்.

விவாதம் அறிவு சார்ந்ததாக (INTELLECTUAL) அமையவும், உண்மைகள் உறுதிப்படவும் இந்த நிபந்தனைகள் உதவும்.

அன்பான நல்வாழ்த்துக்கள்.

இங்ஙனம்,
(கே.சி. லட்சுமிநாராயணன்)

கடிதம் எண் : 3

பேரவைத் தலைவரின் இரண்டாம் கடிதம்

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர், ஷெட்யூல்டு வகுப்பினர்,
சமயச் சிறுபான்மையினர் உரிமைப் பாதுகாப்புப் பேரவை
278, கொன்னூர் நெடுஞ்சாலை, அயன்புரம், சென்னை – 600 023.
☎ : 91-44-2644 9032 Email : dravida@eth.net
Website : http:\\www.geocities.com\dravidian_religion

டாக்டர் **மு. தெய்வநாயகம்**, எம்.ஏ., பிஎச்.டி.,
நிறுவனத் தலைவர் நாள் : 27-4-2005

அடையுநர்

திரு. கே.சி. லட்சுமி நாராயணன்
1076, 19-ஆவது மெயின் ரோடு,
அண்ணாநகர் மேற்கு, சென்னை – 600 040.

பொருள் :- 'தமிழ் இனம்' என்னும் திராவிட இனத்திற்கு எதிராக, தமிழ்நாடு பிராமண அமைப்புகள் வெளியிட்டுள்ள, நான்கு வாக்கியங்கள் மீது, ஆராய்ச்சி விவாதம் வேண்டி.....

அன்புடையீர்,

தங்களின் 18-4-2005 நாளிட்ட கடிதத்திற்காகவும், அதில் ஆராய்ச்சி விவாதம் தேவை என ஏற்றுக் கொண்டதற்காகவும் தங்களைப் பாராட்டுகின்றோம். மூன்று பிரிவினருக்கும் கடிதம் அனுப்பப்பட்டதில், மற்ற இரு பிரிவினரிடமிருந்து எந்தப் பதிலும் இதுவரை வரவில்லை.

தங்கள் கடிதத்தில்,

"இந்த நூல் (தமிழக அந்தணர் வரலாறு) சம்பந்தமாக விவாதம் நடத்த அழைப்பு விடுத்திருக்கிறீர்கள். தாங்கள் முதலில் இந்த நூலையும், இதற்கு முன்பாக என்னைப் பிரதம ஆசிரியராகக் கொண்டு தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்ட "அருந்தொண்டு ஆற்றிய

தமிழக அந்தணர்கள்'' என்ற நூலையும், தயவு செய்து நிதானமாகவும், முழுமையாகவும் படிக்க வேண்டும்''

என்று எழுதியுள்ளீர்கள்.

இதன்வழி,

1. தங்களைப் பிரதம ஆசிரியராகக் கொண்டு உருவாக்கப்பட்ட 'தமிழக அந்தணர் வரலாறு' என்னும் நூலும், இதற்கு முன்னர் ''தாம்ப்ராஸ் ஹெரிடேஜ் புராஜெக்ட்'' என்ற அமைப்பின்வழி உருவாக்கப்பட்ட 'அருந்தொண்டாற்றிய தமிழக அந்தணர்கள்' என்னும் நூலும் ஒன்றோடொன்று தொடர்புடையவை என்பதும்,

2. இந்த இரண்டு நூல்களின் சாரமாகவே, இரண்டாம் நூலின் மேலட்டையில் அச்சடிக்கப்பட்டுள்ள நான்கு வாக்கியங்கள் விளங்குகின்றன என்பதும் தெரிய வருகின்றன.

தங்கள் கடிதத்தில்,

''தமிழக அந்தணர்களின் வரலாற்றை எழுதி வெளியிடுவதற்காக ''அந்தணர் ஆராய்ச்சி மையம்'' என்ற அமைப்பு, காவல்துறை தலைவராக இருந்து ஓய்வுபெற்ற திரு. எஸ். கணபதி, ஐ.பி.எஸ். (ஓய்வு) அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்டது''

என்று எழுதியுள்ளீர்கள்.

"யாரால் அமைக்கப்பட்டது?" என்ற விவரம் தங்கள் கடிதத்தில் இல்லை.

அவ்வாறே, தங்கள் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள, "அருந்தொண்டாற்றிய தமிழக அந்தணர்கள்" என்ற நூலை வெளியிட்ட, தாம்ப்ராஸ் ஹெரிடேஜ் புராஜெக்ட், பற்றிய குறிப்போ, அது யாரால் அமைக்கப்பட்டது என்பது பற்றிய குறிப்போ தங்கள் கடிதத்தில் இல்லை.

'தாம்ப்ராஸ் ஹெரிடேஜ் புராஜெக்ட்' என்னும் அமைப்பை உருவாக்கியது, தமிழ்நாடு பிராமணர் சங்கம் என்பதும், 'அந்தணர் ஆராய்ச்சி மையம்' என்னும் அமைப்பை உருவாக்கியது, காஞ்சி சங்கரமடம் என்பதும், உங்களுக்கு நன்றாகத் தெரியும்.

எவ்வாறு என்றால், இரண்டு அமைப்புகளையும் உருவாக்கிய, தமிழ்நாடு பிராமணர் சங்கம், காஞ்சி சங்கரமடம் ஆகிய இரண்டாலும், பிரதம ஆசிரியராக நியமிக்கப்பட்ட சிறப்பிற்குரியவராக, தாங்கள் விளங்கி, இரட்டை நூல்களாகிய இவை இரண்டும், வெளிவரத் தாங்கள், உங்களை

நியமித்தவர்களின் விருப்பப்படி, நன்கு பணியாற்றியுள்ளீர்கள் என்பது தங்கள் நூல்கள் இரண்டாலும் விளங்குகிறது.

இந்த இரண்டு நூல்களும் உருவானதற்கான பின்னணி நிகழ்ச்சியைத் தாங்கள் தங்கள் நூலில் அழகாகக் கூறியுள்ளீர்கள். அது வருமாறு :-

"தமிழ்நாடு பிராமணர் சங்கத்தின் தலைவர் எஸ். நாராயணன் அவர்கள் **6-2-2001** அன்று மாலை எனது இல்லத்திற்கு வந்து என்னைச் சந்தித்துக் கேட்டுக் கொண்டதால், ஜகத்குரு பூஜ்ய ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள் அவர்களது அனுமதியுடனும், அனுக்கிரகத்துடன் பிரதம ஆசிரியர் பொறுப்பை ஏற்றுக் கொண்டேன்" (பக். **35-36**)

தமிழ்நாடு பிராமணர் சங்கம் தங்களைக் கேட்டுக் கொண்டதாலும், காஞ்சி சங்கரமடம் தங்களுக்கு அனுமதி வழங்கியதாலும், தாங்கள் இரண்டு நூல்களுக்கும் பிரதம ஆசிரியராகச் செயல்பட்டீர்கள் என்பது விளக்கமாகத் தெரிகிறது.

இந்த இரு நூல்களையும் உருவாக்குவதற்காக, தமிழ்நாடு பிராமணர் சங்கத்தால் அமைக்கப்பட்ட "தாம்ப்ராஸ் ஹெரிடேஜ் புராஜெக்ட்"டும், காஞ்சி சங்கரமடத்தால் அமைக்கப்பட்ட "அந்தணர் ஆராய்ச்சி மையமும்" கலைக்கப்பட்டு, தமிழ்நாடு பிராமணர் சங்கம் **ரூ.11,30,291.40**ஐயும், காஞ்சி சங்கரமடம் **ரூ.3,63,098**ஐயும் பெற்றுக் கொண்டதுடன் உங்கள் பிரதம ஆசிரியர் பணியும் முடிவுக்கு வந்துவிட்டது.

1. மற்றவர்களால் நியமிக்கப்பட்ட இரண்டு நூல்களின் பிரதம ஆசிரியராகிய தாங்கள், இப்பொழுது எந்தப் பொறுப்பிலும் இல்லை.
2. தாம்ப்ராஸ் ஹெரிடேஜ் புராஜெக்ட், அந்தணர் ஆராய்ச்சி மையம் ஆகிய இரண்டும் இப்பொழுது கலைக்கப்பட்டுவிட்டன.
3. பிரதம ஆசிரியரை நியமித்து இரண்டு நூல்களையும் வெளிக்கொண்டு வந்துள்ள தமிழ்நாடு பிராமணர் சங்கம், காஞ்சி சங்கரமடம் ஆகிய இரண்டு அமைப்புகள் மட்டுமே இன்று இந்த நூல்களின் கருத்துகளுக்குப் பொறுப்புள்ளவைகளாக உள்ளன.

இவை இரண்டும் பத்திரிகையாளராகிய தங்களை நியமித்தமைக்குத் தகுந்த காரணம் உண்டு என்பதை நீங்களும் அறிவீர்கள். நாங்களும் அறிவோம்.

1. மறைந்து கிடக்கும் வரலாற்று உண்மைகளை வெளியே கொண்டு வருவதற்கான முயற்சி வேறு.

(இந்த முயற்சிக்குத் தங்கள் கடிதத்தில் தாங்கள் குறிப்பிட்டதுபோன்று

1. அகழ்வாராய்ச்சி அறிஞர்

2. வரலாற்றுத்துறை ஆராய்ச்சி அறிஞர்

3. தமிழ்த்துறை ஆராய்ச்சி அறிஞர்

4. சமஸ்கிருதத்துறை ஆராய்ச்சி அறிஞர்

ஆகியோரும் தங்களை 'அந்தணர்' என உரிமை பாராட்டும், நீங்கள் நெற்றியில் அணியும் திருநீற்றுக்குரிய

5. சைவ சமய ஆராய்ச்சி அறிஞர்

6. சைவ சித்தாந்த ஆராய்ச்சி அறிஞர்

ஆகிய ஆறு பேர் இன்றியமையாதவர்கள் ஆவர்.)

2. வரலாற்றைப் பற்றிக் கவலைப்படாமல் தாங்கள் விரும்பும் கருத்தை, நூலாக உருவாக்கி விளம்பரம் செய்யும் முயற்சி வேறு.

இந்த இரண்டு முயற்சிகளில் ஆராய்ச்சிப் பட்டம் எதுவும் பெறாத, பத்திரிகையாளராகிய தங்களைப் பிரதம ஆசிரியராக நியமித்தமையால், நியமித்தவர்களுடைய விருப்பத்திற்கிணங்க, இலவச விளம்பரமும், பிரச்சாரமும் பத்திரிகைகளில் கிடைத்தமையைத் தங்கள் நூலில் தாங்களே (பக்.39) குறிப்பிட்டுள்ளீர்கள்.

தங்களைப் பிரதம ஆசிரியராக நியமித்தவர்களின் விருப்பம் நிறைவேறிவிட்டது. இதனால் தாங்கள் தமிழ்நாடு பிராமணர் சங்கம், காஞ்சி சங்கரமடம் ஆகிய இரண்டு அமைப்புகளின் முழு நம்பிக்கையையும் பெற்று, அவர்கள் விருப்பத்தை நிறைவேற்றும் நல்ல பத்திரிகையாளராக இருக்கின்றீர்கள் என்பதில் யாருக்கும் ஐயம் இருத்தல் இயலாது.

அதனால், நாங்கள் தெரிவித்துள்ள ஆராய்ச்சியுடன் கூடிய விவாதத்தை, தமிழ்நாடு பிராமணர் சங்கத்தின் சார்பாகவும், காஞ்சி சங்கரமடத்தின் சார்பாகவும், சிறந்த ஆராய்ச்சி அறிஞர் (Ph.D.) ஒருவரின் தலைமையில், தங்கள் கடித்தில் தாங்கள் கூறியுள்ளபடி, ஆராய்ச்சி அறிஞர் குழுவை அமைப்பதற்கு, ஒருங்கிணைப்பாளராகச் செயல்படுமாறு தங்களை நாங்கள் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

தமிழ்நாடு பிராமணர் சங்கத்திற்கும் காஞ்சி சங்கரமடத்திற்கும் தங்களைவிடச் சிறந்த ஒருங்கிணைப்பாளர் கிடைத்தல் அரிது.

**"உங்கள் அறிஞர் குழுவை நீங்கள் அமையுங்கள்.
எங்களுக்குத் தெரிவியுங்கள்"**

என்று 13-4-2005 அன்று, உங்கள் மூன்று பிரிவினருக்கும் எங்களால் அனுப்பப்பட்ட கடிதத்தையும், அதன் மற்றப் பகுதிகளையும்

நினைவுபடுத்துகின்றோம். எங்கள் கேள்விகளைப் புரிந்துகொண்டு அதற்கு ஏற்ற வரலாற்றுச் சான்றுகளுடன் பதில் கொடுக்க முன்வரும் Ph.D. ஆராய்ச்சிப் பட்டம் பெற்ற ஆராய்ச்சி அறிஞர்களை வழிநடத்தும் Ph.D. ஆராய்ச்சி அறிஞர் ஒருவர் தலைவராக நியமிக்கப்பட்டு எங்களுக்குத் தெரிவிக்கப்படல் வேண்டும்.

தாங்கள் பத்திரிகையாளராக இருப்பதால், விசாலமான அறையில் பத்திரிகையாளர்களை மட்டும் அனுமதித்து, விவாதம் நடத்துவதைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளீர்கள்.

பத்திரிகைகள் செய்திகளை எவ்வாறு வெளியிட்டு வருகின்றன என்பதை நீங்கள் அறிவீர்கள். நாங்களும் அறிவோம்.

ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதியை நடுவராக அமர்த்தி, அவரிடத்தில் உறுதிமொழி எழுதிக் கொடுத்தல் பற்றி எழுதியிருந்தீர்கள்.

நாம் அரசியல் சட்டம் கூறும் உரிமை தொடர்பாக முடிவு செய்வதற்கு நீதிமன்றத்திற்குப் போகவில்லை. நீதிமன்றம் செல்லுகின்றவர்களுக்குக்கூட மேல்முறையீடு செய்ய வாய்ப்புண்டு. இதில் அதற்குக்கூட இடமில்லை என்பதை நீங்கள் அறிவீர்கள்.

நாம் வரலாற்று ஆராய்ச்சியில் நின்று விவாதிக்கப் போகின்றோம். முடிவு செய்ய வேண்டியவர்கள் அறிஞர் பெருமக்கள் அடங்கிய மக்கள் மன்றமே தவிர, எந்தத் தனி நபரும் அல்லர்.

நம்முடைய ஆராய்ச்சி விவாதம், ஏதோ ஓரிரண்டு நாட்களில் முடிந்துவிடப் போவதைப் போன்று எண்ணிக்கொண்டு, நடுவர், பொதுவான அறிஞர் குழு, பத்திரிகையாளர், விசாலமான அறை என்பன பற்றிக் குறிப்பிட்டுள்ளீர்கள்.

நம் ஆராய்ச்சி விவாதம் ஓரிரண்டு நாள்களில் முடியக் கூடிய ஒன்று அன்று.

பல காலமாக விவாதிக்கப்பட்டு வரும் கருத்துகள், தெளிவான வரலாற்றுச் சான்றுகளுடன் ஒரு நல்ல முடிவுக்குக் கொண்டு வரப்படல் வேண்டும்.

மற்றவர் கேட்கும் கேள்விகளுக்கு, தகுந்த வரலாற்றுச் சான்றுகளுடன் பதில் கொடுக்க எந்த அணியினரால் இயலாமல் போகின்றதோ, அத்துடன் விவாதம் நிறைவு பெறும்.

எங்கள் பேரவையின் தீர்மானப்படி இந்த ஆராய்ச்சி விவாதத்தை அறிய விரும்புகின்ற அனைவரும், அவர்கள் எங்கிருந்தாலும் பார்க்க, கேட்கக் கூடிய வாய்ப்பைக் கொடுக்கக் கூடியது தொலைக்காட்சி ஒன்றே ஆகும். தமிழிலுள்ள தொலைக்காட்சிகளில் உங்களுக்கு விருப்பமான

தொலைக்காட்சியை நீங்கள் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். எங்களுக்கு விருப்பமான தொலைக்காட்சியை நாங்கள் தேர்ந்தெடுத்துக் கொள்ளுகின்றோம்.

ஒவ்வொருவரும் பேசி முடிக்கும்பொழுது, பதில் கொடுக்கப்போகும் மறு அணியினர், எந்தத் தொலைக்காட்சியில், எந்த நேரத்தில் பதில் கொடுப்பார்கள் என்ற விவரத்தை அறிவிக்க வேண்டும். அதற்குரிய ஒழுங்குகளை நாம் செய்து கொள்ளல் வேண்டும். பதில் கொடுப்பவர்களைப் பற்றிய விவரத்தை அறிவிக்காமல் விடுகிறவர்கள், விவாதத்தைத் தொடர்ந்து நடத்த இயலாமல், விவாதத்தை முடிவுக்குக் கொண்டு வருகின்றவர்களாகவும், மறு அணியினர் வெற்றி பெற்றவர்களாவும் நாம் ஏற்றுக்கொள்ளல் வேண்டும்.

உலகிலுள்ள எல்லாத் தமிழர்களும் இந்நிகழ்ச்சியை ஆவலோடு கேட்பார்கள் என்பதில் ஐயம் இல்லை.

1. தமிழ்நாடு பிராமணர் சங்கம், காஞ்சி சங்கரமடம் இவற்றின் ஒப்புதலுடன் ஒருங்கிணைப்பாளராகச் செயல்படும் உங்கள் விருப்பம் ;

2. தகுந்த ஆராய்ச்சி அறிஞர் (Ph.D.) தலைமையில், அறிஞர் குழு அமைக்கப்பட்டுள்ள செய்தி ஆகிய இரண்டையும் நீங்கள் மூன்று பிரிவினரும் எங்களுக்குத் தெரிவித்தவுடன் மற்ற ஏற்பாடுகளை நாம் விரைந்து செய்யலாம்.

தங்கள் பதிலை ஆவலுடன் எதிர்நோக்கும்.

தங்கள் அன்புள்ள,
(மு. தெய்வநாயகம்)

குறிப்பு :-

தங்கள் 18-4-2005 நாளிட்ட கடித்தின் நகலும், எங்களுடைய 27-4-2005 நாளிட்ட இக்கடிதத்தின் நகலும், தமிழ்நாடு பிராமணர் சங்கம், காஞ்சி சங்கரமடம் ஆகிய இரண்டற்கும், அவர்களுடைய விரைவான பதிலுக்காக 27-4-2005 நாளிட்டு அவர்களுக்கு எழுதப்பட்டுள்ள தனிக் கடிதத்துடன் அனுப்பப்படுகின்றன.

கடிதம் எண் : 4

பிரதம ஆசிரியரின் இரண்டாம் பதில் கடிதம்

Phone : 2618 3704, Cell : 9841302121

K.C. LAKSHMINARAYANAN, B.A.,
Senior Journalist, Author & Editor
Recipient : Sri Jayendrar Literary Award

1076, 19th Main Road,
Anna Nagar West,
Chennai - 600 040, India.

நாள் : 6–5–2005

டாக்டர் திரு. மு. தெய்வநாயகம்,
நிறுவனத் தலைவர்,
தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர், ஷெட்யூல்ட் வகுப்பினா,
சமயச் சிறுபான்மையினர் உரிமைப் பாதுகாப்புப் பேரவை,
278, கொன்னூர் நெடுஞ்சாலை, அயன்புரம், சென்னை – 600 023.

அன்புடையீர்,

1. தங்களது 27–4–2005 தேதியிட்ட கடிதம் கிடைக்கப் பெற்றேன்.

2. தங்களது கடிதத்தின் முதல் பாராவையே பிழையாக எழுதியிருக்கிறீர்கள். ஆராய்ச்சி வாதம் தேவை என்று நான் ஏற்றுக்கொண்டதாக எழுதியிருப்பது தவறு. எனது 18.4.2005 தேதிய கடிதத்தின் ஐந்தாவது, ஆறாவது, ஏழாவது பாராக்களை நிதானமாக ஒருமுறை படியுங்கள். நீங்கள் எழுதியிருப்பது தவறு என்பது புரியும்.

3. "அருந்தொண்டு ஆற்றிய தமிழக அந்தணர்கள்" என்ற மாபெரும் நூலின் பிரதம ஆசிரியர் பொறுப்பை வகித்தவன் நான். எனினும், அந்த நூலைத் தயாரித்த அமைப்புக்கும், என்னைப் பிரதம ஆசிரியராகக் கொண்டு வெளியிடப்பட்ட "தமிழக அந்தணர் வரலாறு" என்ற நூலைத் தயாரித்த அமைப்புக்கும் எந்த விதமான தொடர்பும் அறவே கிடையாது.

4. இரண்டு நூல்களையும் நிதானமாகவும், கவனமாகவும் படித்தால், அந்தணர்களது வரலாற்றை மட்டுமின்றி, அவர்கள் கடந்த 2500 ஆண்டுகளாகத் தமிழகத்தில் ஆற்றியுள்ள ஈடு இணையற்ற தொண்டுகளையும் நீங்கள் உணர்ந்துகொள்ள முடியும் என்பதால்தான், இரண்டு நூல்களையும் படியுங்கள் என்று உங்களுக்கு எழுதியிருந்தேன்.

5. மீண்டும் வலியுறுத்திக் குறிப்பிடுகிறேன், "அருந்தொண்டு ஆற்றிய தமிழக அந்தணர்கள்" என்ற நூலைத் தயாரித்து வெளியிட்ட அமைப்புக்கும், "தமிழக அந்தணர் வரலாறு" என்ற நூலைத் தயாரித்து வெளியிட்ட அமைப்புக்கும் எந்த விதமான தொடர்பும் கிடையாது. இரண்டும் வெவ்வேறு தனித்தனி அமைப்புகள்.

6. அந்தணர் ஆராய்ச்சி மையம் என்ற அமைப்பை அதில் இடம் பெற்றிருந்தவர்கள்தான் அமைத்தார்கள். இது தெளிவு.

7. ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் அந்தணர் ஆராய்ச்சி மையம் என்ற அமைப்பை உருவாக்கியது என்று கூறுவது முற்றிலும் தவறு.

8. ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் பல கோடிக்கணக்கான ஹிந்துக்களின் வழிபாட்டுக்குரிய புனிதமான பீடம். நல்ல பணிகளுக்கும், புனிதமான காரியங்களுக்கும் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளை அணுகி விண்ணப்பித்தால், அவர்கள் ஆசி வழங்குவார்கள். ஆசி வழங்குவதால், ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளுக்கும் ஆசி பெறுகின்ற பணிகளுக்கும், காரியங்களுக்கும் தொடர்பு இருக்கும் என்று கருதுவது முற்றிலும் பிழை.

9. தினசரி, பல நூறு பக்தர்கள் பல காரியங்களுக்காகவும், பணிகளுக்காகவும் ஆசி கோருகிறார்கள்; ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகள் ஆசி வழங்குகிறார்கள்.

10. வரலாற்றைப் பற்றிக் கவலைப்பட்டதால்தான், "தமிழக அந்தணர் வரலாறு" என்ற ஆராய்ச்சி நூல் பல வல்லுநர்களின் உதவியுடன் எழுதப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

11. தெளிவான வரலாற்றுச் சான்றுகள் உள்ளன என்பதால், முறையாக நடைபெறக்கூடிய ஒரு விவாதத்தில், ஓரிரு நாட்களில், விவாதத்திற்கு நீதிபதிகளாக அமருபவர்கள் முடிவுகளை அறிவிக்க இயலும்.

12. விவாதம் நடத்த வேண்டும் என்று அழைப்பு விடுத்தவர் நீங்கள்; நூல்களைப் படியுங்கள், படித்த பிறகும் நீங்கள் விவாதம் நடத்த விரும்புவீர்கள் என்றால், எனது 18-4-2005 தேதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுடன் விவாதத்தில் பங்குகொள்ள நான் தயாராக இருப்பேன்.

அன்பான நல்வாழ்த்துக்கள்,

இங்ஙனம்,
(கே.சி. லட்சுமிநாராயணன்)
மூத்த பத்திரிகையாளர்

கடிதம் எண் : 5

பேரவைத் தலைவரின் எச்சரிக்கையுடன் கூடிய மூன்றாம் கடிதம்

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர், ஷெட்யூல்டு வகுப்பினர், சமயச் சிறுபான்மையினர் உரிமைப் பாதுகாப்புப் பேரவை

278, கொன்னூர் நெடுஞ்சாலை, அயன்புரம், சென்னை – 600 023.

☎ : 91-44-2644 9032 Email : dravida@eth.net

Website : http:\\www.geocities.com\dravidian_religion

டாக்டர் **மு. தெய்வநாயகம்**, எம்.ஏ., பிஎச்.டி.,
நிறுவனத் தலைவர் நாள் : 13–06–2005

பெறுநர்

தமிழ்நாடு பிராமணர் சங்கம்
75, சர்.சி.பி. இராமசாமி அய்யர் சாலை,
ஆழ்வார்ப்பேட்டை, சென்னை – 600 018.

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி
ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள்
சங்கரமடம்,
நெ.1, சாலை வீதி, காஞ்சிபுரம் – 631 502.

பொருள் :– தமிழ்நாடு பிராமணர் அமைப்புகளுக்கு ஓர் எச்சரிக்கை.
40 நாட்களுக்குள் வருத்தம் தெரிவிக்கவேண்டும்.
ஏன் ?

அன்புடையீர்!

நாங்கள் எங்கள் பேரவையின் சார்பாக 13–4–2005, 27–4–2005 நாளிட்டு உங்களுக்கு அனுப்பிய இரண்டு கடிதங்களுக்கும் 50 நாட்களுக்கு மேலாகியும் இன்றுவரை உங்களிடமிருந்து எந்தப் பதிலும் வரவில்லை. நாங்கள், இதுவரை நடைபெற்ற நிகழ்ச்சிகளைத் திரும்பிப் பார்க்கின்றோம்.

I. திரு. கே.சி. லட்சுமி நாராயணன் - ஓர் எய்யப்பட்ட அம்பு

இவர் இப்பொழுது எந்தப் பொறுப்பிலும் இல்லாத தனிநபர்.

ஆயினும், "அருந்தொண்டாற்றிய தமிழக அந்தணர்கள்", "தமிழக அந்தணர் வரலாறு" ஆகிய இரண்டு நூல்களையும், உங்கள் இரண்டு அமைப்புகளும், உங்கள் விருப்பப்படி உருவாக்க, உங்களால் பயன்படுத்தப்பட்ட பத்திரிகையாளர் அவர். அவருடைய தற்போதைய நிலையை அறிந்து கொள்ள வேண்டி, உங்களோடு சேர்த்து அவருக்கும் எங்கள் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டன.

உங்களை மீறிச் செயல்பட இயலாத தனிநபராகிய அவர், 18–4–2005, 6–5–2005 ஆகிய நாளிட்ட இரண்டு கடிதங்கள் வாயிலாகத் தம்முடைய நிலையைத் தெளிவுபடுத்திவிட்டார்.

முறையான ஆய்வுப் பட்டம் (Ph.D.) பெறாத அவரை 'ஆராய்ச்சி' என்ற சொல்லே மிரள வைக்கிறது. காஞ்சி சங்கரடமத்திற்கு எதிராக 14–8–1998 அன்று நடைபெற இருந்த விரல் வெட்டும் போராட்டத்தை, காஞ்சி சங்ரமடம், அன்றைய தமிழக அரசு இவற்றின் ஏவுதலால், திரு. சிவணாண்டி I.P.S. அவர்கள் நம்பிக்கை துரோக ஏமாற்று நாடகத்தால் நடைபெற முடியாதபடி தடுத்ததைப் போன்று 'விவாதம்' என்ற பெயரால் 'நாடகம்' ஒன்றை அரங்கேற்ற அவர் விரும்புகின்றார். ஒழுங்கான ஆராய்ச்சி நடைபெறுவதற்கு ஏற்ற ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட அவரால் இயலாதாம்.

எய்தவன் இருக்க அம்பை நொந்து கொள்ளுவதில் எந்தப் பயனும் இல்லை.

அதனால் அவரைப் பயன்படுத்தி, தமிழ் இனம் என்னும் திராவிட இனத்திற்கு எதிராக, உங்களால் உருவாக்கப்பட்ட நூல்கள் இரண்டுக்கும், பதில் கொடுக்க வேண்டிய கடமை, அந்த இரண்டு நூல்களால் வந்த இலாபத் தொகைகளைப் பெற்றுக் கொண்ட, உங்கள் இரு அமைப்புகளுக்கு மட்டுமே உரியது ஆகும்.

1. "சங்கரமடத்திற்கும், 'தமிழக அந்தணர் வரலாறு' என்னும் நூலின் உருவாக்கத்திற்கும் எந்தத் தொடர்பும் இல்லை'' எனச் சாதித்துக் கொண்டிருக்கும் திரு. கே.சி. லட்சுமி நாராயணனுக்கு, அந்த நூலை விற்று வந்த பணத்தைச் சங்கரமடம் பெற்றுக் கொண்டதை மறுக்க இயலவில்லை. உண்மையை மறைக்கின்றார்.

2. மேலும், "அந்தணர் ஆராய்ச்சி மையத்திற்கு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் பிரதிநிதியாக பாலசுப்பிரமணியன் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்"

என்று தமிழக அந்தணர் வரலாறு, பக்கம் 989இல் அவரே எழுதியுள்ள உண்மை வரலாற்றை அவர் மூடி மறைக்கின்றார்.

'தமிழக அந்தணர் வரலாறு' என்னும் நூலை உருவாக்கிய அந்தணர் ஆராய்ச்சி மையம் காஞ்சி சங்கரமடத்தால் அமைக்கப்பட்டதே என்பதற்கான ஆதாரங்கள்.

1. அந்தணர் ஆராய்ச்சி மையம், 15–3–2005 அன்று காஞ்சிபுரத்தில் ஜெயேந்திரர் முன்னிலையில் ஆரம்பிக்கப்பட்டது. (பக்.IV) (பக்.28, 29).

2. அந்தணர் ஆராய்ச்சி மையத்திற்கு ஜெயேந்திரரின் பிரதிநிதியாக பாலசுப்பிரமணியன் நியமிக்கப்பட்டார். (பக்.989).

3. ஜெயேந்திரரின் பீடாரோஹணப் பொன்விழா ஆண்டு வெளியீடாக தமிழக அந்தணர் வரலாறு, அந்தணர் ஆராய்ச்சி மையத்தால் தயாரிக்கப்பட்டது. (பக்.VI)

4. தமிழக அந்தணர் வரலாறு 23–2–2004 அன்று சென்னையில் நடைபெற்ற ஒரு மாபெரும் விழாவில் ஜெயேந்திரரால் வெளியிடப்பட்டது. (பக்.V).

5. அந்தணர் ஆராய்ச்சி மையத்தின் வங்கிக் கணக்கு முடிக்கப்பட்டு வங்கியில் இருந்த ரூ.3,63,098 ஆகிய மிச்சத்தொகை முழுவதும் ஜெயேந்திரரால் பெற்றுக் கொள்ளப்பட்டது. (பக்.VI).

என்பன உங்கள் நூலில் நீங்களே வெளியிட்டிருக்கும் உண்மைகள் ஆகும். ஆனால் உண்மையை மறைக்கின்றார் உங்கள் பிரதம ஆசிரியர்.

உண்மைக்குத் தொடர்பில்லாத இப்படிப்பட்ட "வரலாற்று வல்லுநர்" தலைமையில் உங்களால் உருவாக்கப்பட்டிருக்கும் உங்கள் வரலாற்று நூல் கூறும் "வரலாறு" எப்படிப்பட்டதாய் இருக்கும் என்பது சொல்லாமலே விளங்கக்கூடிய ஒன்று ஆகும்.

II. தமிழ்நாடு பிராமணர் சங்கமும் "அருந்தொண்டாற்றிய தமிழக அந்தணர்கள்" உருவான வரலாறும்:-

உள்ளம் தொடர்பான கொள்கை வேறு; உடல் தொடர்பான ஜாதி வேறு.

"தமிழ்நாடு பிராமணர் சங்கம்" என்பது உடல் தொடர்பான பிராமண ஜாதி அமைப்பு.

உடல் தொடர்பான பிராமண ஜாதி அமைப்பாகிய இதில், நல்லவர்களும், கெட்டவர்களும் கலந்து இருப்பது இயல்பு. நல்லவர்களும்,

கெட்டவர்களும் கலந்து இருக்கும் தமிழ்நாடு பிராமணர் சங்கத்திற்கும், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஷெட்யூல்டு வகுப்பினர் சமயச் சிறுபான்மையினர் உரிமைப் பாதுகாப்புப் பேரவைக்கும் கடிதத் தொடர்பு 1994இல் தொடங்கியது.

1. பிராமணர்களின் சதி:–

அமைதியாக இருந்த தமிழகத்தில் கலவரத்தை உருவாக்க தமிழ்நாடு பிராமணர் சங்கம் சதியில் ஈடுபட்டபொழுது, அச்சதியை முறியடிக்க வேண்டிய கடமை பேரவைக்கு ஏற்பட்டது.

பேரவையின் நிறுவனத் தலைவர் என்ற முறையில் தமிழ்நாடு பிராமணர் சங்கத்திற்கு, அதன் சதியை அம்பலப்படுத்தி 7–9–94 அன்று கடிதம் ஒன்று அனுப்பப்பட்டது. அக்கடிதத்தைப் பின்னிணைப்பு – I இல் காண்க.

தமிழ்நாடு பிராமணர் சங்கம் பொறியில் மாட்டிக் கொண்ட எலிபோல் விழித்தது.

தமிழ்நாடு பிராமணர் சங்கத்தின் சதி அரசாங்கத்திற்குத் தெரிவிக்கப்பட்டு, தமிழ்நாடு பிராமணர் சங்கத்தின் சதி முறியடிக்கப்பட்டது. கலவரம் தவிர்க்கப்பட்டது. இதைக் குறித்து

"தமிழ்நாடு பிராமணர் சங்கத்திற்கு ஒரு பகிரங்கக் கடிதம்" என்ற தலைப்பில், 1994 அக்டோபர் 'திராவிட சமயம்' இதழில் அறைகூவல் ஒன்று வெளியிடப்பட்டது.

2. பிராமணர் கொள்கை பேய்க் கொள்கை:–

அந்த அறைகூவல் வருமாறு:–

பிராமணர் சங்கத்திற்குப் பகிரங்கக் கடிதம்

தமிழ்நாடு பிராமணர் சங்கத் தலைவர்
திரு. எஸ். பாலசுப்பிரமணியம் அவர்களுக்கு,

அன்புடையீர்,

பிராமணர் சங்கத் தலைவர் மீனவர் சங்கத் தலைவரை 'எங்கள் அன்புச் சகோதரர்' என்று அரவணைத்து 2–9–'94 தினத்தந்தியில் வெளியிட்ட விளம்பரத்தைக் கண்டு, பிராமணர் சங்கத்தைப் பாராட்டும் முகத்தான், 'தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஷெட்யூல்டு வகுப்பினர் சமயச் சிறுபான்மையினர் உரிமைப் பாதுகாப்புப் பேரவை'த் தலைவர்

என்ற முறையில் தங்களுக்கு ஒரு கடிதம் எழுதி இருந்தேன்.

பிராமணர் சங்கத்தைப் பாராட்டிய அதே நேரத்தில், சென்னையில் 18–9–'94 அன்று நடத்தப்பட்ட பிள்ளையார் ஊர்வலத்திற்கு ஆள் சேர்க்கவும் எங்கள் மீனவ மக்களை அடியாட்களாகப் பயன்படுத்தவும் பிராமணர் சங்கம் சூழ்ச்சி செய்கிறதோ என்ற என் ஐயத்தை வெளியிட்டு இருந்தேன். அப்படி சூழ்ச்சி ஒன்றும் இல்லையென்றால் 14–9–'94க்கு முன், என் கடிதத்திற்குப் பதில் எழுதி பிராமணர் சங்கம் மீனவர் சங்கத்தை உள்ளபடியே சகோதரர் சங்கமாக நினைக்கிறது என்பதையும், பிறப்பால் ஏற்றத்தாழ்வு கூறி இந்தியாவைப் பாழ்படுத்தும் பிரமன் கொள்கையைக் கைவிட்ட நல்ல தன்மையை வெளிப்படுத்தவும் தங்களுக்கு வாய்ப்பு கொடுத்திருந்தேன்.

ஆனால், பிராமணர் சங்கமோ இந்தியாவிற்குத் தீமையை விளைவிக்கும் தீய கொள்கையாகிய பிரமன் கொள்கையைத் தொடர்ந்து நிலைநாட்டுவதற்காகவே சூழ்ச்சியான முறையில் எங்கள் மீனவ மக்களைப் பயன்படுத்தியுள்ளது என்பது இப்பொழுது வெளிப்படையாகி விட்டது. தமிழக அரசு விரைந்து செயல்பட்டமையால் உயிரிழப்புகள் தவிர்க்கப்பட்டுள்ளன. பிராமணர் சங்கத்தின் சூழ்ச்சியைப் பற்றி திராவிட சமயம் அக்டோபர் இதழில் கட்டுரை ஒன்று வெளிவருகிறது. அந்த இதழும் இத்துடன் பதிவுத் தபாலில் அனுப்பப்படுகிறது. இக்கடிதமும் அவ்விதழில் வெளியிடப்பட்டுள்ளது. அடிமைகள் என்றும் தீண்டத்தகாதவர்கள் என்றும் கூறுகின்ற பிரமன் கொள்கையை உலக, மனித சமுதாயத்திற்குத் தீமை செய்யும் 'பேய்க்கொள்கை' என்று அவ்விதழில் குறிப்பிட்டுள்ளேன்.

பிரமன் கொள்கை பேய்க் கொள்கை இல்லை என்று நிரூபிக்க வேண்டிய கடமை பிராமணர் சங்கத்தைச் சார்ந்ததாகும். உங்கள் கடமையை நீங்கள் நேர்மையான இரண்டு வழிகளில் நிறைவேற்றலாம்.

1. உங்கள் கொள்கையை நான் இகழ்ந்துள்ளதாக நீதிமன்றத்தில் என்மீது வழக்குத் தொடுக்கலாம். அதைச் சந்திக்க நான் ஆயத்தமாக இருக்கின்றேன்.

2. பிராமணர் சங்கத்தின் சார்பாக அறிஞர் குழு ஒன்றை நியமித்து, பிரமன் கொள்கை மனித சமுதாயத்திற்கு நன்மை செய்யும் கடவுள் கொள்கையா? அல்லது மனித சமுதாயத்திற்குத் தீமை செய்யும் பேய்க் கொள்கையா? என்ற தலைப்பில் ஆராய்ச்சி செய்யலாம். பேய்க் கொள்கையே என்று ஆராய்ச்சி அடிப்படையில் நிலைநாட்டுவதற்கு எல்லா ஆதாரங்களும் எங்களிடம் உள்ளன.

நேர்மையான இந்த இரண்டு முறைகளையும் நாடாமல் இந்தியாவில் பிராமணர்களுக்கு இருக்கும் அரசியல் பலம், பொருளாதார பலம், சூழ்ச்சி பலம் இவற்றைப் பயன்படுத்தி என் மீதும், என்னைச் சார்ந்தவர்கள் மீதும், வீண் குற்றச்சாட்டுகளை உருவாக்குவதையும் என் உடைமைகளுக்கும், என் உடலுக்கும் கேடு விளைவிப்பதையும் நீங்கள் நாடலாம். அவற்றையும் மனமுவந்து வரவேற்க ஆயத்தமாக இருக்கிறேன் என்பதை இதன் வழி தங்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

உலக சமுதாயத்திற்குத் தீமையை விளைவிக்கும் 'பிரமன்' கொள்கையைக் கைவிட்டு 'பிராமணர்' என்ற தீய பெயரிலிருந்து விடுதலை பெற விரும்பினால் அதையும் எங்களுக்குத் தெரிவிக்கலாம். உங்களுடைய பதிலையோ அல்லது உங்களுடைய செயல்பாடுகளையோ வரவேற்பதில் மகிழ்ச்சி அடையும்,

தங்கள் அன்புள்ள,
டாக்டர் மு. தெய்வநாயகம்
தலைவர் – தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர்
ஷெட்யூல்டு வகுப்பினர் சமயச் சிறுபான்மையினர்
உரிமைப் பாதுகாப்புப் பேரவை

தமிழ்நாடு பிராமணர் சங்கம் நேர்மையானவர்களின் சங்கம் இல்லை. இதன் பிறகும் நமக்கும் தமிழ்நாடு பிராமணர் சங்கத்திற்கும் கடிதத் தொடர்பு நடத்தப்பட்டது. அவை பற்றிய விவரம் இங்கு தெரிவிப்பின் பெருகும்.

29–1–2001 இல், மெரினா கடற்கரையில் திராவிட ஆன்மீக விழிப்புணர்வு மாநாடு நம்மால் நடத்தப்பட்டது.

வெளிநாட்டிலிருந்து படையெடுத்து வந்த ஆரியர்களின் ஒரு பிரிவினரே பிராமணர்கள் என்ற கருத்து அம்மாநாட்டில் வெளியிடப்பட்டது.

அந்த மாநாட்டில் வெளியிடப்பட்ட உண்மை வரலாற்றுக்கு நேர் மாறாக, வரலாற்றுப் புரட்டுச் செய்து, **"அருந்தொண்டாற்றிய தமிழக அந்தணர்கள்"** என்னும் நூலை தமிழ்நாடு பிராமணர் சங்கம் வெளியிடத் திட்டமிட்டது.

இந்த நூலை உருவாக்குவதற்கு, ஏற்ற பிரதம ஆசிரியராக, பத்திரிகையாளர் திரு. கே.சி. லட்சுமி நாரயணன் தேர்ந்தெடுக்கப்பட்டமையையும், திராவிட ஆன்மீக விழிப்புணர்வு மாநாடு நடைபெற்ற **29–1–2001**லிருந்து எட்டாம் நாள் அதாவது, **6–2–2001** அன்று, தமிழ்நாடு பிராமணர் சங்கத்தின் தலைவர் திரு. எஸ். நாராயணன், திரு.

கே.சி. லட்சுமி நாராயணனிடம் பொறுப்பை ஒப்படைத்தமையையும் 'தமிழக அந்தணர் வரலாறு' 35ஆம் பக்கத்தில் திரு. கே.சி. லட்சுமி நாராயணன் தெளிவாக எழுதியுள்ளமை இங்கு நோக்கத்தக்கது.

சதித்திட்டம் மட்டுமே:—

ஆகவே உண்மை வரலாற்றை வரவேற்கும் நேர்மையோ, உண்மை வரலாற்றை வெளியிடும் ஆராய்ச்சி நோக்கோ தமிழ்நாடு பிராமணர் சங்கம் அறியாதவை ஆகும். தமிழ்நாடு பிராமணர் சங்கம் விரும்புவது தமிழ் இனம் என்னும் திராவிட இனத்திற்கு எதிராகச் சதி செய்து அதை அடிமைப்படுத்தும் சதித் திட்டத்தை மட்டுமே ஆகும்.

III. காஞ்சி சங்கரமடமும், "தமிழக அந்தணர் வரலாறு" உருவான பின்னணியும்

தமிழ்நாடு பிராமணர் சங்கம் என்பது அண்மையில் 30 ஆண்டுகளுக்குள் தோற்றுவிக்கப்பட்ட ஒரு பிராமண ஜாதி அமைப்பு ஆகும்.

இந்தியப் பிராமணர்களின் தலைமை இடமாக ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாகச் செயல்பட்டு வருபவை இந்தியாவிலுள்ள சங்கர மடங்கள் ஆகும். கடைசியாகத் தோன்றிய சங்கரமடம், காஞ்சி சங்கரமடம் ஆகும்.

காஞ்சி சங்கரமடத்தின் விருப்பத்திற்கு மாறாக, தமிழ்நாடு பிராமணர் சங்கத்தால் செயல்படல் இயலாது.

1. அனுமதி:

அதனால்தான், தமிழ்நாடு பிராமணர் சங்கத்தின் தலைவர், பத்திரிகையாளராகிய திரு. கே.சி. லட்சுமி நாராயணனை, தாங்கள் வெளியிடப்போகும் நூலுக்குப் பிரதம ஆசிரியராக இருக்குமாறு 6-2-2001 இல் கேட்டுக் கொண்டபொழுது திரு. லட்சுமி நாராயணன் காஞ்சி சங்கரமடத்தின் அனுமதியைத் தாம் பெற்ற விவரத்தைப் பக்கம் 35இல் தெளிவாக விளக்கியுள்ளார்.

ஆகவே, 'அருந்தொண்டாற்றிய தமிழக அந்தணர்கள்' என்னும் தலைப்பில் நூல் ஒன்றைத் தமிழ்நாடு பிராமணர் சங்கம், தமிழ் இனம் என்னும் திராவிட இனத்திற்கு எதிராக வெளியிட்டிருக்கிறது என்றால், அது காஞ்சி சங்கரமடத்தின் அனுமதியால் நடைபெற்ற ஒன்றே ஆகும்.

2. தன்னுடைய கட்டுப்பாட்டில் வெளியிட்டது ஏன்?:

தமிழ்நாடு பிராமணர் சங்கம், "அருந்தொண்டாற்றிய தமிழக அந்தணர்கள்" என்னும் நூலை வெளியிட அனுமதித்த காஞ்சி சங்கரமடம், "தமிழக அந்தணர் வரலாறு" என்னும் நூலை, தன்னுடைய கட்டுப்பாட்டில் வெளியிடும் முயற்சியில் ஈடுபட்டது ஏன் ? பிரதம ஆசிரியர் மாற்றப்படவில்லை ஆசிரியர் குழு மாற்றப்படவில்லை. நிர்வாகம் மட்டுமே, தமிழ்நாடு பிராமணர் சங்கத்திடமிருந்து காஞ்சி சங்கரமடத்திற்கு மாற்றப்பட்டது ஏன் ? என்னும் கேள்விகள் இங்கு எழுகின்றன.

3. கேள்விக்கு ஏற்ற விடை:

நமக்கும் சங்கரமடத்திற்கும் இடையே நடைபெற்ற கடிதத் தொடர்புகளே இக்கேள்விகளுக்கு விடை கொடுக்கத்தக்கவை ஆகும்.

நமக்கும் தமிழ்நாடு பிராமணர் சங்கத்திற்கும் கடிதத் தொடர்பு 1994ஆம் ஆண்டு தொடங்கியதைப் போன்றே சங்கர மடத்திற்கும் நமக்கும் கடிதத் தொடர்பு 1994ஆம் ஆண்டு தொடங்கியது.

4. மறுப்பும் பதிலும்:

1994ஆம் ஆண்டு ஜூலை "திராவிட சமயம்" இதழில் "சங்கராச்சாரிகளின் மறுபக்கம்" என்ற கட்டுரையை வெளியிட்டு, அதைப் பற்றிய சங்கரமடத்தின் கருத்தை அறிந்து கொள்ளுவதற்காக, தக்க கடிதத்துடன் அந்த ஜூலை இதழ் சங்கரமடத்திற்கு அனுப்பப்பட்டு சங்கரமடத்தின் கருத்து கேட்கப்பட்டது.

காஞ்சி சங்கரமடம், தாம் நியமித்த, இந்து திராவிட இளைஞர் இயக்க, மாநில அமைப்பாளர் திரு. வே. குகரமணன் வழியாக, நமக்கு மறுப்பு எழுதியது.

அந்த மறுப்புக்கு, 'திராவிட சமயம்' இதழின் துணை ஆசிரியர் திரு. கி. பாலகங்காதரன் அவர்களால் ஏற்ற பதில் கொடுக்கப்பட்டது.

அந்தப் பதிலில், "காஞ்சி சங்கராச்சாரியார், ஒரு திராவிடச் சிறுவனை மடத்தின் பால பெரியவாளாக ஏற்றுக் கொள்ளுவாரா ?" என்னும் கேள்வி அடங்கி இருந்தது.

மறுப்பும் பதிலும், "சங்கரமடத்து மறுப்புக் கடிதமும் நம் பதிலும்" என்ற தலைப்பில் 1994 செப்டம்பர் 'திராவிட சமயம்' இதழில் வெளியிடப்பட்டு, அவ்விதழ் தக்க கடிதத்துடன் சங்கர மடத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. மறுப்பும் பதிலும் பின்னிணைப்பு–II மற்றும் பின்னிணைப்பு–IIIஇல் காண்க.

5. மௌனமானது ஏன்? :

பதில் எழுதினால் திராவிட இனத்திற்கு எதிரான சதி வெளிப்பட்டு மாட்டிக் கொள்ள நேரிடுகிறது என்பதைப் புரிந்து கொண்ட சங்கரமடம் அதன் பின்னர் நாம் அனுப்பிய கடிதங்களுக்குப் பதில் எழுத இயலாமல் மௌனமாகிவிட்டது. சதியில் ஈடுபடும் எவருக்கும் இது இயல்பான ஒன்று ஆகும்.

6. போராட்டங்களும் கொலை செய்யப்பட்டமையும் :

அதனால் திராவிட இனம் விடுதலை அடைய வேண்டுமானால் சங்கரமடத்தோடு போராடியே ஆக வேண்டும் என்பதை
விளக்கி

(அ) **"சங்கரமடத்தோடு போராட வேண்டியது ஏன்?"** என்னும் தலைப்பில், நம்மால் நூல் ஒன்று உருவாக்கப்பட்டு சங்கரமடத்தின் பதிலுக்காக, சங்கரமடத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது.

(ஆ) அதன் பின்னர் காஞ்சி சங்கரமடத்திற்கு எதிராக 14–4–1996 அன்று ஓர் உண்ணாநோன்புப் போராட்டமும்,

(இ) 14–7–1996 அன்று சென்னை கபாலீசுவரர் ஆலயத்தில் **"பிராமணர் மனம் திருந்த பிரார்த்தனை"** போராட்டமும் நடத்தப்பட்டன.

(ஈ) அதன்பின்னர், "சங்கரமடம் ஒரு கொள்ளைக் கூட்டத்தின் தலைமை இடம்" என்பதை வரலாற்று வழியில் விளக்கி,

"சங்கரமடத்திற்கு 108 கேள்விகள்"

என்ற தலைப்பில் நூல் ஒன்று வெளியிட்டு சங்கரமடத்தின் பதிலுக்காக அனுப்பி வைக்கப்பட்டது.

சங்கரமடம், கொள்ளைக் கூட்டத்தின் தலைமையிடம் என்பதை ஏற்றுக் கொண்டு அமைதி காத்தது.

அதனால், கொள்ளைக் கூட்டத்தின் தலைமை இடமாகிய சங்கரமடத்தின் மீது அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை வற்புறுத்தி, இந்திய விடுதலையின் 50ஆம் ஆண்டு நிறைவு நாளான 14–8–1998 அன்று விரல் வெட்டும் போராட்டம் (தங்கள் விரலைத் தாங்களே வெட்டிக் கொள்ளுதல்) நம்மால் அறிவிக்கப்பட்டது.

(உ) **சங்கரமடத்தின் கொலை**

இந்தப் போராட்ட அறிவிப்பின் காரணமாக, சென்னை உயர்நீதி மன்றத்தின் வழக்கறிஞரும், இப்போராட்ட இயக்கத்தின்

இளைஞரணிச் செயலாளராகப் பணியாற்றியவருமான என் மகன் காஞ்சி சங்கரமடத்தால் வஞ்சகமாகக் கொலை செய்யப்பட்டார். காஞ்சி சங்கரமடத்தின் வஞ்சகம் பின்னரே தெரிய வந்தது.

கொலை செய்யப்பட்டவரின் படத்துடன் அவருக்குக் காணிக்கையாக வெளியிடப்பட்ட நூல் ஒன்று இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

(ஊ) **ஏமாற்று நாடகம்**

சென்னை மாநகரின் துணைக் கமிஷனராயிருந்த திரு. சிவனாண்டி, I.P.S., அவர்களின் நம்பிக்கை துரோக ஏமாற்று நாடகத்தால், விரல் வெட்டும் போராட்டம் உரிய நேரத்தில் நடத்தப்படாமல் தடுக்கப்பட்டது. இதன் முழு விவரம்

"ஏன் இந்த ஏமாற்று நாடகம்"

என்ற தலைப்பில் 1998 அக்டோபர் திராவிட சமயம் இதழில் வெளியிடப்பட்டுள்ளது.

7. மதமாற்றத் தடைச் சட்டம்

பின்னர், மத்தியிலும் மாநிலத்திலும் சங்கராச்சாரியார் விருப்பப்படி செயல்படக்கூடிய அரசுகளின் ஆட்சியில் சங்கராச்சாரியார் விருப்பங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாநிலத்தில் சங்கராச்சாரியார் விருப்பப்படி மதமாற்றத் தடைச் சட்டம் கொண்டு வரப்பட்டது.

தமது விருப்பப்படி மதமாற்றத் தடைச் சட்டம் கொண்டு வரப்பட்டமையால், மிகவும் மகிழ்ச்சியில் இருந்த சங்கராச்சாரியார், மதம் மாறுகிறவர்களில் அதிகமானோர் தலித் மக்களாக இருப்பதால், தலித் மக்களை மிகவும் இழிவுபடுத்திப் பேசினார். இதனால்,

8. "சங்கராச்சாரியாருக்கு ஒரு சவால்"

என்னும் தலைப்பில் துண்டு வெளியீடு ஒன்று வெளியிட்டு, தமிழ்நாடு முழுவதும் பரப்ப வேண்டிய இன்றியமையாமை நமக்கு ஏற்பட்டது.

அத்துண்டு வெளியீட்டின் முக்கிய கருத்துகள் வருமாறு:-

- சங்கராச்சாரியாரின் தூண்டுதலால் தமிழக அரசு மதமாற்றத் தடைச் சட்டத்தைக் கொண்டு வந்துள்ளது. அதனால் மதமாற்றத் தடைச் சட்டத்தை ஆதரித்து மெரினா கடற்கரையில் சங்கராச்சாரியார் கூட்டம் நடத்தினார்.

- இந்தியாவில் வாழும் 90 கோடி இந்திய மக்களாகிய திராவிட இன மக்களை, ஜாதியால் பல பிரிவுகளாக உடைத்து, அவர்களுக்குள் எப்பொழுதும் மோதலை உருவாக்கி, அவர்களை என்றென்றும் அடிமைப்படுத்த வேண்டும் என்னும் தீயநோக்குடன் ஆரிய பிராமணர்களால் உருவாக்கப்பட்ட மடங்களே சங்கர மடங்கள் ஆகும்.

- சங்கர மடங்கள் ஆன்மீக வேடம் பூண்டுள்ளன. உண்மையில் சங்கர மடங்கள் ஆன்மீக மடங்கள் அல்ல. ஆன்மீக வேடத்தில், அரசியல் சூழ்ச்சி செய்து, அரசியல் அதிகாரத்தைத் தம் கீழ் கொண்டு வந்து, அதன்வழி சாதி ஏற்றத்தாழ்வு அல்லது வருணாசிரமம் அல்லது பிராமணீயம் அல்லது இந்துத்துவத்தை, அழியாமல் பாதுகாப்பதே அவற்றின் கொள்கை ஆகும். இந்துத்துவம் வேறு; இந்து மதம் வேறு. இந்துத்துவம் என்பது ஆரியர்கள் திராவிடர்களை அடிமைப்படுத்தி அவர்களைக் கொள்ளையடித்து வாழும் வாழ்க்கை முறை.

- சங்கரமடங்கள், இந்திய திராவிட மதங்களான 1) பௌத்தம், 2) சமணம், 3) சைவம், 4) வைணவம், 5) சீக்கியம் ஆகிய 5 மதங்களுக்கும் எதிரானவை. இந்திய மக்களுக்கும் எதிரானவை. ஆரிய பிராமணர்களின் நன்மை ஒன்றே அதன் குறிக்கோள். அது ஆரிய பிராமணீய மடமே தவிர, ஆன்மீக மடம் அல்ல.

- மதமாற்றத் தடைச்சட்டத்தால் திராவிட இனம் முழுவதும் பாதிக்கப்பட்டிருப்பதுடன், திராவிட இனத்தின் ஒரு பகுதியான தலித் மக்கள் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த உண்மையை, தலித் மக்கள் புரிந்து கொண்டு, ஒன்றுபட்டு இச்சட்டத்தை எதிர்த்த காரணத்தால், சங்கராச்சாரியார் தலித் மக்களை மிகவும் இழிவுபடுத்திப் பேசினார்.

- தலித் மக்களை இழிவுபடுத்திய சங்கராச்சாரியார், பகிரங்க மன்னிப்பு கேட்க வேண்டும் என்று புதிய தமிழகம் கட்சியின் தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி, காஞ்சிபுரத்தில் கண்டனப் பேரணி, ஆர்ப்பாட்டம், பொதுக்கூட்டம் ஏற்பாடு செய்தார்.

- கிறிஸ்தவர்களின் தூண்டுதலால் டாக்டர் கிருஷ்ணசாமி இதைச் செய்கிறார் என்று அறிக்கைகள் வெளிவர சங்கராச்சாரியார் ஏற்பாடு செய்தார்.

- கிறிஸ்தவத்தைச் சங்கராச்சாரியார் நேரடியாக எதிர்ப்பதற்கு வரலாற்றுக் காரணம் உண்டு.

- 'இந்தியா ஓர் இந்து மத நாடு' எனக் கூறும் சங்கராச்சாரியாருக்கு 'இந்து மதம்' என்பது தோமா வழி திராவிடக் கிறிஸ்தவமாகிய சைவ, வைணவம் என்பது நன்றாகத் தெரியும்.

- தமிழகத்தில் உருவான தோமா வழித் திராவிடக் கிறிஸ்தவமாகிய சைவ, வைணவத்தை, ஆதிசங்கரர் ஆன்மீக வேடத்தில், பிராமணீயமாகிய சாதி ஏற்றத்தாழ்வுக் கொள்கைக்கு அடிமைப்படுத்த முயன்ற அன்றைய வரலாற்றை, இன்றைய சங்கராச்சாரியார் நன்கு அறிவார்.

- ஐரோப்பிய வழி இந்தியக் கிறிஸ்தவத்தை இன்று அடிமைப்படுத்த சங்கரமடத்தின் அரசியல் சூழ்ச்சி காரணமாகவே தமிழகத்தில் மதமாற்றத் தடைச் சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது.

- ஐரோப்பிய வழிக் கிறிஸ்தவத்தை அழிக்க சங்கராச்சாரியின் படைக் கருவிகளான R.S.S., B.J.P., V.H.P., பஜ்ரங்தள், இந்து முன்னணி முதலிய அமைப்புகள் வேகமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன.

- சங்கராச்சாரியார் தமக்குக் கருவியாகப் பயன்படுத்தும் இந்த அமைப்புகளில் இருப்பவர்களில் **90%** திராவிட இனத்தைச் சேர்ந்தவர்கள். நம் விரலை எடுத்து நம் கண்ணைக் குத்துவதுபோல், சங்கராச்சாரியார் திராவிட இனத்தவரைக் கொண்டே திராவிட இனத்தவரை அடிமைப்படுத்தும், அரசியல் சூழ்ச்சியைச் செய்கிறார் என்னும் உண்மை திராவிட இன மக்களுக்குப் புரிய வைக்கப்படவில்லை.

- இதற்குக் காரணம், தோமா வழி திராவிடக் கிறிஸ்தவ மதங்களே சைவமும், வைணவமும் என்பதையும், சைவமும், வைணவமுமே, இன்று 'இந்து மதம்' என்ற பெயரால் அழைக்கப்படுகின்றன என்பதையும், இந்தியா ஒரு தோமா வழி திராவிடக் கிறிஸ்தவ நாடு என்பதையும், ஐரோப்பிய வழி இந்தியக் கிறிஸ்தவர்கள் அறியாமல் இருக்கின்ற காரணத்தால், உண்மை வெளியே கொண்டு வரப்படாமல், திராவிட இனம் ஆரியப் பிராமணர்களுக்கு அடிமைப்பட்டுக் கிடக்கிறது.

திராவிட இனத்தை ஆரிய பிராமணீய அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்க வேண்டுமானால்

1. *இந்துமதம் பிராமணர்களால் உருவாக்கப்பட்ட மதம் அல்ல;*
2. *இந்தியா தோமா வழி திராவிடக் கிறிஸ்தவ நாடு;*

(இந்தத் தலைப்பில் வெளிவந்துள்ள நூல் இக்கடித்துடன் இணைக்கப்பட்டுள்ளது)

3. *இந்தியாவை வருணாசிரமக் கொள்கையால் அடிமைப்படுத்தி இருப்பவர்களே பிராமணர்கள்*

என்னும் மூன்று வரலாற்று உண்மைகள் வெளிக்கொண்டு வரப்பட்டு, திராவிட இன மக்களுக்கு இந்த மூன்று வரலாற்று உண்மைகளும் உணர்த்தப்பட வேண்டும்.

- சங்கரமடத்துக்கு 108 கேள்விகள் அனுப்பப்பட்டு, ஆறு ஆண்டுகளுக்கு மேலாகியும், அவர்களால் பதில் கொடுக்க இயலவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இப்போது மட்டுமல்ல, எப்போதும் அவர்களால் பதில் கொடுக்க இயலாது.
- ஏனெனில், சங்கரமடம் என்பது ஒரு கொள்ளைக் கூட்டத்தின் தலைமை இடம் என்று அதில் தெளிவாகக் கேள்வி எண் 16 முதல் 22 வரை குறிப்பிடப்பட்டிருந்தும், அதன் ஆசிரியர் மீது எத்தகைய நடவடிக்கையும் எடுக்க சங்கரமடம் இதுவரை முன்வரவில்லை. ஏனெனில் இது வரலாற்று உண்மை என்பதைச் சங்கரமடம் நன்கு அறியும். இதைச் சங்கரமடத்தால் மறுக்க இயலுமா ?

என்பன அத்துண்டு வெளியீட்டில் அச்சிடப்பட்டிருந்த முக்கிய குறிப்புகள்.

9. சவால் தொடர்பான கடிதங்கள்

"சங்கரமடம் ஓர் ஆன்மீக மடம் அன்று. அது ஒரு கொள்ளைக் கூட்டத்தின் தலைமை இடம் என்பதை சங்கரமடத்தால் மறுக்க இயலுமா ?" என்று சங்கரார்ச்சாரியாருக்கு விடப்பட்ட சவாலுக்கு, சங்கராச்சாரியார் பதில் கொடுக்க வாய்ப்புக் கொடுக்க வேண்டுமல்லவா ?

இந்த நல்ல நோக்கத்துடன், "சங்கராச்சாரியாருக்கு ஒரு சவால்" என்னும் தலைப்பிலுள்ள துண்டு வெளியீட்டுடன், 12-02-2003 அன்று காஞ்சி சங்கராச்சாரியாருக்கு ஒரு கடிதம் எழுதி அனுப்பப்பட்டு அக்கடிதம் 15-2-2003 அன்று சங்கராச்சாரியாரால் பெற்றுக் கொள்ளப்பட்டது.

10. முதல் கடிதம்

"*சங்கராச்சாரியாருக்கு ஒரு சவால்*" என்னும் தலைப்பில் வெளியிடப்பட்ட துண்டு வெளியீடு தொடர்பாக, சங்கராச்சாரியாருக்கு எழுதப்பட்ட முதல் கடிதம்

நாள் : 12.02.2003

பெறுநர்

ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் அவர்களுக்கு,

வணக்கம்!

இத்துடன் "சங்கராச்சாரியாருக்கு ஒரு சவால்" என்னும் தலைப்பில் எங்களால் வெளியிடப்பட்டுள்ள துண்டு வெளியீடு ஒன்று இணைக்கப்பட்டுள்ளது.

மூன்று முறைகள்

இந்தத் துண்டு வெளியீட்டின்மேல் நீங்கள் மூன்று முறைகளில் நடவடிக்கை எடுக்கலாம். வரலாற்று உண்மைகளை வெளியே கொண்டு வரவேண்டுமானால் முதல் இரண்டு முறைகளில் நடவடிக்கை எடுக்கலாம். வரலாற்று உண்மைகளை அழிக்க வேண்டுமானால் மூன்றாவது முறையில் செயல்படலாம்.

1. இத்துண்டு வெளியீட்டில் கூறப்பட்டிருப்பவை வரலாற்று உண்மைகளா? என்பதை ஆய்ந்து, மறைந்து கிடக்கும் வரலாற்று உண்மைகள் வெளிவர உதவலாம் எவ்வாறு? பல்கலைக் கழகங்களில் டாக்டர் (Ph.D.,) பட்டம் பெற்ற ஐந்து ஆராய்ச்சியாளர்களை உங்கள் சார்பாக நியமித்தால், எங்கள் சார்பாக நாங்களும் பல்கலைக் கழகங்களில், ஆராய்ச்சியில் டாக்டர் (Ph.D.,) பட்டம் பெற்ற ஐந்து ஆராய்ச்சியாளர்களை நியமிக்கின்றோம்.

   இருபிரிவினரும், எழுத்து மூலமாக ஒருவரோடொருவர் கருத்துகளைப் பரிமாறிக் கொண்டு ஓர் ஆண்டுக்குள் உண்மை வரலாற்றை நாம் அறிந்து கொள்ளுமாறு அவர்கள் செயல்பட ஒழுங்கு செய்யலாம்.

   இரண்டு பிரிவினரும் சேர்ந்து, இத்துண்டு வெளியீட்டிலுள்ள செய்தி தவறு என நிலைநாட்டினால், அவர்கள் பரிந்துரைக்கும் சட்டப்படியான தண்டனையை நாங்கள் ஏற்றுக் கொள்ள ஆயத்தமாக இருக்கின்றோம். வரலாற்று உண்மை என நிரூபித்தால் தாங்கள் உண்மையை ஏற்றுக் கொள்ள முன்வர வேண்டும்.

2. இத்துண்டு வெளியீட்டில் கூறப்பட்டிருப்பவை வரலாற்று உண்மையாக இருக்குமோ – என்று, நீங்கள் ஐயுற்றால், நாங்கள்

வகுப்பில் எவ்வாறு கற்றுக் கொடுக்கின்றோம் என்பதையும், உங்கள் அறிஞர்களின் கேள்விகளுக்கு நாங்கள் எவ்வாறு பதில் கொடுக்கின்றோம் என்பதையும், அறிந்து கொள்ளுவதற்கு ஏதுவாக, உங்கள் அறிஞர்களை எங்கள் வகுப்புகளுக்கு அனுப்பி, வரலாற்று உண்மைகளை உணர்ந்து கொள்ளலாம்.

3. வரலாற்று உண்மைகளை மறைத்து அழிக்க வேண்டும் என்று கருதினால், தாங்கள் இம்மாதம் 8, 9 ஆகிய நாட்களில் திருச்சியில் கலந்து கொண்ட "ஹிந்து இளைஞர் மாநில மாநாட்டில்" வெளியிட்டிருக்கும் வன்முறையைத் தூண்டும் கருத்துகளைப் போன்று, தாங்கள் எங்கள் மீதும் வன்முறையைக் கட்டவிழ்த்து விடலாம்; அதையும் நாங்கள் மகிழ்ச்சியோடு வரவேற்கின்றோம்.

ஏனெனில், ஊராட்சி, வட்ட ஆட்சி, மாவட்ட ஆட்சி, மாநில ஆட்சி, இந்தியாவின் மைய ஆட்சி, ஐக்கிய நாடுகள் மன்ற ஆட்சி என்று இவ்வுலக ஆட்சிகள் இருப்பன போன்று, இப்பேரண்டத்தை ஆளும் இறைவனுடைய ஆட்சியும் இருக்கிறது. இவ்வுலக ஆட்சிகளுக்கு மட்டுமே உட்பட்டவர்கள் நாங்கள் என்ற நிலையைத் தாண்டி, இறைவனுடைய ஆட்சிக்கு உட்பட்டவர்கள் என்பது எங்களுக்கு நன்றாகத் தெரியும். உலகிலுள்ள எல்லா ஆட்சிகளுக்கும் மேலான ஆட்சியே இறைவனுடைய ஆட்சி ஆகும்.

ஆகவே, நீங்கள் வன்முறையைக் கட்டவிழ்த்து விட நினைத்தால் அதற்கும் இறைவனுடைய அனுமதியில்லாமல் உங்களால் ஒன்றும் செய்ய இயலாது என்பதை நாங்கள் அறிவோம்.

இறைவனுடைய அனுமதியோடு வரும் எதையும் தாங்கிக் கொள்ள, நாங்கள் பழக்குவிக்கப்பட்டிருக்கின்றோம். ஏன் என்றால் அவற்றைத் தாங்கிக் கொள்ள இறைவன் எங்களுக்குச் சக்தியைக் கொடுக்கின்றார் என்பதை உங்களுக்குத் தெரிவிப்பதில் நாங்கள் மகிழ்ச்சி அடைகின்றோம். அந்த நிலையில் சங்கரமடம் ஒரு கொள்ளைக் கூட்டத்தின் தலைமையிடம் என்பதை, உலகம் தெளிவாக அறிந்து கொள்ள அது பயன்படும்.

திராவிடர் இன விடுதலை

இத்துண்டு வெளியீடு திராவிட இன விடுதலையை நோக்கமாகக் கொண்டு வெளியிடப்பட்டுள்ளமையால், திராவிட இன

விடுதலைக்காக உழைத்தவர்கள் பற்றி அம்மாநாட்டில், கோபால்ஜி என்பவர்,

"இனி பெரியார், அண்ணா பாசறைகள் ஒழிந்து போகும்"

என்று கூறியுள்ள செய்தியையும், அம்மாநாட்டில் தாங்கள் "முன்பு இருந்தவர்கள் செத்தாலும் பள்ளனாகவும் பறையனாகவும் சாவோம் என, தன்மானமுள்ளவர்களாக இருந்தார்கள். ஆனால் இன்று தன்மானமின்றி மதம் மாறுகிறார்கள். தி.க., தி.மு.க., கருணாநிதி இம்மூன்றும் தமிழ்ச் சமுதாயத்தின் விரோத சக்திகள்" என்றும் கருத்து வெளியிட்டுள்ளதாக 14.02.2003 நாளிட்ட 'நக்கீரன்' இதழ் 'வன்முறைப் போராட்டம்' என்ற தலைப்பில் வெளியிட்டுள்ள செய்தியையும், நாங்கள் உற்று நோக்க வேண்டியவர்களாய் இருக்கின்றோம்.

அதனால் இக்கடிதத்தின் நகல்கள் தி.க., தி.மு.க. கருணாநிதி ஆகிய மூன்று பிரிவினருக்கும் தங்களால் குறிப்பிடப்பட்டிருக்கும் தலித் அமைப்புகளுக்கும் அனுப்பப்படுகின்றன.

உண்மையான தமிழ்ச் சமுதாயத்தின் விரோத சக்தி எது என்பதை, உண்மையான தமிழர்கள் நன்கு அறிவார்கள்.

தி.மு.க. என்றாலும் கருணாநிதி என்றாலும் ஒன்றுதான் என்பதை அறிந்துள்ள தாங்கள், தி.மு.க., கருணாநிதி என்று பிரித்துக் கூறியிருப்பது, திராவிட இயக்கங்கள் அத்தனைக்கும் தலைவர் கருணாநிதியே, என்று ஏற்றுக் கொண்டு, இந்த நிலையை உங்கள் ஆதரவாளர்களுக்கு எடுத்துக் கூறுவதற்காக நன்றி கூறுகின்றோம்.

பள்ளர், பறையர் என்ற பெயர்கள் அவர்களுடைய போற்றத்தக்க வரலாற்றைத் தெரிவிப்பவை. ஆனால் இன்று உங்களுடைய வருணாசிரமக் கொள்கையால் இழிவுபடுத்தப்பட்டு நிற்கின்றன. அப்பெயர்களை மேலும் இழிவுபடுத்துவதற்காகவே பள்ளர், பறையர் என்று கூறாமல் பள்ளன், பறையன் என்று கூறியுள்ளீர்கள். இது வன்மையாகக் கண்டிக்கவும், சட்டப்படி தண்டிக்கப்படவும்கூடிய குற்றம் ஆகும். அவர்களை ஜாதியால் குறிப்பிட்டுச் சொல்ல விரும்பினால் இழிவுபடுத்தாமல் தேவேந்திரர், ஆதிதிராவிடர் என்று கூறியிருக்கலாம். உங்களை, பார்ப்பான் சங்கராச்சாரி என்றும், திருமாவளவன் அவர்களின் விளக்கத்திற்கேற்ப, ஹரிஜன சங்கராச்சாரி என்றும் குறிப்பிட்டால், உங்கள் உள்ளம் எவ்வளவு நோகும் என்பதை எண்ணிப் பாருங்கள். இந்த நிலை நீடித்தால், இது தலித் மக்களுக்கும் பிராமணர்களுக்கும் ஜாதி மோதலாக மாற வழி வகுக்கும் அல்லவா? நியாயமான பிராமணர்கள் உங்களைப் பாராட்டுவார்களா?

மதம் மாறுதல்

உலகில் தோன்றியுள்ள அத்தனை மதங்களும் மதம் மாறுதலினாலேயே வளர்ந்திருக்கின்றன என்பது உலக வரலாறு. தன்மானமின்றி மதம் மாறுதல் என்பது உங்களுக்குப் பொருந்தாதென்று நீங்கள் நினைப்பது உங்கள் வரலாற்றை நீங்கள் அறியாததாலேயேயாகும்.

நீங்கள் பாராட்டும் வேதம், சோமபானம், சுராபானத்துடன், யாகத்தில் சுட்ட மாமிசத்தை உண்ணுவதை அடிப்படையாகக் கொண்டது. அந்த வேத மதத்திலிருந்து பிராமணர்களாகிய நீங்கள் வேதாந்த மதமாகிய தோமா வழி திராவிடக் கிறிஸ்தவர்களாக மதம் மாறியுள்ளீர்கள். அதனால் இன்று புலாலுண்ண வேண்டிய அவசியம் உங்களுக்கு இல்லாமல் போயிற்று என்பது வரலாறு கூறும் உண்மை.

இதனால் பிராமணர்கள் எல்லோரும் தன்மானமற்றவர்கள் என்று கூற நீங்கள் முன் வருவீர்களா?

"தன்மானமின்றி மதம் மாறுகிறார்கள்" என்று தாங்கள் குறிப்பிட்டுள்ள கூற்று எவ்வளவு தவறானது என்பதைத் தாங்கள் அறிந்து கொள்ளுவதற்கு ஏதுவாக "கட்டாய மத மாற்றத் தடைச் சட்டத்தின் உள்நோக்கம் என்ன? தண்டிக்கப்பட வேண்டியவர் யார்?" என்னும் தலைப்பில் எங்களால் வெளியிடப்பட்ட துண்டு வெளியீடு ஒன்றும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. தண்டிக்கப்பட வேண்டியவர்கள் பிராமணர்களே என்பதை உங்களால் மறுக்க இயலாது.

மறைக்கப்பட்டுக் கிடக்கும் உண்மைகளை அறியும் வாய்ப்பாக மேலே கூறப்பட்டுள்ள முதல் இரு முறைகளில் ஒன்றைத் தாங்கள் பின்பற்ற விரும்பினால், இக்கடிதம் தங்கள் கையில் கிடைத்து, முப்பது நாட்களுக்குள், எங்களுக்கு உங்கள் பதிலை அனுப்பலாம்.

முப்பது நாட்களுக்குள் நீங்கள் எந்தச் செய்தியையும் எங்களுக்கு அனுப்பாவிட்டால், துண்டு வெளியீட்டிலுள்ள உண்மைகளை நீங்கள் மறுக்க இயலாமல், உண்மைகளை மறைக்க, நீங்கள் கலந்து கொண்ட திருச்சி மாநாட்டில் பேசப்பட்ட வன்முறைக்கு இணங்க, நீங்கள் மூன்றாவது முறையை நாடுகின்றீர்கள் என்பதை உணர்த்துவதாக அது அமையும்.

இப்படிக்கு,
(மு. தெய்வநாயகம்)

முப்பது நாள்களுக்குள் காஞ்சி சங்கராச்சாரியாரிடமிருந்து பதில் வராமையால், இரண்டாம் கடிதம் 31-03-2003 அன்று நம்மால் அனுப்பப்பட்டு, 2-4-2003 அன்று சங்கரமடத்தால் பெற்றுக் கொள்ளப்பட்டது.

11. இரண்டாம் கடிதம் :

"சங்கராச்சாரியாருக்கு ஒரு சவால்" தொடர்பாக,
எழுதப்பட்ட

இரண்டாம் கடிதம்

நாள் : 31.03.2003

பெறுநர்

ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் அவர்களுக்கு,

வணக்கம்,

எங்களால் உங்களுக்கு அனுப்பப்பட்ட,

1. ''சங்கராச்சாரியாருக்கு ஒரு சவால்'' என்னும் துண்டு வெளியீட்டையும்
2. அத்துண்டு வெளியீட்டுடன் எங்களால் உங்களுக்கு 12.02.2003 நாளிட்டு அனுப்பப்பட்ட கடிதத்தையும்

இத்துடன் இணைத்துள்ளோம். எங்கள் கடிதத்தில் குறிக்கப்பட்டுள்ளபடி மறைந்து கிடக்கும் உண்மைகளை வெளிக்கொண்டுவர வாய்ப்பாகக் கூறப்பட்டிருந்த முதல் இரண்டு முறைகளையும் ஏற்றுச் செயல்பட நீங்கள் முன்வரவில்லை.

உண்மையை மறைப்பதற்கு ஏற்ற மூன்றாவது முறையை நீங்கள் தேர்ந்தெடுத்துள்ளீர்கள் என்பது முப்பது நாட்களுக்கு மேலாக நீங்கள் கடைபிடித்துள்ள உங்கள் அமைதியின் வழி வெளிப்படுத்தி இருக்கின்றீர்கள்.

"சங்கரமடம் ஆரிய பிராமணக் கொள்ளைக் கூட்டத்தின் தலைமையிடம்'' என்பதை நீங்கள் மீண்டும் உறுதிப்படுத்தியிருக்கின்றீர்கள். கொள்ளைக் கூட்டத்தின் தலைமை இடம் எவ்வாறு மறைந்து கிடக்கும் உண்மைகள் வெளிவரத் துணையாகச் செயல்பட இயலும் ?

ஆகவே நீங்கள் முப்பது நாட்களுக்கு மேலாகியும் அமைதியாய் இருப்பது உங்களைப் பொறுத்த அளவில் சரியானதே. கொள்ளைக்

கூட்டம் தங்களைப் பற்றிய உண்மைகளை வெளிக்கொண்டு வர முயல்கின்றவர்களைக் கொலை செய்ய முற்படுவது இயல்பான ஒன்றே ஆகும்.

"சங்கரமடத்தை, வரும் தமிழ்ப் புத்தாண்டு அன்று குண்டு வைத்துத் தகர்ப்போம்" என்று அறிவித்த ராஜாராம் என்பவர் சுட்டுக் கொல்லப்பட்டார் என்று இன்று (26.03.2003) நாளிதழ்களில் செய்தி வெளிவந்திருக்கிறது. ராஜாராமின் குண்டு வைத்துத் தகர்க்கும் முறை எங்களுக்கு உடன்பாடானதன்று; தவறான முறையாகும். ஆனால் அவ்வாறு கூறிய அவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்; அதுவும், காவல்துறையின் கட்டுப்பாட்டில் அவர் இருக்கும்பொழுது, என்னும் செய்தி கூர்ந்து கவனிக்கப்பட வேண்டிய ஒன்று ஆகிறது. இன்றைய இந்து நாளிதழ் அந்நிகழ்ச்சியைப் பற்றிப் பல ஐயங்களை எழுப்பியுள்ளது.

இந்த நேரத்தில்

1. **1996–**ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் திராவிட சமயம் இதழில் வெளியிடப்பட்டிருந்த ஆசிரியர் உரையின் ஒரு பகுதியும்

2. **1999–**ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் திராவிட சமயம் இதழில் வெளியிடப்பட்டிருந்த "உங்களைக் கொன்று விட்டு உங்கள் தந்தையைக் கொல்ல சதித் திட்டம்" என்ற பகுதியும்

3. **1999–**ஆம் ஆண்டு நவம்பர் திராவிட சமயம் இதழில் வெளியிடப்பட்டிருந்த "கைகளில் பிறை, சிலுவையுடன் ஆன்மீகப் பிள்ளையார்" என்ற பகுதியும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

இந்த மூன்று பகுதிகளில் **முதல் பகுதி** 'சங்கரமடத்தோடு போராட வேண்டியது ஏன் ?' என்ற நூலை எழுதி வெளியிட்டு, **25.05.96**இல் ஈரோட்டில் அதைப் பற்றி நடத்தப்பட்ட கருத்தரங்கில் உண்மையை நிலைநாட்டிய காரணத்தால் என்னைக் கொலை செய்ய நடந்த சதி விளக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் பகுதியில் சங்கரமடத்தை எதிர்த்து நாங்கள் குடும்பமாகப் போராடி வருகின்ற காரணத்தால், சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கறிஞராக இருந்த என் மகனை, சங்கரமடமும் தாமும் சேர்ந்து கொலை செய்ததாக டாக்டர் சீனிவாச பட்டாச்சார்யா என்பவர் கூறிய கருத்துக்கள் வெளியிடப்பட்டுள்ளன.

மூன்றாம் பகுதியில், சமத்துவப் பிள்ளையாரை உருவாக்கிய பாஸ்கரனின் இறப்பு நிகழ்ச்சி, சங்கரமடம் என் மகனைக்

கொன்றிருக்கலாமோ என்ற ஐயத்தை எனக்கு எழுப்பியமை வெளியிடப்பட்டுள்ளது.

முதலில் என் மகனையும், பின்னர் என் மகளையும், அதன் பின்னர் என்னையும் கொலை செய்ய வேண்டும் என்னும் சங்கர மடத்தின் கொலை திட்டம் என்பது பற்றிய செய்தி, இரண்டாம் மூன்றாம் பகுதிகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. 12.02.2003 அன்று நாங்கள் உங்களுக்கு அனுப்பிய எங்கள் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தபடி இறைவனுடைய அனுமதியில்லாமல் எங்களை உங்களால் ஒன்றும் செய்ய இயலாது என்பதை நாங்கள் அறிவோம்.

இறைவன் உங்களை அனுமதித்தால் அது சங்கரமடம் ஆரிய பிராமணக் கொள்ளைக் கூட்டத்தின் தலைமையிடம் என்பதை உலகம் புரிந்துகொள்ள வழிவகுப்பதாக அமையும். அந்த நிலையில் சங்கரமடங்கள் தொடர்ந்து செயல்பட இயலுமா என்பது கேள்விக்குரிய ஒன்றாகிவிடும். சாதி ஏற்றத்தாழ்வுக் கொள்கையை உருவாக்கி, அதை அரசியல் துணையுடன் நிலைநிறுத்தி இந்திய திராவிட மக்களை இழிவுபடுத்திக் கொள்ளையடிப்பதற்காகவே உருவாக்கப்பட்டவை இந்தியாவிலுள்ள சங்கரமடங்கள் என்பது வரலாறு. (திராவிடர்கள் = சூத்திரர் + பஞ்சமர். இந்திய மக்கள் தொகையில் 90 %)

சங்கர மடங்களிலுள்ள உங்களுக்கு எந்தச் சேதமும் ஏற்படாமல், இந்தியாவிலுள்ள சங்கரமடங்களைச் சேர்ந்தவர்கள் அத்தனை பேரும் மனம் திருந்தி, இந்திய மக்களைச் சீரழிக்கும் சாதி ஏற்றத்தாழ்வுக் கொள்கையை இந்தியாவிலிருந்து நீக்குவதற்குத் துணையாகச் செயல்பட வைக்குமாறு இறைவனை நோக்கிப் பிரார்த்தனை செய்ய ஒழுங்கு செய்துகொண்டிருக்கிறோம்.

இந்திய திராவிட மக்களை இழிவுபடுத்தும் சாதி ஏற்றத்தாழ்வுக் கொள்கையை இந்தியாவை விட்டு நீக்குமாறு இறைவனை நோக்கி, முழு இரவு பிரார்த்தனை ஒவ்வொரு மாதமும் இரண்டாம் வெள்ளிக்கிழமைதோறும் இரவு 10 முதல் காலை 5 வரை மே மாதம் 9–ஆம் தேதிமுதல் நடைபெற இருக்கிறது என்னும் செய்தியை உங்களுக்குத் தெரிவிக்கின்றோம்.

இந்தச் செய்தி உங்களுக்கு அற்பமானதாகத் தோன்றலாம். ஆனால் இந்திய திராவிட மக்களை சாதி ஏற்றத்தாழ்வுக் கொள்கையால் இழிவுபடுத்தும் சங்கரமடங்கள், இந்தியாவில் இருந்து முற்றிலும் நீக்கப்படும் காலத்தை இறைவன் உருவாக்குவார் என்பதில் எங்களுக்கு எவ்வித ஐயப்பாடும் இல்லை என்பதை இதன் வழி உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இறுதியாக

1. "சங்கராச்சாரியாருக்கு ஒரு சவால்" என்ற தலைப்பில் எங்களால் வெளியிடப்பட்ட துண்டு வெளியீட்டில் கூறப்பட்டுள்ள வரலாற்று உண்மைகள் உங்களால் மறுக்க இயலாமல் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றன.

2. சங்கரமடம் ஆரிய பிராமணக் கொள்ளைக் கூட்டத்தின் தலைமை இடம் என்பது 1996 முதல் எங்களால் நடத்தப்பட்ட பல்வேறு போராட்டங்கள், மற்றும் "சங்கரமடத்துக்கு 108 கேள்விகள்" முதலியவற்றின் வழியாகவும் நிலைநாட்டப்பட்டுள்ளன.

3. ஆன்மீக வேடத்தில் நீங்கள் இருந்தபோதிலும் கொள்ளைக் கூட்டம் வழக்கமாகக் கையாளும் முறைகளைக் கையாளும் நடைமுறையை உடையவர்கள் நீங்கள் என்பது உங்களால் மறுக்க முடியாத உண்மையாகிறது.

4. இந்த உலக அரசுகளை உங்கள் காலடியில் நீங்கள் வைத்துக் கொண்டு, எவ்வளவுதான் நீங்கள் செயல்பட்டபோதிலும், இப்பேரண்டத்தை ஆளும் இறைவனுடைய ஆட்சிக்கு எதிராக **"நானே கடவுள்" என்ற கொள்கையில் செயல்படும் உங்கள் மடங்களை, இறைவன் தம்முடைய நாசியின் சுவாசத்தால் அழிக்க வல்லவராய் இருக்கின்றார்**, என்பதை உங்களால் மறுக்க இயலாது என்பதே இப்பொழுது நாங்கள் உங்கள் முன் வைக்கும் சவாலாகும்.

5. இந்த சவாலின் முன் உங்களால் நிற்க இயலாது என்பதை நாங்கள் அறிவோம். அதனால் இந்திய திராவிட மக்களை, சாதி ஏற்றத்தாழ்வுக் கொள்கையால் இழிவுபடுத்தி, சீரழித்து, கொள்ளையடிக்கும் உங்கள் தவறான வழியிலிருந்து சைவ சித்தாந்தம் கூறுகின்றபடி மனம் திருந்தி, இறைவனிடம் மன்னிப்புக் கேட்டு வாழ்வடையுங்கள் என்பதே இப்பொழுது உங்கள் முன் நாங்கள் வைக்கும் வேண்டுகோள் ஆகும்.

இந்த வேண்டுகோளில் உங்களுக்குச் சந்தேகம் இருந்தால், தோமா வழி திராவிடக் கிறிஸ்தவத்தால் பாராட்டப்படும் திருநீற்றை நெற்றியில் அணிந்திருக்கும் நீங்கள், தோமா வழி திராவிடக் கிறிஸ்தவ இலக்கிய நூலாகிய திருவிளையாடற் புராணத்திலுள்ள "மாபாதகம் தீர்த்த படலத்தை"ப் படிக்கவும்.

இப்படிக்கு,
(மு. தெய்வநாயகம்)

குறிப்பு :-

திராவிட சமயம் 1994 ஜூலை இதழில் "சங்கராச்சாரிகளின் மறுபக்கம்" என்ற தலைப்பில் எங்களால் வெளியிடப்பட்டிருந்த கட்டுரையோடு, சங்கரமடத்திற்குக் கடிதம் எழுதி அனுப்பி வைக்கப்பட்டது. அதற்கு, சங்கரமடத்தால் உருவாக்கப்பட்டிருந்த இயக்கமான 'இந்து திராவிட இளைஞர் இயக்கத்தின்' மாநில அமைப்பாளரான திரு. வே. குகரமணன் வழியாக, சங்கரமடம் மறுப்பு எழுதியது.

அந்த மறுப்புக்கு, திராவிட சமயம் இதழின் துணை ஆசிரியர் திரு. கி. பால கங்காதரன் வழியாகத் தக்க பதில் கொடுக்கப்பட்டது.

இவை இரண்டும் 1994 செப்டம்பர் திராவிட சமயம் இதழில் "சங்கர மடத்து மறுப்புக் கடிதமும் நம் பதிலும்" என்ற தலைப்பில் வெளியிடப்பட்டன. மறுப்பு எழுதினால் மறைந்து கிடக்கும் உண்மை வெளிவந்து விடுகிறது என்பதைப் புரிந்து கொண்ட சங்கரமடம் உண்மையை மறைத்து வருகிறது. மறைப்பதற்காகவே எங்கள் கடிதங்களுக்கு மறுப்பு எழுதாமல் இருந்து வருகிறது.

(இக்கடிதம் 2.4.2003 அன்று சங்கரமடத்தால் பெற்றுக் கொள்ளப்பட்டது.)

இந்த இரண்டாம் கடிதத்துடன், சங்கரமடம் ஒரு கொலைகாரமடம் என்பதற்கு ஆதாரமாக மூன்று பின்னிணைப்புகள் சேர்த்து அனுப்பப்பட்டன.

மேலே கூறப்பட்டுள்ளவை யாவும்,

"சங்கராச்சாரியாருக்கு ஒரு சவாலும் அதன் தொடர்பான கடிதங்களும்" என்ற தலைப்பில் 2003 ஏப்ரல் மாதத் திராவிட சமயம் இதழில் வெளியிடப்பட்டிருந்தன.

12. 2003 ஏப்ரல் திராவிட சமய இதழும் தமிழக அந்தணர் வரலாறும் :

இந்த 2003 ஏப்ரல் மாத இதழின் பகுதி தமிழக அந்தணர் வரலாறு, பக்கம் 94இல் மேற்கோள் எண் 19ஆக "விஷத்தை நீக்குக" என்ற குறுந்தலைப்பின்கீழ் கொடுக்கப்பட்டுள்ளது. அது வருமாறு:-

விஷத்தை நீக்குக :-

ஸ்ரீ ஆதி சங்கரர் ஸ்தாபித்து அருளிய ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் மீதும் "திராவிட சமயம்" இதழ் பாய்ந்திருக்கிறது.

"சங்கர மடங்கள் இந்திய திராவிட மதங்களான பௌத்தம், சமணம், சைவம், வைணவம், சீக்கியம் ஆகிய ஐந்து மதங்களுக்கும் எதிரானவை, இந்திய மக்களுக்கும் எதிரானவை. ஆரிய பிராமணர்களின் நன்மை ஒன்றே

அதன் குறிக்கோள். அது ஆரிய பிராமணிய மடமே தவிர, ஆன்மீக மடம் அல்ல" என்றும் அந்த இதழ் எழுதியுள்ளது.

ஹென்றி ஃபோர்டு குறிப்பிட்ட Bunk வகைக்கு, இந்தக் குப்பைக் கூளம் மற்றொரு உதாரணம்.

குப்பைக்கூளம் என்று, இதனை அலட்சியமாக ஒதுக்கி விடக்கூடாது, இது விஷம் கொண்டது, விஷத்தை அகற்ற வேண்டும், உண்மையான புற நிலை நோக்குக் கொண்ட வரலாற்றை எழுதுவதன் மூலம்.

இங்கு 'விஷம்' என்று "தமிழக அந்தணர் வரலாறு" என்னும் நூலில் கூறப்பட்டிருக்கும் பகுதி, 12-02-2003 அன்று காஞ்சி சங்கரமடத்திற்கு நம்மால் அனுப்பப்பட்ட முதல் கடிதத்தோடு இணைக்கப்பட்டிருந்த 'சங்கராச்சாரியாருக்கு ஒரு சவால்" என்னும் துண்டு வெளியீட்டின், நான்காம் நட்சத்திரக் குறியிலுள்ள பகுதி ஆகும்.

13. உண்மை ஆராய்ச்சி சங்கரமடத்திற்கு விஷம் :

12-02-2003 அன்று நாம் சங்கரமடத்திற்கு அனுப்பிய முதல் கடிதம் 15-02-2003 அன்று சங்கரமடத்தால் பெற்றுக் கொள்ளப்பட்டது.

"உங்கள் சார்பாக ஐந்து ஆராய்ச்சியாளர்களை நீங்கள் நியமித்தால், எங்கள் சார்பாக ஐந்து ஆராய்ச்சியாளர்களை நாங்கள் நியமிக்கின்றோம். மறைந்து கிடக்கும் வரலாற்று உண்மையை வெளிக்கொண்டு வருவோம்" என்று கொடுத்த வேண்டுகோளைப் பெற்றுக் கொண்ட சங்கரமடம் நேர்மையுள்ளதாக இருந்தால் என்ன செய்திருக்க வேண்டும்?

அதன் சார்பாக ஐந்து அறிஞர்களை நியமித்து உண்மை வெளிவர உதவி இருக்க வேண்டும்.

ஆனால், நம்முடைய கடிதத்தை 15-2-2003இல் பெற்றுக் கொண்ட காஞ்சி சங்கரமடம் சரியாக ஒரு மாதத்தில் 15-3-2003இல் அந்தணர் ஆராய்ச்சி மையத்தை அமைத்தமையை தமிழக அந்தணர் வரலாறு, பக்கம் 37 கூறுகிறது.

15-3-2003இல் சங்கரமடத்தால் அமைக்கப்பட்ட அந்தணர் ஆராய்ச்சி மையத்தின் வழி உருவாக்கப்பட்ட தமிழக அந்தணர் வரலாறு, பக்கம் 94இல் நம்முடைய 12-2-2003 நாளிட்ட இரண்டாம் கடிதத்தில் நாம் கூறியிருந்த நமக்கு எதிரான கொலைக் குற்றத்தை உறுதிப்படுத்தியிருப்பதுடன், காஞ்சி சங்கரமடம் தமிழகப் பிராமணர்களை

ஏவி, நம்மைக் கொலை செய்தே ஆக வேண்டும் என்று அவர்களுக்குக் கட்டளையிடுவதாகவும் அமைந்துள்ளது.

அந்தக் கட்டளை சதி நிறைந்த மொழியில் கூறப்பட்டுள்ளது. எவ்வாறு ?

I. சங்கரமடம் நாம் கேட்டுக் கொண்டபடி அறிஞர்களை நியமித்தல் இயலாது. ஏன் ?

1. இந்திய மதங்கள் ஐந்தும் திராவிட மதங்கள் என்னும் வரலாற்று உண்மை வெளிவந்து விடும்.
2. சங்கரமடங்கள் இந்திய மதங்களாகிய 5 திராவிட மதங்களுக்கும் எதிரானவை என்னும் வரலாற்று உண்மை வெளிவந்து விடும்.
3. சங்கரமடங்கள் இந்திய மக்களாகிய திராவிட இனத்திற்கு எதிரானவை என்னும் வரலாற்று உண்மை வெளிவந்து விடும்.
4. சங்கரமடங்கள் திராவிட இனத்திற்கு எதிரான ஆரிய பிராமணர்களின் நன்மை ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு செயல்படும் ஆரியப் பிராமணமடம் என்னும் வரலாற்று உண்மை வெளிப்பட்டு விடும்.
5. சங்கரமடம் ஆரியப் பிராமணீய மடமே தவிர ஆன்மீக மடம் அல்ல என்னும் வரலாற்று உண்மை வெளிப்பட்டு விடும்.

II. அதனால் சங்கரமடம் நாம் கேட்டுக் கொண்டபடி அறிஞர் குழுவை நியமித்தல் இயலாது. அதே நேரத்தில் அமைதியாக இருந்துவிடவும் இயலாது. இந்தக் கருத்து இந்திய மக்கள் மத்தியில் பரவ இடம் கொடுத்துவிடக் கூடாது. அதற்கு என்ன செய்ய வேண்டும் ? இந்தக் கருத்து பிராமணர்களுக்கு எதிரான விஷம். இது பிராமணர்களின் உயர்வை அழித்துவிடும். அதனால் அலட்சியமாக இருந்துவிடக் கூடாது. குப்பைக் கூளம்போல எண்ணி அலட்சியமாய் இருந்தால் ஆபத்தில் போய்முடியும்.

III. விஷமாகக் கருதிச் செயல்பட வேண்டும் என்று தமிழக அந்தணர் வரலாறு கூறுகிறது. இங்கு "விஷம் கொண்டது என்று சுட்டிக் காட்டப்படுவது எது ?" என்னும் கேள்விக்கு "திராவிட சமயம்" இதழ் என்ற பதில் அதில் அடங்கியிருக்கிறது.

IV. பிராணர்களுக்கு எதிரான விஷம் கொண்ட திராவிட சமயம் இதழ் வெளிவராமல் தடுக்கப்படல் வேண்டுமானால், திராவிட சமயம்

இதழ் வெளிவரக் காரணமானவர்கள் கொலை செய்யப்படல் வேண்டும்.

14. நூலை வெளியிட்டதன் நோக்கம் - வன்முறை கொலை :

காஞ்சி சங்கரமடத்திற்கு நம்மால் 12–2–2003, 31–3–2003 நாளிட்டு அனுப்பப்பட்ட இரண்டு கடிதங்களையும் மீண்டும் ஒருமுறை வாசித்துப் பார்த்தால் சங்கரமடம், அந்தணர் ஆராய்ச்சி மையத்தை ஏற்படுத்தி, தமிழக அந்தணர் வரலாறு என்னும் நூலை வெளியிட்டதன் நோக்கம் நன்கு விளங்கும்.

வன்முறையிலும், கொலையிலும் ஈடுபடுவது சங்கரமடத்திற்கு இயல்பான ஒன்றே ஆகும். ஆட்சியாளர்களைக் கையில் வைத்துக் கொண்டு இதைச் செயல்படுத்துவது என்பது சங்கர மடத்தின் ஸ்மார்த்தக் கொள்கைக்கு இயல்பான ஒன்றே ஆகும். சங்கரராமன் கொலை வழக்கில் சங்கரமடம் நிலை தடுமாறுகிறது என்றால், சங்கரமடத்தின் காலடியில் கிடப்பவர்கள் மத்திய அரசின் தலைமைப் பதவியில் இல்லாத ஒரே ஒரு குறையால் மட்டுமே ஆகும்.

தமிழக அந்தணர் வரலாறு வெளிவரும்பொழுது, மத்திய அரசின் ஆட்சியாளர்கள் சங்கர மடத்தின் கட்டுப்பாட்டில் இருந்தார்கள்.

அதனால், சங்கரமடத்தின் வன்முறை, கொலை பற்றிய நம்முடைய கடிதத்தைப் பெற்றுக் கொண்டு, அலட்சியச் சிரிப்புடன் "விஷத்தை நீக்குக" என்று நம்மை அழிக்க பிராமணர்களுக்குக் கட்டளை கொடுக்கப்பட்டது.

15. சதிநிறைந்த மொழி :

மேலே கூறப்பட்டுள்ளபடி "விஷத்தை நீக்குக" என்று கொலை செய்யுமாறு வெளிப்படையாக நூலில் எழுத முடியுமா? அதற்காகத் தான் சதி நிறைந்த மொழி பயன்படுத்தப் பட்டுள்ளது. அந்தச் சதி நிறைந்த மொழியே,

"உண்மையான புறநிலை நோக்குக் கொண்ட வரலாற்றை எழுதுவதன் மூலம்" என்பது ஆகும்.

இது சங்கரமடத்தின் சதிநிறைந்த மொழியே என்பதற்கான காரணங்கள் :–

1. புறநிலை நோக்குக் கொண்ட வரலாற்றை எழுதுவதற்குத் தானே

உங்கள் அறிஞர்களை நீங்கள் நியமியுங்கள் என்று நாங்கள் உங்களைக் கேட்கின்றோம். அதற்கு உங்களால் முன்வர இயலவில்லையே ஏன்? புறநிலை நோக்குக் கொண்ட ஆய்வு வெளிவந்தால், பிராமணர்களின் சதி வெளிப்பட்டு விடும் என்பதால்தானே?

2. மேலும், தமிழக அந்தணர் வரலாற்றை எழுதும்பொழுது எங்கள் கருத்தை மேற்கோள்காட்டி, அக்கருத்து விஷம் என்று உங்கள் நூலில் நீங்கள் குறிப்பிட்டுவிட்டு உண்மையான புறநிலை நோக்குக் கொண்ட வரலாற்றை உங்கள் நூலில் நீங்கள் எழுதி விஷத்திற்கு முறிவு கொடுத்திருக்கலாமே, அதை ஏன் நீங்கள் செய்யவில்லை?

அதைச் செய்ய உங்களால் இயலாது என்பதால்தானே? அதாவது விஷம் பிராமணர்களாகிய உங்கள் உள்ளத்தில் இருப்பதால்தானே? உண்மையான புறநிலை நோக்குக் கொண்ட வரலாற்றை எழுத நீங்கள் முற்பட்டால் அது உங்களுக்கே ஆபத்தாக முடியும் என்பதால், நீங்கள் தமிழக அந்தணர் வரலாறு என்னும் உங்கள் நூலில் புறநிலை நோக்குக் கொண்ட வரலாற்றை எழுத முற்படவில்லை என்பதை உங்களால் மறுக்க இயலுமா?

3. அதனால் "விஷத்தை நீக்குக" என்று எங்களைக் கொலை செய்ய பிராமணர்களை ஏவும் உங்கள் (சங்கரமடத்தின்) கட்டளை அச்சில் புத்தக வடிவில் வெளிவருவதால்,

"உண்மையான புறநிலை நோக்குக் கொண்ட வரலாற்றை எழுதுவதன் மூலம்"

என்று நீங்கள் சேர்த்திருப்பது, உங்கள் சதி வெளிப்பட்டு விடக்கூடாது என்னும் நோக்கில், சதி நிறைந்த மொழியாக இணைக்கப்பட்டுள்ளது என்பதை உங்களால் மறுக்க இயலுமா? இயலாது.

16. இரண்டும் ஒன்றே :

தமிழ்நாடு பிராமணர் சங்கம் வேறு, காஞ்சி சங்கரமடம் வேறு என்று தமிழ்நாடு பிராமணர்களாகிய உங்கள் அமைப்புகள் இரண்டையும் தனிதனியாகப் பிரித்துப் பார்த்தல் இயலாது.

"அருந்தொண்டாற்றிய தமிழக அந்தணர்கள்"

"தமிழக அந்தணர் வரலாறு"

என்னும் இரண்டு நூல்களும், தமிழ்நாடு பிராமணர் சங்கத்திலும் காஞ்சி சங்கர மடத்திலும் தயாரிக்கப்பட்டபோதிலும்

1. ‘அந்தணர்’ பற்றிய ஆய்வில் வேறுபாடு இல்லை. ஒன்றே.

2. இரண்டு நூல்களுக்கும் பிரதம ஆசிரியர் ஒருவரே.

3. இரண்டு நூல்களுக்கும் ஆசிரியர் குழு ஒன்றே.

4. இரண்டு நூல்களையும் உருவாக்கியவர்கள் தமிழ்நாட்டுப் பிராமணர்களே.

17. திராவிட இனத்திற்கு எதிரான சதி :

தமிழ்இனம் என்னும் திராவிட இனத்திற்கு எதிராகச் சதி செய்வதில், சிந்தனையாலும், செயல்பாட்டாலும் இரண்டு அமைப்புகளும், ஒன்றுபட்ட பிராமண அமைப்புகளே என்பதை 1994 முதல் இன்றுவரை, தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர், ஷெட்டியூல்டு வகுப்பினர் சமயச் சிறுபான்மையினர் உரிமைப் பாதுகாப்புப் பேரவை தெளிவாகக் கண்டு அனுபவித்து வருகிறது.

1. தமிழ்இனம் என்னும் திராவிட இனத்திற்கு எதிராக தமிழகப் பிராமணர்களின் கூட்டுச் சதியின் விளைவே “தமிழக அந்தணர் வரலாறு” என்னும் சதிநூல் என்பதும்

2. இந்தச் சதி நூலின் சாரமாக விளங்குபவைகளே, அச்சதி நூலின் மேலட்டையில் அச்சிடப்பட்டுள்ள சதி வாக்கியங்கள் நான்கும் என்பதும்

3. சதிகாரர்களும், கொலைகாரர்களும், கொள்ளையர்களுமாக விளங்குகின்ற தமிழகப் பிராமணர்களாகிய உங்களால் “உண்மையான புறநிலை நோக்குக் கொண்ட வரலாற்றை எழுத இயலாது” என்பதும்

4. அதனால், தமிழகத் அந்தணர் வரலாறு என்னும் சதிநூலின் மேலட்டையில் அச்சிடப்பட்டுள்ள நான்கு வாக்கியங்களின் இறுதியில்

   1. நிறுவுகிறது
   2. நிரூபிக்கிறது
   3. தெரிவிக்கிறது
   4. நிலைநிறுத்துகிறது

   என்று நீங்கள் எங்களோடு வாதிடாமலே எழுதியிருப்பது நியாயமற்றது; அதனால் எங்களோடு வாதிட வாருங்கள் என்று அழைத்தால், சதிகாரர்களாகிய உங்களால் வர இயலாது என்பதும் இப்பொழுது தெளிவாக வெளிப்படும் அடிப்படை உண்மைகள்

என்பதை உங்களால் மறுக்க இயலுமா? இயலாது.

இப்பொழுது தமிழகப் பிராமணர்களாகிய நீங்கள்

1. சதிகாரர்கள் என்பதும்
2. கொலைகாரர்கள் என்பதும்
3. கொள்ளைக்காரர்கள் என்பதும்

உங்களோடு கடிதத் தொடர்பு வைத்ததன் வழி பேரவை நிலைநாட்டியிருக்கும் வரலாற்று உண்மைகளாகும்.

18. பிராமணியமும் பிராமணரும் பிரிக்க முடியாதவை :

தமிழ் இனம் என்னும் திராவிட இனத்திற்கு எதிரான தீய கொள்கையின் பெயர் 'பிராமணீயம்' என்பது. 'நாங்கள் பிராமணர்களை எதிர்க்கவில்லை. பிராமணர்களுடைய கொள்கையாகிய பிராமணீயத்தையே எதிர்க்கின்றோம்' என்று கூறுகின்றவர்களைப் பார்த்து எள்ளி நகையாடுகிறது தமிழக அந்தணர் வரலாறு என்னும் நூல். எவ்வாறு? அதன் 17ஆம் பக்கத்தில் கூறப்பட்டிருப்பது வருமாறு:-

> 'இந்தப் பகுத்தறிவுவாதிகளின் சமீபத்திய காமெடி 'நாங்கள் பிராமணர்களை எதிர்க்கவில்லை. பிராமணியத்தைதான் எதிர்க்கின்றோம்' என்ற பேச்சு. எப்போது நம் சமுதாயத்தையே ஒருவர் எதிர்க்கின்றாரோ அவர்களைத் தேர்தல் வரும்போது அவர்கள் எந்தக் கூட்டணியில் இருந்தாலும் அவர்களைத் தோல்வி அடையச் செய்வது நம் இலட்சியமாக இருக்க வேண்டும்'.

19. பித்தேறும் மூடரே பிராமணர் :

தமிழ் இலக்கியம் கூறும் தமிழர்களாகிய அந்தண்மைப் பண்பையுடைய 'அந்தணர்கள்' நாங்களே என்று பிராமண சாதியினராகிய நீங்கள் உரிமை பாராட்டுகின்றீர்கள். தமிழ் அந்தணர்களைப் பற்றிய திருமூலர் பாடலை இந்த நூலுக்கு ஆசியுரை வழங்கிய காஞ்சி சங்கராச்சாரியார் ஆசியுரையில் பயன்படுத்துகிறார். அதே திருமூலர் பிராமணர்களாகிய உங்களைப் பற்றிக் கூறியிருப்பதை மறைத்து விட்டீர்கள்.

நீங்கள் மறைத்த திருமூலர் திருமந்திரப் பாடல் வருமாறு :-

சத்தியம் இன்றித் தனிஞானம் தான்இன்றி
ஒத்த விடையம் விட்டோரும் உணர்வின்றிப்
பத்தியும் இன்றிப் பரன் உண்மை யின்றிப்
பித்தேறும் மூடர் பிராமணர் தாமன்றே

– (திருமந்திரம் – 81)

இப்பொழுது கூறுங்கள். திருமூலர் கூறியுள்ளபடி நீங்கள் பித்தேறும் மூடர் என்பதை உங்களால் மறுக்க இயலுமா ?

20. பிராமண சதி நூலின் புன்மையும் திராவிட இனத்தின் சிறப்பும் :

திருமூலர் கூறுகின்றபடி பித்தேறும் மூடர்களாகிய நீங்கள் உங்கள் சதிநூலின் புன்மையையும் திராவிட இனத்தின் சிறப்பையும் உணர்ந்து கொள்ளுமாறு

1. தமிழ் மொழி ஒரு தெய்வீக மொழி என்பதும்,
2. தமிழ் இனம் என்னும் திராவிட இனம் ஒரு தெய்வீக இனம் என்பதும்,
3. உலக மதங்கள் அனைத்தும் தமிழ் இனம் என்னும் திராவிட இனத்திலிருந்தே உருவானவை என்பதும்
4. சமஸ்கிருதம், கி.பி. முதல் நூற்றாண்டிற்குப் பின்னர் திராவிட வேதாந்தக் கொள்கையாளர்களால் உருவாக்கப்பட்ட ஒரு செயற்கை மொழி என்பதும்,
5. உங்களால் பாராட்டப்படும் ரிக் முதலிய நான்கு வேதங்களும் கி.பி. முதற் நூற்றாண்டிற்குப் பின்னர் வேதாந்தக் கொள்கையையுடைய திராவிட ஞானிகளால் உருவாக்கப்பட்டவை என்பதும்,
6. ஆரியப் பிராமணர்களாகிய நீங்கள் வெளிநாட்டிலிருந்து படை எடுத்து வந்த அந்நிய வன்முறையாளர்கள் என்பதும்,
7. அத்வைதக் கொள்கையையுடைய பிராமணர்கள் என்னும் பெயரையுடைய ஸ்மார்த்தர்களாகிய நீங்கள், நாத்திகப் பிரிவுகள் ஐந்தில், ஆன்மீக வேடம் பூண்டுள்ள நயவஞ்சக நாத்திகப் பிரிவைச் சேர்ந்தவர்கள் என்பதும்
8. தக்க வரலாற்று ஆதாரங்களுடன், “தமிழர் சமயம் என்னும் திராவிட சமயம்” என்னும் தலைப்பில் நூல் ஒன்று உருவாகிக் கொண்டிருக்கிறது என்பதும்

9. இந்நூலின் கருத்துகள் எங்களுடைய 27.4.2005 நாளிட்ட கடிதத்தில் கூறப்பட்டுள்ளபடி, தமிழ் தொலைக்காட்சியின் வழி வெளியிடப்படும் என்பதும் இதன்வழி உங்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது.

21. தமிழ்நாடு பிராமணர் அமைப்புகளுக்கு ஓர் எச்சரிக்கை :-

சங்கரமடம் சர்வ சக்தி வாய்ந்த மடம் என்றும் சங்கரமடத்தோடு சேர்ந்து எதை வேண்டுமானாலும் எழுதலாம், எதை வேண்டுமானாலும் செய்யலாம் என்ற ஆணவத்தில் உங்களால் சதிமுறையில் உருவாக்கப்பட்ட இரண்டு நூல்களே ஆரியப் பிராமண ஜாதியினரை, திராவிட அந்தண்மைப் பண்பு கொண்ட ஞானிகளாகக் காட்ட எடுத்த சதிமுயற்சிகளாகும்.

நீங்கள் நினைத்தது வேறு; நடந்திருப்பது வேறு. இப்பேரண்டத்தை ஆளும் இறைவனை எதிர்த்து உங்களால் ஒன்றும் செய்ய இயலாது. நீங்கள் அற்ப மனிதர்கள்; தோன்றி மறையக் கூடியவர்கள்.

சங்கர மடத்திற்கு நாங்கள் எழுதிய 12-2-2003, 31-3-2003 ஆகிய நாளிட்ட இரண்டு கடிதங்களையும் இப்பொழுது வாசித்துப் பாருங்கள். சிறப்பாக இரண்டாம் கடிதத்தின் இறுதியிலுள்ள எங்கள் சவாலையும், எங்கள் வேண்டுகோளையும் நின்று, நிதானித்து, தியானத்துடன் வாசியுங்கள். எங்கள் சவாலை எண்ணிப் பார்த்து, எங்கள் வேண்டுகோளுக்குக் காஞ்சி சங்கரமடம் செவி சாய்த்திருக்கமானால்,

"கோபுரத்தின் உச்சிக்கலசமாக இருந்தேனே இன்று சாக்கடையில் விழுந்து கிடக்கின்றேனே" என்று புலம்பும் நிலை உருவாகி இருக்காது. சங்கரராமன் எழுதிய 39 கடிதங்களை நல்ல நோக்கத்தில் எடுத்துக் கொண்டு தம்மைத் திருத்த முற்படாமல் குற்றத்தைச் சுட்டிக் காட்டுகின்றவர்களை விஷமாகக் கருதி, விஷத்தை நீக்க முற்பட்டமையின் விளைவை நீங்கள் பார்க்கின்றீர்கள். அதுமட்டுமன்று உங்களுக்கும் சங்கரமடத்தின் அனுபவத்தில் பங்கு கிடைக்கிறது. சுவைக்கின்றீர்கள்.

எங்கள் கடிதத்தைப் பெற்றுக் கொண்டபின்னர் ஒன்றரை ஆண்டுகள் இடைவெளி இருந்தும் சங்கரமடம் அக்காலத்தைப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. மனம் திருந்தவில்லை. இப்பொழுது நீங்கள் என்ன செய்யப் போகின்றீர்கள். திருந்தப் போகின்றீர்களா? அல்லது சாக்கடைக்குச் செல்லுவதுதான் உங்களுக்கும் பிரியமானதா? எண்ணிப் பாருங்கள்.

திராவிட இனம் குரங்கு இனமா?

திராவிட இனத்திற்கு எதிரான, உங்கள் வருணாசிரமக் கொள்கையை எதிர்ப்பவர்களான இஸ்லாமியர், கிறிஸ்தவர், பொதுவுடைமையாளர் ஆகிய மூன்று பிரிவினரும், உங்கள் நூல் முழுவதும் சதிமொழியில் இழிவுபடுத்தப்பட்டுள்ளனர்.

உங்கள் நூலில் நீங்கள் திராவிட இனத்தை 'வானரங்கள்', அதாவது குரங்குகள் என்று பக்.726இல் எழுதியிருக்கின்றீர்களே, இது உங்கள் ஆணவத்தின் உச்சகட்டம் அல்லவா?

உங்கள் நூலில் நீங்கள் பாராட்டி இருக்கும் சங்கரர், இராமானுசர், மாத்துவர் ஆகிய மூன்று பிராமணர்களும் வெறும் உரையாசிரியர்களே என்பதை நீங்கள் அறிவீர்களா?

யாருடைய நூல்களுக்கு? வேதாந்தக் கொள்கையையுடைய திராவிட ஞானிகளுடைய நூல்களுக்கு என்பது உங்களுக்குத் தெரியாதா? திராவிட ஞானிகள் அனைவரும் குரங்குகளா? திராவிட இனம் உங்களுக்கு குரங்கு இனமாகக் காட்சியளிக்கின்றதா?

ஷெட்யூல்டு மக்கள் கயவர்களா?

பஞ்சமர் என்று உங்களால் முத்திரை குத்தப்பட்ட ஷெட்யூல்டு வகுப்பு மக்களை (பக்.259–261) 'மக்கட்போலி' என்றும் 'கயவர்கள்' என்றும் சதிமொழியில் எழுதியிருக்கின்றீர்களே இது எவ்வளவு கொடுமை. திருவள்ளுவரும், திருமூலரும், சித்தர்களும், பாபாசாகிப் டாக்டர் அம்பேத்காரும், இந்தியக் குடியரசுத் தலைவராயிருந்த திரு. நாராயணன் அவர்களும் கயவர்களா?

உங்களுக்கு அழிவுகாலம் நெருங்கி வருகிறது என்பதை உங்கள் எழுத்துகள் வெளிப்படுத்தவில்லையா? எண்ணிப்பாருங்கள்.

தமிழ்மொழி தனித்து இயங்க வல்ல செம்மொழி என்றும் திராவிட மொழிக் குடும்பம் தமிழ் மொழியிலிருந்து உருவானது என்றும், தமிழ் மொழிக்கும், திராவிட மொழிக் குடும்பத்திற்கும் உள்ள சிறப்பை உலகறியச் செய்த கால்டுவெல்லும், (பக்.192) திராவிட நாகரிகத்தின் தொன்மைச் சிறப்பை, சிந்துவெளி ஆராய்ச்சியின்வழி உலகறியச் செய்த ஹீராசும் (பக்.762) கிறிஸ்தவ மதபோதகர்கள் என்பதற்காக, கிறிஸ்தவர்களையும், கிறிஸ்தவத் திருச்சபையையும், கிறிஸ்தவம் உருவாகக் காரணமான இயேசு கிறிஸ்துவையும் சதிநிறைந்த மொழியில் கொடுமையாக இழிவுபடுத்தி எழுதியிருக்கின்றீர்களே (பக்.650–651) இது எதைக் காட்டுகிறது?

திராவிட மொழி, திராவிட நாகரிகம் முதலியன உலகறியச் செய்யப்பட்ட காரணத்தால், தமிழகத்தில் திராவிட இயக்கங்கள் தோன்றி, திராவிட இன விடுதலைக்குப் பாடுபட்டு வருகின்றன.

அடுத்த உயிரினத்தின் உடலில் ஒட்டிக்கொண்டு அதன் இரத்தத்தை உறிஞ்சிவாழும் ஒட்டுண்ணி வாழ்க்கை முறையையுடைய பிராமணர்களுக்கு அவர்களால் இரத்தம் உறிஞ்சப்படும் திராவிட இனத்திற்கு விடுதலை வேண்டும் என்றால் அது சகிக்க முடியாது என்ற கோணத்தில் திராவிட இயக்கங்களான, திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் அவற்றின் தலைவர்களான திரு. கீ. வீரமணி, கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் பெயர்களைக் குறிப்பிட்டு எழுதி (பக். 17)

"தங்களுடைய தாழ்வு மனப்பான்மையையும்
உழைப்பின்மையையும் சரி செய்து கொள்ள முடியாதவர்கள்"

என்று குறிப்பிட்டிருப்பதுடன் பல இடங்களில் திராவிட இயக்கங்களை இழிவுபடுத்தி எழுதியுள்ளீர்கள். மேலே கூறப்பட்டுள்ள உங்கள் எழுத்துகளின் விளைவு என்ன ஆகும் என்பதை நீங்கள் எண்ணிப் பார்த்தீர்களா ?

"கேடு வரும் பின்னே
மதிகெட்டு வரும் முன்னே"

என்ற பழமொழிப்படி உங்களுக்கு இறைக்கட்டளையால் வரப்போகிற கேடு நெருங்கி விட்டது என்பதையே இவை காட்டுகின்றன.

ஆகவே, சங்கரமடத்திற்கு எங்களால் எழுதப்பட்ட இரண்டாம் கடிதத்தின் இறுதிப் பகுதியை மீண்டும் வாசியுங்கள்.

எச்சரிக்கை

நீங்கள் தமிழ்மொழியையும் திராவிட இனத்தையும் இழிவுபடுத்தி எழுதியுள்ளமைக்காக இக்கடிதம் கிடைத்து 40 நாட்களுக்குள் வருத்தம் தெரிவித்து வரப்போகும் கேட்டிலிருந்து விடுதலையடைய உங்களை எச்சரிக்கின்றோம்.

இப்படிக்கு,
மு. தெய்வநாயகம்

இலக்குவனார் இலக்கியப் பேர
நாள்..................

கடிதம் எண் : 6

பேரவைத்தலைவரின் நான்காம் கடிதம்

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர், ஷெட்யூல்டு வகுப்பினர், சமயச் சிறுபான்மையினர் உரிமைப் பாதுகாப்புப் பேரவை

278, கொன்னூர் நெடுஞ்சாலை, அயன்புரம், சென்னை – 600 023.

☎ : 91-44-2644 9032 Email : dravida@eth.net

Website : http:\\www.geocities.com\dravidian_religion

டாக்டர் மு. **தெய்வநாயகம்**, எம்.ஏ., பிஎச்.டி.,
நிறுவனத் தலைவர் நாள் : 05–07–2005

பெறுநர்

தமிழ்நாடு பிராமணர் சங்கம்
75, சர்.சி.பி. இராமசாமி அய்யர் சாலை,
ஆழ்வார்ப்பேட்டை, சென்னை – 600 018.

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி
ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள்
சங்கரமடம்,
நெ.1, சாலை வீதி, காஞ்சிபுரம் – 631 502.

அன்புடையீர்,

13–6–2005 நாளிட்டு உங்கள் இரு அமைப்புகளுக்கும் பேரவையின் நிறுவனத் தலைவர் என்ற முறையில் எங்களால் உங்களுக்கு அனுப்பப்பட்ட கடிதத்தின் தொடர்ச்சியாக இக்கடிதம் உங்களுக்கு அனுப்பப்படுகிறது.

நீங்கள் வருத்தம் தெரிவிப்பதற்கு வாய்ப்பாக இன்னமும் 20 நாட்கள் இருக்கின்றன.

மனம் திருந்துதல்

மனம் திருந்தி அதன் வெளிப்பாடாக வருத்தம் தெரிவிக்க வேண்டும் என்பதே எங்கள் விருப்பம்.

நீங்கள் 1. மனம் திருந்தி வருத்தம் தெரிவிக்கலாம்

2. மனம் திருந்தாமல் வருத்தம் தெரிவிக்கலாம்

3. மனம் திருந்தாமலும் வருத்தம் தெரிவிக்காமலும் இருக்கலாம்.

எங்களைப் பொறுத்த அளவில் நீங்கள் மனம் திருந்தாமல் செயல்படும் இரண்டும் ஒன்றேயாகும். உங்களுடைய மனம் திருந்துதலே எங்களுக்கு முக்கியம்.

இதைக்குறித்து,

“வருத்தம் தெரிவிக்காவிட்டால் தமிழ்நாடு பிராமணர் அமைப்புகளுக்கு ஓர் எச்சரிக்கை”

என்னும் தலைப்பில் நாங்கள் வெளியிட்டிருக்கும் 2005 ஜூலை திராவிட சமயம் இதழ், இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இதன் கருத்துகளைக் கூர்ந்து நோக்குங்கள். (பின் இணைப்பு – IV)

நெற்றியில் போலி

'மனம் திருந்துதல்' என்பது நீங்கள் எண்ணிப் பார்க்காத, உங்களால் புரிந்து கொள்ள இயலாத, உங்களால் இகழ்ந்து கூறக்கூடிய ஒன்று என்பது, 'தமிழக அந்தணர் வரலாறு' என்னும் உங்கள் நூலின் 651 ஆம் பக்கத்திலுள்ள உங்கள் எழுத்து தெளிவாக வெளிப்படுத்துகிறது.

1. கிறிஸ்துவ முனிவர்கள் 2. அப்போஸ்தலர்கள் 3. தீர்க்கதரிசிகள் இவர்கள் “பாவத்தைப் பயின்றவர்கள்” என்றும் “அடிக்கடி பாவம் இயற்றியவர்கள்” என்றும் “கொடும்பாவிகள்” என்றும் மார்ட்டின் லூத்தர் கூறியதாக நீங்கள் எழுதி இருக்கும் முறை பிராமணர்களாகிய உங்கள் உள்ளங்களின் தன்மையைத் தெளிவாக வெளிப்படுத்துகிறது.

“நீங்கள் பிறக்கும்பொழுதே உங்களைத் தொடர்ந்து வரும் சகசமலமாகிய பாவத்தைப் பயிலும் பாவிகளாகவே தொடர்ந்து நீடித்து வருவதால், உங்கள் வாழ்நாளில் நீங்கள் செய்யும் உங்கள் பாவமும் சேர்ந்து உங்களைக் கொடும்பாவிகளாக்கியுள்ளது என்னும் சைவ சித்தாந்த உண்மையைச் சைவச் சின்னமாகிய திருநீற்றை நெற்றியில் போலியாக அணிந்திருக்கும் சைவ சமயத்திற்கு எதிரான ஸ்மார்த்தர்களாகிய உங்களால் புரிந்து கொள்ள இயலாமல் இருப்பதில் வியப்பொன்றும் இல்லை.

சைவ சமயத்தைச் சேர்ந்த சைவர்களை ஏமாற்றுவதற்காகவே ஸ்மார்த்தர்களாகிய நீங்கள் திருநீற்றை உங்கள் நெற்றியில் அணிந்திருக்கின்றீர்கள் என்னும் வரலாற்று உண்மையை மறுக்கக் கூடிய

நேர்மையான ஸ்மார்த்த அறிஞர் ஒருவரை உங்களால் காட்ட முடியாது என்பதை நீங்களும் அறிவீர்கள், நாங்களும் அறிவோம்.

"பாவம் அறுப்பது நீறு"

என்னும் திருநீற்றுப் பதிகத்தின் பொருள், என்ன என்பதையும்

"வேதத்திலுள்ளது நீறு"

என்று, திருநீற்றுப் பதிகம் கூறும் வேதம் எது என்பதையும் நீங்கள் ஸ்மார்த்தர்களாக நீடிக்கும் வரை உங்களால் ஒருபோதும் அறிந்து கொள்ளல் இயலாது.

கொடும்பாவி

இந்த நிலையில் நீங்கள் ஆன்மீக வேடமிட்டு நடிக்கத்தான் முடியுமே தவிர, உண்மையான ஆன்மீகத்தை உங்களால் உணரவும் இயலாது; மற்றவர்களுக்கு உணர்த்தவும் இயலாது. இதனால்தான் 31–3–2005 அன்று காஞ்சி சங்கரமடத்திற்கு நாங்கள் எழுதிய கடிதத்தின் பிற்பகுதியில்,

> "இந்திய திராவிட மக்களை, சாதி ஏற்றத்தாழ்வுக் கொள்கையால் இழிவுபடுத்தி, சீரழித்து, கொள்ளையடிக்கும் உங்கள் தவறான வழியிலிருந்து சைவ சித்தாந்தம் கூறுகின்றபடி மனம் திருந்தி, இறைவனிடம் மன்னிப்புக் கேட்டு வாழ்வடையுங்கள் என்பதே இப்பொழுது உங்கள் முன் நாங்கள் வைக்கும் வேண்டுகோள் ஆகும். இந்த வேண்டுகோளில் உங்களுக்குச் சந்தேகம் இருந்தால், தோமா வழி திராவிடக் கிறிஸ்தவத்தால் பாராட்டப்படும் திருநீற்றை நெற்றியில் அணிந்திருக்கும் நீங்கள், தோமா வழி திராவிடக் கிறிஸ்தவ இலக்கிய நூலாகிய திருவிளையாடற் புராணத்திலுள்ள 'மாபாதகம் தீர்த்த படலத்தைப்' படிக்கவும்".

என்று எழுதியிருந்தோம்.

சங்கரமடம் எங்கள் வேண்டுகோளை ஏற்றுக் கொள்ளாமையால் ஏற்பட்ட ஆறு பின் விளைவுகள் 2005 ஜூலை திராவிட சமயம் இதழில் தெளிவாகக் குறிக்கப்பட்டுள்ளன. அவை வருமாறு :–

1. சங்கரமடத்தின் காலடியில் கிடந்த பிராமணர்களின் கையிலிருந்து இந்திய ஆட்சி பிடுங்கப்பட்டது.

2. சங்கரமடத்தின் கட்டளைப்படியெல்லாம் செயல்பட்டு வந்த தமிழக அரசுக்கும் சங்கரமடத்துக்கும் மோதல் உருவாக்கப்பட்டது.

3. பிராமணர்களின் தலைமை இடமாகிய சங்கரமடத்தால். பிராமணராகிய சங்கரராமன் கொலை செய்யப்பட்டு. பிராமணப் பெண்மணியாகிய செல்வி ஜெயலலிதாவால் சங்கரமடத்தின் மடாதிபதிகள் உட்பட சங்கரமடத்தின் பொறுப்பாளர்கள் ஆகிய பிராமணர்கள் சிறைக்கு அனுப்பப்பட்டார்கள்.

4. பிராமணர்களின் கட்சியாகிய B.J.P.–யின் தலைவராகிய அத்வானியைக் கொண்டே அக்கட்சி சிதறடிக்கப்பட்டு வருகிறது.

5. தமிழ்நாடு பிராமண அமைப்புகளின் ஆணவத்தை மேலோங்கச் செய்து. திராவிட இனத்திற்கு எதிரான அவர்களின் சதி முழுவதும் திராவிட இனத்தினர் அனைவரும் எளிதில் அறிந்துகொள்ள வாய்ப்பாக "தமிழக அந்தணர் வரலாறு" என்னும் நூலாக. எழுத்து உருவத்தில் வெளியிட வைக்கப்பட்டது.

6. "தமிழ்நாடு பிராமண அமைப்புகளுக்கு ஓர் எச்சரிக்கை. 40 நாட்களுக்குள் வருத்தம் தெரிவிக்க வேண்டும்" என்னும் தலைப்பில் 13–6–2005 அன்று காஞ்சி சங்கரமடத்திற்கும், தமிழ்நாடு பிராமணர் சங்கத்திற்கும் எச்சரிக்கை கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது.

மேலே கூறப்பட்டுள்ள இந்த ஆறு செயல்பாடுகளும் மனிதர்களால். செயல்படுத்தப்படக் கூடியவைகளா? மனிதர்கள் பயன்படுத்தப் பட்டிருக்கின்றார்கள் என்பதில் ஐயம் இல்லை. ஆனால் மனித முயற்சிக்கு மேலான இப்பேரண்டத்தை ஆளும் இறைவனுடைய செயல்பாடு இதில் இருப்பதை இறை உணர்வாளர் எவரும் மறுத்தல் இயலாது.

இப்பொழுது காஞ்சி சங்கரமடத் தலைவர் ஒரு கொடும்பாவி என்பதை அவரும் அறிந்திருக்கின்றார்; உலக மக்களும் அறிந்திருக்கின்றார்கள்.

புனிதர்

இந்த நிலையிலும் கூட அவர் மனம் திருந்தி, ஒரு புனித வாழ்வை மேற்கொண்டு, புனிதராக மாற இயலும் என்பதே, திருவிளையாடற்

புராணம் கூறும் மாபாதகம் தீர்த்த படலத்தின் விளக்கம் ஆகும்.

இத்தகைய மாபாதகத்தையும் நீக்கக்கூடியவனே, சிவபெருமானாகிய முழுமுதற் கடவுள் என்பதை விளக்கிக் காட்டுவதே, திருநீற்றின் உண்மைப் பொருள் ஆகும். இதனால்தான்,

"பாவம் அறுப்பது நீறு"

என்று தேவாரத்திலுள்ள திருநீற்றுப் பதிகம் கூறுகிறது,

இவ்வாறு, பாவம் அறுக்கப்பட்டு, புனிதர் வரிசையில் சேர்க்கப்பட்ட ஏராளமானவர்களில். வால்மீகி முனிவரையும். அருணகிரிநாதரையும் நாம் மறக்க முடியாது.

பாவ வாழ்க்கையை விட்டு மனம் திருந்தி புனிதர்களானவர்களைப் பற்றி பின்னர் வருவோர் எழுதும்போது அவர்களைப் பாவத்தைப் பயின்ற பாதகர்கள், கொடும்பாவிகள் என்று ஒருவர் சிந்திக்கின்றவராகவும் எழுதுகின்றவராகவும் இருந்தால், அவர் தமிழக அந்தணர் வரலாறு என்னும் நூலை உருவாக்கிய ஸ்மார்த்தர்களாகத்தான் இருக்க இயலும்.

திராவிட இன விடுதலை

ஸ்மார்த்தர்களுடைய கொள்கைக்கும். பாவ மன்னிப்புக் கோட்பாட்டிற்கும் எந்தத் தொடர்பும் இல்லை.

அதனால்தான், பிராமணர்களாகிய உங்களின் ஸ்மார்த்த மடமாகிய காஞ்சி சங்கரமடம் அழிந்து கொண்டிருக்கிறது. முற்றிலுமாக அழியப் போகிறது. இதில் உங்களுக்குச் சிறிதும் சந்தேகம் வேண்டாம்.

ஏனெனில், இது இப்பேரண்டத்தை ஆளும் இறைவனுடைய திட்டம். திராவிட இனம் விடுதலை அடையப் போகின்றது. இது 1979 இல் எங்களுக்கு வெளிப்படுத்தப்பட்டது என்பதை, உங்களுக்கு 13–6–2005 அன்று நாங்கள் அனுப்பிய கடிதத்துடன், சங்கர மடத்தில் சதியால் கொலை செய்யப்பட்டவரின் படத்துடன். அவருக்குக் காணிக்கையாகப் படைக்கப்பட்ட. "இந்தியா தோமா வழி திராவிடக் கிறிஸ்தவ நாடே. எவ்வாறு?" என்னும் தலைப்பில் உங்களுக்கு அனுப்பப்பட்ட நூலின் பின்அட்டையின் மேல் அதன் ஆசிரியர் டாக்டர் தெ. தேவகலா குறிப்பிட்டுள்ளார். அது வருமாறு :–

> "இறை பணியாளர்களுக்குக் கடவுளால் கொடுக்கப்படும் கட்டளைகளும் பணிகளும் வெவ்வேறு கோணங்களில் அமைவது இயல்பே. அவ்வகையில் டாக்டர் மு. தெய்வநாயகம் அவர்களுக்குக் கடவுள் கொடுத்த கட்டளை.

இன விடுதலையோடு கூடிய ஆன்மீக விடுதலைப் பணி ஆகும். 1968 இல் ஆன்மீகப் பணிக்கு இவர் கடவுளால் அழைக்கப்பட்டார். 1972இல் 'மதங்களைக் கடந்தவர் கடவுள்' என்னும் இறையனுபவ உண்மை கடவுளால் இவருக்குக் கொடுக்கப்பட்டது. 1979இல் "தமிழ் இனம் என்னும் திராவிட இனத்திற்குப் புத்துயிர் கொடுக்கப் போகின்றேன். இதைச் செயல்படுத்தும் கருவியாக நீ பயன்படுவாய். உடனே இதை எழுதி வைத்துக்கொள்" என்று டாக்டர் தெய்வநாயகத்திடம் கடவுள் தெளிவாகவே தம் திட்டத்தை வெளிப்படுத்தியுள்ளார். திராவிட இன விடுதலை என்பது டாக்டர் தெய்வநாயகம் அவர்களுக்கு அளிக்கப்பட்ட கடவுளின் திட்டவட்டமான வெளிப்பாடு என்பதால், திராவிடர்களின் ஆன்மீக விடுதலைப் பணியில் அவர் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றார். திராவிட இன ஆன்மீக விடுதலைக்கு வழி வகுக்கும் நோக்குடன் ஏராளமான ஆய்வு நூல்களைப் படைத்திருப்பதுடன் பயிற்சி வகுப்புகளும் கருத்தரங்குகளும் இந்து சமய, கிறிஸ்தவ சமய அன்பர்களுக்குத் தொடர்ந்து நடத்தி வருகின்றார்".

திராவிட வேதம்

முன்னர்க் கூறியுள்ளபடி. கொடும்பாவிகளாகிய உங்களைப் புனிதர்களாக மாற்றும் ஆற்றல் பெற்ற திருநீற்றை நெற்றியில் அணிந்திருக்கும் நீங்கள், உங்களால் வெளியிடப்பட்டிருக்கும் 'தமிழக அந்தணர் வரலாறு' என்னும் நூலின் மேலட்டையில் அச்சடிக்கப்பட்டிருக்கும் நான்கு வாக்கியங்களில் ஒன்றாக.

"வேதகால நாகரிகமாகிய பண்டைய பிராமணர் நாகரிகமே, உலகமே புகழும் இந்தியாவின் நாகரிகம் என்று இந்த நூல் நிலைநிறுத்துகிறது".

என்று எழுதியிருக்கின்றீர்கள். நீங்கள் புகழும் உங்கள் வேதத்தில்,

"வேதத்தில் உள்ளது நீறு"

என்பதற்கான விளக்கம் எங்காவது இருக்கின்றதா? இல்லை.

உங்கள் வேதம், வேதாந்தக் கொள்கையையுடைய திராவிட ஞானியாகிய வேதவியாசரால் உருவாக்கப்பட்டது.

வேதம் முந்தியதா? வேதாந்தம் முந்தியதா? உங்கள் வேதத்திற்கு முந்தியது வியாசரின் வேதாந்தக் கொள்கை என்றால், இதன் பொருள் என்ன? திராவிடர்களின் வேதாந்தக் கொள்கைக்கு அடிப்படையான "**திராவிட வேதம்**" ஒன்று இருக்கிறது என்பதை இது வெளிப்படுத்துகிறது அல்லவா? அதனால் நீங்கள் பாராட்டும் உங்கள் வேதத்திற்கு முந்திய வேதம் ஒன்று உண்டு என்பதை உங்களால் மறுக்க இயலாது.

வேதாந்தக் கொள்கையையுடைய திராவிடராகிய வேதவியாசரால், கிறிஸ்துவிற்குப் பிற்பட்ட நூற்றாண்டுகளில் உருவாக்கப்பட்டதே ரிக் முதலிய உங்கள் நான்கு வேதங்கள் ஆகும். இந்த வேதம் கூறும் நாகரிகம், இழிவானது என்பதாலேயே, இந்த வேதத்தைப் புகழும் பிராமணர்களாகிய நீங்கள், வேதம் சிறப்பிக்கும், ஆடு மாடுகளைத் தீயில் சுட்டு, சோமபானம், சுராபானம் ஆகிய மது வகைகளுடன் உண்டு குடிப்பதைக் கைவிட்டு, திராவிடர்களின் வேதாந்தக் கொள்கைக்கு மதம் மாறியுள்ளீர்கள்.

திராவிடர்களின் வேதாந்தக் கொள்கையைப் பின்பற்றும் ஆரியப் பிராமணர்களாகிய நீங்கள், சுட்ட கறியையும் பட்டைச் சாராயத்தையும் உண்டு குடிக்கும் வேதத்தைப் புகழ்வது உலகத்தை ஏமாற்றுவதற்கே ஆகும். இந்தியர்களாகிய திராவிடர்களையும் இந்திய நாகரிகமாகிய திராவிட நாகரிகத்தையும் இழிவுபடுத்துவதற்கே ஆகும்.

'பிராமணர்' எனப்படுபவர் யார்?

1. கி.மு. 6 ஆம் நூற்றாண்டில் இந்தியாவின் மீது படையெடுத்து வந்த பாரசீகர்
2 கி.மு. 4 ஆம் நூற்றாண்டில் இந்தியாவின் மீது படையெடுத்து வந்த கிரேக்கர்
3. கி.மு. 2 ஆம் நூற்றாண்டில் இந்தியாவின் மீது படையெடுத்து வந்த சகர்
4. கி.பி. 1 ஆம் நூற்றாண்டில் இந்தியாவின் மீது படையெடுத்து வந்த குஷானர்

5. கி.பி. 4 ஆம் நூற்றாண்டில் இந்தியாவின் மீது படையெடுத்து வந்த ஹூணர்

ஆகிய 5 பிரிவினருடன் கி.மு. 4 ஆம் நூற்றாண்டிலிருந்து இந்தியாவிற்கு வணிகத்திற்காக வந்த ரோமரையும் சேர்த்து மொத்தம் ஆறு பிரிவினர்க்கும் பொதுவாக ஏற்பட்ட பெயர் 'ஆரியர்' என்பது ஆகும். இந்த ஆறு பிரிவினரும் ஈரான் வழியாக இந்தியாவிற்குள் நுழைந்த காரணத்தால் 'ஈரானியர்' என்று அழைக்கப்பட்ட பெயர் 'ஆரியர்' என்று மருவியுள்ளது. இந்த ஆரியர்களில் ஒரு பகுதியினரே பின்னர் "பிராமணர்" என்று பெயர் பெற்றனர். கி.பி.7 ஆம் நூற்றாண்டில் ராஜஸ்தானிலுள்ள அபு மலையில் அமைக்கப்பட்ட ஆரியக் கூட்டணி ஆரியவர்த்தத்தை உருவாக்கிய பின்னர், பிராமணர், சத்திரியர், வைசியர் என்று ஆரியர்கள் தங்களை மூன்றாக வகுத்துக் கொண்டனர்.

ஓடி ஒளிந்து கொண்டீர்கள்

"உலகமே புகழும் வேத நாகரிகமாகிய பண்டைய பிராமணர் நாகரிகமே இந்திய நாகரிகம்" என்று நீங்கள் எழுதியிருப்பது **ஓர் ஏமாற்று** என்பதை நீங்கள் நன்றாக அறிந்திருப்பதனால் **"வாதிட வாருங்கள்"** என்று உங்களை அழைத்தபோது ஓடி ஒளிந்து கொண்டீர்கள்.

புனிதர்களாகப் புனிதப்படுத்தும் அவதாரம்

இப்படி மற்றவர்களை ஏமாற்றி விட்டு ஓடி ஒளியும் கொடும்பாவிகளாக விளங்குகின்ற உங்களால், புனிதர்களைப் புரிந்து கொள்ள எவ்வாறு இயலும் ? இயலாது. புனிதரையே புரிந்து கொள்ளும் ஆற்றல் இல்லாத உங்களால், புனிதர்களாகப் புனிதப்படுத்தும் அவதாரம் எடுத்த கடவுளின் புனிதத்தைப் புரிந்து கொள்ள இயலாமற் போவதில் வியப்பொன்றும் இல்லை. இதனால், மார்ட்டின் லூத்தருக்கு எதிராக எழுதிய வீனர் (Wiener) என்பவரை மேற்கோள் காட்டி. சைவ சித்தாந்தத்தால்

"இறவா இன்பத்து எமை இருத்தல் வேண்டிப்
பிறவா முதல்வன் பிறந்தான்"

என்று சிறப்பிக்கப்படுபவரைக் கொடுமையாக இழிவுபடுத்தி. பாவமன்னிப்புக் கோட்பாட்டிற்கு எதிரான ஸ்மார்த்தர்களாகிய உங்கள் எழுத்து வெளிப்பட்டுள்ளது. (பக்.651)

சைவ சமயத்தின் பாவமன்னிப்புக் கோட்பாட்டுக்கு எதிரான கொள்கையுடைய ஸ்மார்த்தர்களாகிய நீங்கள், உங்கள் ஸ்மார்த்தக் கொள்கையைக் கைவிட்டு மனம் திருந்தி. புனிதப்பட வேண்டும் என்பதே

இழுக்கை ஏற்படுத்தியது. அதன் பிடியிலிருந்து நம் மக்களை விடுவித்து ஆக வேண்டும். பிரிவினைக் கொள்கை நீக்கப்பட்டு ஆக வேண்டும். ஒற்றுமை உருவாக்கப்பட்டு ஆக வேண்டும். அந்த நல்ல நோக்கம் வெற்றி பெற திராவிட சமய மறுமலர்ச்சி இயக்கம் பாடுபட்டு வருகின்றது.

14.10.'96 அன்று காஞ்சி சங்கரமடத்திற்கு அனுப்பப்பட்டுள்ள கடிதமும் 108 கேள்விகளும் அவற்றின் இணைப்புகளும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

எங்களுடைய நோக்கத்தையும் அந்நோக்கத்தை நிறைவேற்ற நாங்கள் எடுத்துள்ள நடவடிக்கைகளையும் உங்கள் சங்கம் அறிந்து கொள்ளும்படியாகச் சில வெளியீடுகளையும் இணைத்துள்ளோம்.

அவை :-

1. சங்கரமடத்தோடு போராட வேண்டியது ஏன் ? – நூல் ஒன்று.

2 14.4.'96 அன்று காஞ்சி சங்கரமடத்திற்கு அருகில் நடத்தப்பட்ட ஒருநாள் உண்ணாவிரதமாகிய முதல் கட்டப் போராட்டம் பற்றிய வெளியீடுகள்.

3. 14.7.'96 அன்று மயிலை கபாலீசுவரர் கோவிலில் நடத்தப்பட்ட 'பிராமணர் மனம் திருந்தப் பிரார்த்தனை' ஆகிய இரண்டாம் கட்டப் போராட்டம் பற்றிய வெளியீடுகள்.

4. 14.10.'96 அன்று நடைபெறுவதாக இருந்த மூன்றாம் கட்டப் போராட்டம் பற்றிய வெளியீடுகள்.

5. இப்போராட்டங்கள் தொடர்பான செய்திகள் வெளியிடப்பட்டுள்ள. '96 ஜூலை, ஆகஸ்டு, 'திராவிட சமயம்' இதழ்கள் இரண்டு.

6. 'இந்தியாவின் ஆன்மீக விடுதலைப் போர் – சங்கரமடத்திற்கு 108 கேள்விகள்' – என்ற தலைப்பில் எங்களால் வெளியிடப்பட்டுள்ள நூல் ஒன்று.

சங்கரமடத்திற்கு நாங்கள் அனுப்பியுள்ள 108 கேள்விகளில். 108 ஆவது கேள்வியில் நாங்கள் குறிப்பிட்டிருப்பதைப் போன்று,

பிறப்பால் பிராமணப் பரம்பரையில் பிறந்தவர்களிலும். நடுநிலை பிறழாமல் சிந்தித்து நீதிக்காகப் போராடும் நல்லவர்கள் இருக்கின்றார்கள் என்பதையும், இத்தகைய பாராட்டுக்குரிய

நல்லவர்கள் நாளுக்கு நாள் பெருகி வருகின்றனர் என்பதையும் நாங்கள் பார்த்து வருகின்ற காரணத்தால், அத்தகைய நல்லவர்கள் தமிழ்நாடு பிராமணர் சங்கத்திலும் இருப்பார்கள் என்று நாங்கள் உறுதியாக நம்புகின்றோம். இந்த நம்பிக்கையின் காரணமாகவே இக்கடிதத்தை உங்களுக்கு எழுதுகின்றோம்.

எங்களுடைய இந்தக் கடிதத்தையும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள வெளியீடுகளையும், தமிழ்நாடு பிராமணர் சங்கத்தின் பொதுக்குழுவில் வைத்து அதிலுள்ள நல்லவர்களின் கருத்தைக் கேட்டு, ஒரு நல்ல தீர்மானத்தை நிறைவேற்றி சங்கரமடத்திற்கு அனுப்பி, சங்கரமடம் **எங்கள் கோரிக்கையை ஏற்று, நாம் யாவரும் பிரிவினையின்றி ஒருதாய் மக்களாக, அன்புச் சகோதரர்களாக வாழ உதவுமாறு உங்களை அன்புடன் வேண்டுகின்றோம்.**

இந்த நோக்கில் நீங்கள் செயல்படத் தொடங்கியுள்ளமை பற்றிய உங்களுடைய நல்ல பதிலை இக்கடிதம் தங்கள் கையில் கிடைத்து 21 நாட்களுக்குள் எங்களுக்கு அனுப்பி வைக்குமாறு தங்களை வேண்டுகின்றோம்.

இப்படிக்கு
(மு. தெய்வநாயகம்)
நிறுவனர்.

4–11–1996 அன்று எங்களால் எழுதி அனுப்பப்பட்ட கடிதத்தின்படி தமிழ்நாடு பிராமணர் சங்கத்தின் பொதுக்குழுவில் தீர்மானம் எதுவும் நிறைவேற்றப்படவில்லை.

வருத்தம் தெரிவிக்க வேண்டும்

தமிழ் இனம் என்னும் திராவிட இனத்திற்கு எதிராக சதி, கொலை, கொள்ளையில் சங்கரமடத்தின் பின்னணியில் ஈடுபடும் பிராமணர்கள், எதை வேண்டுமானாலும் எழுதலாம் என்ற எண்ணத்தில் எழுதி வெளியிட்டுள்ள நூலே 'தமிழக அந்தணர் வரலாறு' என்னும் சதிநூல் ஆகும்.

இச்சதி நூலை எதிர்த்து நாம் ஆராய்ச்சி வாதத்திற்கு அழைக்கும்பொழுது, பிராமணர்கள் பின்னடைந்து ஓடுவதற்குக் காரணம், சதியை பிராமணர்கள் அறிந்தே செய்துள்ளமையாலேயே ஆகும்.

ஆதலால் தமிழ் இனம் என்னும் திராவிட இனத்திற்கு எதிராகச் சதிநூல் வெளியிட்ட பிராமணர் அமைப்புகள் வருத்தம் தெரிவிக்க

இழுக்கை ஏற்படுத்தியது. அதன் பிடியிலிருந்து நம் மக்களை விடுவித்து ஆக வேண்டும். பிரிவினைக் கொள்கை நீக்கப்பட்டு ஆக வேண்டும். ஒற்றுமை உருவாக்கப்பட்டு ஆக வேண்டும். அந்த நல்ல நோக்கம் வெற்றி பெற திராவிட சமய மறுமலர்ச்சி இயக்கம் பாடுபட்டு வருகின்றது.

14.10.'96 அன்று காஞ்சி சங்கரமடத்திற்கு அனுப்பப்பட்டுள்ள கடிதமும் 108 கேள்விகளும் அவற்றின் இணைப்புகளும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

எங்களுடைய நோக்கத்தையும் அந்நோக்கத்தை நிறைவேற்ற நாங்கள் எடுத்துள்ள நடவடிக்கைகளையும் உங்கள் சங்கம் அறிந்து கொள்ளும்படியாகச் சில வெளியீடுகளையும் இணைத்துள்ளோம்.

அவை :-

1. சங்கரமடத்தோடு போராட வேண்டியது ஏன் ? – நூல் ஒன்று.

2 14.4.'96 அன்று காஞ்சி சங்கரமடத்திற்கு அருகில் நடத்தப்பட்ட ஒருநாள் உண்ணாவிரதமாகிய முதல் கட்டப் போராட்டம் பற்றிய வெளியீடுகள்.

3. 14.7.'96 அன்று மயிலை கபாலீசுவரர் கோவிலில் நடத்தப்பட்ட 'பிராமணர் மனம் திருந்தப் பிரார்த்தனை' ஆகிய இரண்டாம் கட்டப் போராட்டம் பற்றிய வெளியீடுகள்.

4. 14.10.'96 அன்று நடைபெறுவதாக இருந்த மூன்றாம் கட்டப் போராட்டம் பற்றிய வெளியீடுகள்.

5. இப்போராட்டங்கள் தொடர்பான செய்திகள் வெளியிடப்பட்டுள்ள. '96 ஜூலை, ஆகஸ்டு, 'திராவிட சமயம்' இதழ்கள் இரண்டு.

6. 'இந்தியாவின் ஆன்மீக விடுதலைப் போர் – சங்கரமடத்திற்கு 108 கேள்விகள்' – என்ற தலைப்பில் எங்களால் வெளியிடப்பட்டுள்ள நூல் ஒன்று.

சங்கரமடத்திற்கு நாங்கள் அனுப்பியுள்ள 108 கேள்விகளில். 108 ஆவது கேள்வியில் நாங்கள் குறிப்பிட்டிருப்பதைப் போன்று,

பிறப்பால் பிராமணப் பரம்பரையில் பிறந்தவர்களிலும். நடுநிலை பிறழாமல் சிந்தித்து நீதிக்காகப் போராடும் நல்லவர்கள் இருக்கின்றார்கள் என்பதையும், இத்தகைய பாராட்டுக்குரிய

நல்லவர்கள் நாளுக்கு நாள் பெருகி வருகின்றனர் என்பதையும் நாங்கள் பார்த்து வருகின்ற காரணத்தால், அத்தகைய நல்லவர்கள் தமிழ்நாடு பிராமணர் சங்கத்திலும் இருப்பார்கள் என்று நாங்கள் உறுதியாக நம்புகின்றோம். இந்த நம்பிக்கையின் காரணமாகவே இக்கடிதத்தை உங்களுக்கு எழுதுகின்றோம்.

எங்களுடைய இந்தக் கடிதத்தையும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள வெளியீடுகளையும், தமிழ்நாடு பிராமணர் சங்கத்தின் பொதுக்குழுவில் வைத்து அதிலுள்ள நல்லவர்களின் கருத்தைக் கேட்டு, ஒரு நல்ல தீர்மானத்தை நிறைவேற்றி சங்கரமடத்திற்கு அனுப்பி, சங்கரமடம் **எங்கள் கோரிக்கையை ஏற்று, நாம் யாவரும் பிரிவினையின்றி ஒருதாய் மக்களாக, அன்புச் சகோதரர்களாக வாழ உதவுமாறு உங்களை அன்புடன் வேண்டுகின்றோம்.**

இந்த நோக்கில் நீங்கள் செயல்படத் தொடங்கியுள்ளமை பற்றிய உங்களுடைய நல்ல பதிலை இக்கடிதம் தங்கள் கையில் கிடைத்து 21 நாட்களுக்குள் எங்களுக்கு அனுப்பி வைக்குமாறு தங்களை வேண்டுகின்றோம்.

இப்படிக்கு
(மு. தெய்வநாயகம்)
நிறுவனர்.

4–11–1996 அன்று எங்களால் எழுதி அனுப்பப்பட்ட கடிதத்தின்படி தமிழ்நாடு பிராமணர் சங்கத்தின் பொதுக்குழுவில் தீர்மானம் எதுவும் நிறைவேற்றப்படவில்லை.

வருத்தம் தெரிவிக்க வேண்டும்

தமிழ் இனம் என்னும் திராவிட இனத்திற்கு எதிராக சதி, கொலை, கொள்ளையில் சங்கரமடத்தின் பின்னணியில் ஈடுபடும் பிராமணர்கள், எதை வேண்டுமானாலும் எழுதலாம் என்ற எண்ணத்தில் எழுதி வெளியிட்டுள்ள நூலே 'தமிழக அந்தணர் வரலாறு' என்னும் சதிநூல் ஆகும்.

இச்சதி நூலை எதிர்த்து நாம் ஆராய்ச்சி வாதத்திற்கு அழைக்கும்பொழுது, பிராமணர்கள் பின்னடைந்து ஒடுவதற்குக் காரணம், சதியை பிராமணர்கள் அறிந்தே செய்துள்ளமையாலேயே ஆகும்.

ஆதலால் தமிழ் இனம் என்னும் திராவிட இனத்திற்கு எதிராகச் சதிநூல் வெளியிட்ட பிராமணர் அமைப்புகள் வருத்தம் தெரிவிக்க

வேண்டும் என்று எச்சரிக்கை விடுவதைத் தவிர நமக்கு வேறு வழி இல்லை.

பிராமணர்கள் மனம் திருந்தி வருத்தம் தெரிவிக்க வேண்டும் என்பதே நம் எதிர்பார்ப்பு.

தக்க தீர்மானம்

சங்கரமடத்தோடு இணைந்து செயல்பட்ட தமிழ்நாடு பிராமணர் சங்கம் மனம் திருந்த விரும்பாவிட்டால் சங்கரமடத்தின் நிலைக்கு உள்ளாவது இயல்பு.

காஞ்சி சங்கரமடம் அழிந்து கொண்டிருக்கும் இன்றைய நிலையில், அதனுடன் கூட்டுச் சதியில் ஈடுபட்ட தமிழ்நாடு பிராமணர் சங்கத்தின் பொறுப்பு அதிகமாக உள்ளது.

அதனால். தமிழ்நாடு பிராமணர் சங்கம் மனம் திருந்தி அதன் பொதுக்குழுவைக் கூட்டி **"வருத்தம்"** தெரிவிக்கும் தீர்மானத்தை நிறைவேற்றி நமக்குத் தெரிவிக்க வேண்டும்,

பின்விளைவு

இல்லையேல், பேரவையின் பொதுக்குழுத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்தும் நிலையில் அதனால் ஏற்படும் பின் விளைவுகளுக்கு தமிழ்நாடு பிராமணர் சங்கமே பொறுப்பு ஏற்க வேண்டும் என்பதை இதன்வழி உங்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

இறுதியாக, முன்னர் கூறப்பட்டுள்ள 4–11–'96 நாளிட்ட எங்கள் கடிதத்தின் பகுதியை நினைவுபடுத்தி இக்கடிதத்தை நிறைவு செய்கின்றோம்.

"எங்கள் கோரிக்கையை ஏற்று, நாம் யாவரும் பிரிவினையின்றி ஒருதாய் மக்களாக, அன்புச் சகோதரர்களாக வாழ உதவுமாறு உங்களை அன்புடன் வேண்டுகின்றோம்".

இப்படிக்கு
(மு. தெய்வநாயகம்)

குறிப்பு :–

2005 ஜூலை திராவிட சமயம் இதழ் ஒன்று இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. (பின் இணைப்பு – IV)

கடிதம் எண் : 7

பேரவைத் தலைவரின் ஐந்தாம் கடிதம்

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர், ஷெட்யூல்டு வகுப்பினர்,
சமயச் சிறுபான்மையினர் உரிமைப் பாதுகாப்புப் பேரவை
278, கொன்னூர் நெடுஞ்சாலை, அயன்புரம், சென்னை – 600 023.
☎ : 91-44-2644 9032 Email : dravida@eth.net
Website : http:\\www.geocities.com\dravidian_religion

டாக்டர் மு. **தெய்வநாயகம்**, எம்.ஏ., பிஎச்.டி.,
நிறுவனத் தலைவர் நாள் : 06–08–2005

பெறுநர்

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி
ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள்
சங்கரமடம், நெ.1, சாலை வீதி, காஞ்சிபுரம் – 631 502.

தமிழ்நாடு பிராமணர் சங்கம்
75, சர்.சி.பி. இராமசாமி அய்யர் சாலை,
ஆழ்வார்ப்பேட்டை, சென்னை – 600 018.

அன்புடையீர்,

1. உங்கள் இரு அமைப்புகளும், 'தமிழக அந்தணர்' என்னும் ஒரே பொருள் பற்றி இரு நூல்களை வெளியிட்டு, இரண்டாம் நூலின் மேலட்டையில், தமிழ் இனம் என்னும் திராவிட இனத்திற்கு எதிரான கருத்துகளை நிலைநாட்டிவிட்டதாக அறைகூவல் வெளியிட்டிருந்தீர்கள்.

2. உங்கள் அறைகூவலை பேரவை ஏற்றுக் கொண்டது. அதன் நிறுவனத் தலைவர் என்ற முறையில், உங்களை ஆராய்ச்சி விவாதத்திற்கு அழைத்து எங்களுடைய **முதல் கடிதம்** உங்களுக்கு 13–4–2005 அன்று அனுப்பி வைக்கப்பட்டது.

3. உங்கள் இரு அமைப்புகளும் வெளியிட்ட இரண்டு நூல்களுக்கும் பிரதம ஆசிரியராகப் பணியாற்றிய திரு. கே.சி. லட்சுமிநாராயணன் 18–4–2005இல் அனுப்பிய பதில் கடிதத்தின் வழி, ஆராய்ச்சி விவாதத்தை ஏற்றுக் கொண்டமையைப் பாராட்டி எங்கள்

இரண்டாம் கடிதம் உங்களுக்கு 27–4–2005 அன்று அனுப்பி வைக்கப்பட்டது.

4. 6–5–2005இல் உங்கள் பிரதம ஆசிரியர் அனுப்பிய இரண்டாம் பதில் கடிதத்தின் வழி நீங்கள் நேர்மையான ஆராய்ச்சி விவாதத்திலிருந்து பின்னடைந்து, ஓடியமையால் 13–6–2005 அன்று உங்களுக்கு அனுப்பிய எங்கள் **மூன்றாம் கடிதம்** தமிழ் இனம் என்னும் திராவிட இனத்திற்கு எதிரான உங்கள் சதி, கொலை, கொள்ளைகளை ஆதாரங்களுடன் நிரூபித்து, 40 நாட்களுக்குள் நீங்கள் வருத்தம் தெரிவிக்க வேண்டும் என்னும் எச்சரிக்கைக் கடிதமாக அனுப்பி வைக்கப்பட்டது.

5. 13–6–2005 அன்று உங்களுக்கு அனுப்பப்பட்ட எச்சரிக்கைக் கடிதத்தின் தொடர்ச்சிக் கடிதமாக 5–7–2005 அன்று பேரவைத் தலைவரின் **நான்காம் கடிதம்** நீங்கள் வருத்தம் தெரிவிப்பதற்கு வாய்ப்பாக 20 நாட்கள் இருந்தமையைச் சுட்டிக்காட்டி உங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

6. உங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதங்களில் குறிப்பிடப்பட்டிருந்தபடி நீங்கள், வருத்தம் தெரிவிக்க முன்வரவில்லை. அதனால் தமிழ் இனம் என்னும் திராவிட இனத்திற்கு எதிராக, இரண்டு நூல்களை வெளியிட்டு விட்டு, இரண்டாம் நூலின் மேலட்டையில் தமிழ் இனம் என்னும் திராவிட இனத்திற்கு எதிரான அறைகூவலையும் வெளியிட்டுவிட்டு, உங்கள் அறைகூவலைச் சந்திக்க நாங்கள் அழைத்தபோது, கோழைத்தனமாக ஓடி ஒளிந்துவிட்டு, வருத்தம் தெரிவிக்க வேண்டும் என்று நாங்கள் எச்சரித்தபொழுது வருத்தம் தெரிவிக்காமல் இருப்பது, நேர்மையற்ற சதிகாரர்களின் செயலாகும்.

7. தமிழ் இனம் என்னும் திராவிட இனத்திற்கு எதிரான நேர்மையற்ற சதிகாரர்களாகிய உங்கள் மீது, தக்க நடவடிக்கை எடுக்க வேண்டிய கடமை இப்பொழுது எங்களுக்கு ஏற்பட்டுள்ளது.

   அதனால், உலக ஆட்சியாளர் அனைவருக்கும் மேலாக, இப்பேரண்டத்தை ஆளும் ஆட்சியாளனாகிய இறைவனிடம் முறையிட வேண்டிய நிலையில், சதிகாரர்களாகிய உங்கள் மீது தண்டனை வராமல் நீங்கள் தப்பிக் கொள்ளுமாறு, உங்கள் உள்ளம் திருந்த அவனிடம் பிரார்த்தனை செய்ய வேண்டியது எங்கள் கடமையாயிற்று.

8. இவ்வாறு கொடும்பாதகர்களும் மனம் திருந்த பிரார்த்தனை செய்வது, கிறிஸ்தவர்களிடம் இருக்கும் ...க்கமாக இருப்பதால் 30–7–2005 அன்று, உங்களுக்காக

"தமிழ்நாடு பிராமண அமைப்பினர் மனம்திருந்தப் பிரார்த்தனை"

சென்னை, பார்க் டவுன், மெமோரியல் ஹாலில் கிறிஸ்தவர்கள் ஒன்று சேர்க்கப்பட்டு நடத்தப்பட்டது. அப்போது "தமிழ்நாடு பிராமண அமைப்பினர் இயேசு கிறிஸ்துவை இழிவுபடுத்தியது ஏன் ?" என்னும் தலைப்பில் வழங்கப்பட்ட சிறு வெளியீடு ஒன்று இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. (பின்னிணைப்பு – V)

சென்னையில் நடத்தப்பட்ட இந்தப் பிரார்த்தனை தமிழ்நாடு முழுவதும் நடத்தப்பட இருக்கிறது.

9. ஐரோப்பிய வழிக் கிறிஸ்தவர்கள் அனைவரையும் ஒன்றிணைத்துச் செய்யப்படும் இப்பிரார்த்தனை, தோமா வழி திராவிடக் கிறிஸ்தவர்களாகிய சைவ வைணவர்களையும் இணைத்துச் செய்யப்பட ஒழுங்கு செய்யப்பட்டு வருகிறது.

10. இந்த நேரத்தில் ஒன்றை உங்களுக்கு நினைவுபடுத்துவது எங்கள் கடமையாக இருக்கிறது.

தமிழ்இனம் என்னும் திராவிட இனத்திற்கு எதிராக உங்களால் உருவாக்கப்பட்டிருக்கும்

"தமிழக ஆந்தணர் வரலாறு"

என்னும் உங்கள் நூலின், 91ஆம் பக்கத்திலிருந்து 94ஆம் பக்கம் வரை நீங்கள் எழுதியுள்ள உங்கள் எழுத்துகளை உங்களுக்கு நினைவூட்டுகின்றோம்.

"இயேசு கிறிஸ்துவின் மாணவர் பன்னிருவரில் தூய தோமா கி.பி. 52 முதல் 72 வரை இருபது ஆண்டுகள் தமிழகத்தில் நற்செய்திப் பணி ஆற்றி, மயிலாப்பூரில் கொலை செய்யப்பட்டு அடக்கம் பண்ணப்பட்டார் என்பது இந்திய திருச்சபை வரலாற்றின் ஒரு பகுதி.

சைவ, வைணவ சமயங்கள் தூய தோமா வழி தமிழ்க் கிறிஸ்தவக் கிளைகள். ஆகவே சைவ, வைணவ சமயங்களைப் பிராமணர்களின் பிடியிலிருந்து விடுவிக்க வேண்டியது, இந்தியக் கிறிஸ்தவர்களுடைய கடமை ஆகும்". (பக். 92)

"கடவுள் – மனிதனாக வந்த கடவுள் – உலகம் அனைத்திற்குமே கடவுளாக இருப்பதால், மனிதனாக அவதரித்த கடவுளை வரலாற்று நோக்கில் கிறிஸ்துவாகக் கண்டனர் கிறிஸ்தவர். புராண நோக்கில் பிள்ளையாராகக் கண்டனர், தூய தோமா வழி தமிழ்க் கிறிஸ்துவராகிய சைவர்". (பக். 94)

"சங்கர மடங்கள் இந்திய திராவிட மதங்களான பௌத்தம், சமணம், சைவம், வைணவம், சீக்கியம் ஆகிய ஐந்து மதங்களுக்கும் எதிரானவை, இந்திய மக்களுக்கும் எதிரானவை. ஆரிய பிராமணர்களின் நன்மை ஒன்றே அதன் குறிக்கோள். அது ஆரிய பிராமணிய மடமே தவிர, ஆன்மீக மடம் அல்ல". (பக். 94)

என்று "இந்தியா தோமா வழி திராவிடக் கிறிஸ்தவ நாடே" என்னும் தலைப்பில் நாங்கள் கூறியுள்ள கருத்துகளை, உங்கள் நூலில் எழுதி அதற்கு மறுப்பு எழுத இயலாமல் ஒப்பாரி வைத்திருக்கின்றீர்களே ஏன் ? இவை மறுக்க இயலாத வரலாற்று உண்மை என்பதால்தானே. மேலும் இதே பகுதியில் "விஷத்தை நீக்குக" என்ற குறுந்தலைப்பில் நீங்கள் எங்களைக் கொலை செய்ய பிராமணர்களைத் தூண்டியுள்ளமை எங்கள் மூன்றாம் கடிதத்தில் விளக்கப்பட்டுள்ளது.

11. எங்களால் வெளியிடப்பட்டிருந்த

"சங்கராச்சாரியாருக்கு ஒரு சவால்"

என்னும் துண்டு வெளியீட்டில், "இந்தியா ஒரு தோமா வழி திராவிடக் கிறிஸ்தவ நாடு" என்று குறிப்பிட்டிருந்தோம்.

இந்த உண்மையை ஆராயும்படி உங்கள் சார்பாக அறிஞர்களை நியமிக்குமாறு வேண்டி 12-2-2003 அன்று அத்துண்டு வெளியீட்டுடன் உங்களுக்குக் கடிதம் எழுதியிருந்தோம்.

நீங்கள் நேர்மையானவர்களாக இருந்தால், ஒன்று, உண்மையைக் காண உங்கள் சார்பாக அறிஞர்களை நியமித்திருப்பீர்கள். அல்லது "இந்தியா தோமா வழி திராவிடக் கிறிஸ்தவ நாடு" என்னும் உண்மையை ஏற்றுக் கொண்டிருப்பீர்கள்.

நீங்கள் நேர்மையற்ற சதிகாரர்களாக இருப்பதினால், நேர்மையற்ற சதி முறையில்

"தமிழக அந்தணர் வரலாறு"

என்னும் சதி நூலை வெளியிட்டு எங்களைக் கொலை செய்யத் தூண்டியுள்ளீர்கள்.

12. "இந்தியா தோமா வழி திராவிடக் கிறிஸ்தவ நாடே - எவ்வாறு ?"

என்னும் தலைப்பில் எங்களால் 400 பக்க அளவில் வெளியிடப்பட்டிருந்த சுருக்கக் கையேடு, ஒன்று, உங்களுக்கு அனுப்பப்பட்ட எச்சரிக்கைக் கடிதத்துடன் 13-6-2005 அன்று

உங்களுக்கு எங்களால் அனுப்பி வைக்கப்பட்டது. அதை வாங்கி வைத்துக் கொண்டு உண்மை வரலாற்றை முழுமையாக உங்களால் அறிந்து கொள்ள வாய்ப்புக் கிடைத்தமையால், வாய் மூடி மௌனியாகி அமைதியானீர்கள்.

13. உங்களுடைய இந்துத்துவாக் கொள்கையாகிய பிராமணீயத்தின் பிடியிலிருந்து, தோமா வழி திராவிடக் கிறிஸ்தவம் என்னும் இந்து மதமாகிய சைவ வைணவத்தை விடுவிக்க வேண்டிய பணி எங்களுக்கு இருக்கின்றது.

அதனால் தோமா வழி திராவிடக் கிறிஸ்தவத்தின் கிளைகளாகிய சைவ வைணவ மக்களை ஒன்றிணைத்து,

"பிராமண அமைப்பினர் மனம்திருந்தப் பிரார்த்தனை"

முதலில் தமிழகம் முழுவதும் செய்ய ஒழுங்கு செய்து கொண்டிருக்கின்றோம்.

14. இறைவன் எங்களுக்கு வெளிப்படுத்தியிருப்பதற்கு இணங்க, இந்துத்துவமாகிய பிராமணீயப் பிடியிலிருந்து, இந்திய மக்களாகிய திராவிடர்களையும், இந்து மதமாகிய சைவ வைணவத்தையும் விடுவிக்க, இறைவன் திட்டமிட்டுவிட்டமையால், இதுவரை நாங்கள் செய்து வந்துள்ள பிரார்த்தனைக்கு இறைவன் கொடுத்துள்ள பலன் உங்களுக்கு 5–7–2005 அன்று எங்களால் எழுதப்பட்டுள்ள நான்காம் கடிதத்தில் விளக்கப்பட்டுள்ளது. நான்காம் கடிதத்துடன் உங்களுக்கு எங்களால் அனுப்பப்பட்ட 2005 ஜூலை மாத திராவிட சமயம் இதழிலும் விளக்கப்பட்டுள்ளது. அதனால் நீங்கள் மனம் திருந்தி உண்மையை ஏற்றுக் கொண்டு, நீங்கள் செய்துவரும், தமிழ் இனம் என்னும் திராவிட இனத்திற்கு எதிரான சதி, கொலை, கொள்ளை ஆகியவற்றிலிருந்து விடுபடுவது உங்களுக்கு நல்லது. அல்லது உங்கள் செயல்களின் பலன் உங்கள் தலையின்மீது வந்து சேர்வதை எந்த விதத்திலும் உங்களால் தடுத்தல் இயலாது என்பதை, நின்று, நிதானித்து, எண்ணிப் பார்த்து, மனம்திருந்த, உங்களை அன்போடு வேண்டுகின்றோம்.

தமிழ் இனம் என்னும் திராவிட இனத்திற்கு எதிராகச் செயல்பட்டு வரும் **பிராமண அமைப்புகள் அழியப் போவதை யாராலும் தடுத்து நிறுத்தல் இயலாது** என்பதைப் புரிந்து கொண்டு மனம் திருந்த உங்களை மீண்டும் அன்போடு வேண்டுகின்றோம்.

இப்படிக்கு,

(டாக்டர் மு. தெய்வநாயகம்)

III. பின்னிணைப்புகள்

பின்னிணைப்பு – I

(தமிழ்நாடு பிராமணர் சங்கத்துக்கு எழுதப்பபட்ட கடிதம்)

தேதி 7.9.1994

பெறுநர்

திரு. S. பாலசுப்பிரமணியம்,
தலைவர்,
தமிழ்நாடு பிராமணர் சங்கம்,
75, சர்.சி.பி. இராமசாமி அய்யர் சாலை,
ஆழ்வார்பேட்டை, சென்னை – 600 018.

அன்புடையீர்,

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஷெட்யூல்டு வகுப்பினர் சமயச் சிறுபான்மையினர் உரிமைப் பாதுகாப்புப் பேரவைத் தலைவர் என்ற முறையில் தமிழ்நாடு பிராமணர் சங்கத்தைப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

காரணம், தமிழ்நாடு பிராமணர் சங்கம், தன்னுடைய கிளைச்சங்கமான செங்கை எம்.ஜி.ஆர். மாவட்ட பிராமணர் சங்கத்தின் வழியாக விளம்பரம் ஒன்றைத் தமிழ்நாடு பிரமணர் சங்கத்தலைவருடைய புகைப்படத்துடன் 2.9.94 தினத்தந்தி இதழில் வெளியிட்டு எங்கள் பேரவைக்கு உட்பட்ட பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள மீனவ மக்களின் அமைப்பையும் அமைப்புத் தலைவரையும் பாராட்டி வெளியிட்டிருக்கும் விளம்பரத்தைக் கண்ணுற்றேன்.

அவ்விளம்பரத்தில் தனிப்பட்ட திருவாளர்கள் பாலசுப்பிரமணியமோ, நாராயணனோ தனிப்பட்ட திரு. அன்பழகனை அவருடைய பிறந்தநாளுக்காகப் பாராட்டியிருந்தால் அது சாதாரண நிகழ்ச்சியாகும்.

ஆனால் பிராமணர் சங்கம் மீனவர் சங்கத்தைப் பாராட்டி இருக்கும்போது, அதிலும் "எங்களது அன்புச் சகோதரர்" என்று மீனவச் சங்கத் தலைவர் பிராமணச் சங்கத் தலைவரால் பாராட்டப்பட்டிருக்கும் நிலையைப் பார்க்கும்போது அவையின் தலைவர் என்ற முறையில் நான் மகிழ்ச்சி அடையவேண்டியதும் பிராமணர் சங்கத்தைப் பாராட்ட வேண்டியதும் என்னுடைய கடமையாகிறது.

பிராமணர்கள் மீனவ மக்களை "எங்களது அன்புச் சகோதரர்கள்" என்று அரவணைக்கும்போது இந்தியாவிலுள்ள ஆரிய மக்களுக்குத் தலைவரான பிராமணர்கள் ஆரிய திராவிட இன வேறுபாட்டை ஒழித்துவிட்டு,

திராவிட மக்களை எல்லாம் ஒன்றாக அரவணைத்து "இந்திய மக்கள் எல்லோரும் ஒருதாய் மக்கள்; அன்புச் சகோதரர்கள்" என்ற உண்மையை உலகுக்கு அறிவிக்க முன்வந்திருப்பது பற்றி உங்களைப் பாராட்டாமல் நான் இருக்க இயலுமா?

உங்களைப் பாராட்டும் இந்த நேரத்தில் எனக்கு ஏற்பட்ட கடந்தகால அனுபவத்தை நினைத்துப் பார்க்கும்போது என் உள்ளத்தில் ஒரு நெருடல் உறுத்துவதை உங்களுக்குத் தெரிவிக்காமல் என்னால் இருக்க இயலாது.

தமிழ்நாடு பிராமணர் சங்கமும் அம்பேத்கார் மக்கள் இயக்கமும் இணைந்து மைலாப்பூரில் நடத்திய அந்தணர் திராவிடர் இணைப்பு மாநாட்டிற்கு நானும் சென்றிருந்தேன். அங்கு நடந்தவற்றையும் பேசப்பட்டவற்றையும் ஆர்வத்தோடு கவனித்து வந்தேன்.

அம்பேத்கார் மக்கள் இயக்க மாவட்டப் பொறுப்பாளர் ஒருவர், "இனி அந்தணர்களுக்கு எந்தத் துன்பம் வந்தாலும் அது எங்களுக்கு வந்த துன்பமாக நாங்கள் எடுத்துக் கொள்ளுவோம்; அந்தணர்களை யாராவது இழிவுபடுத்தினால் அது ஆதி திராவிடர்களுக்கு வந்த இழிவாக எடுத்துக் கொண்டு செயல்படுவோம்.

அந்தணர்களுடைய குடுமியையோ, அவர்களுடைய பூணூலையோ யாராவது கை வைத்தால் அவர்களுடைய கைகளை நாங்கள் வெட்டுவோம்" என்று வேகமாகப் பேசியபோது அங்கிருந்தவர்கள் யாவரும் பலத்த கரவொலியிட்டு ஆரவாரம் செய்து வரவேற்றனர்.

ஆனால், அடுத்து வந்த அம்பேத்கார் மக்கள் இயக்க மாவட்டப் பொறுப்பாளர் ஒருவர் 'அந்தணர் ஆதித்திராவிட இணைப்பு' முன்பே உருவாகிவிட்ட ஒன்றாகும். அந்தணர் ஆதித்திராவிட இணைப்பை உருவாக்கி, உலகத்திற்கு அந்த இணைப்பை வெளிக்காட்டிய பெருமை பாபா சாகிப் டாக்டர் அம்பேத்காரைச் சாரும். பாபாசாகேப் டாக்டர் அம்பேத்கார் இந்தியாவில் அந்தணர் ஆதிதிராவிடர் இணைப்பின் சின்னமாக விளங்கிக் கொண்டிருக்கிறார். அவரை நாம் பின்பற்றும்பொழுது உண்மையான இணைப்பு உருவாகும். ஆதித் திராவிடராகிய அவர் அந்தணப் பெண்மணியாகிய சவீதா அம்மையாரைத் திருமணம் செய்து'' என்று அவர் பேசிக் கொண்டிருந்தபோது பின்னாலிருந்த பிராமணர்கள் அவருடைய சட்டையைப் பிடித்துத் தரதரவென்று அரங்கத்திற்குள் இழுத்துச் சென்றதை என் கண்களால் காண நேரிட்டது. அதுவரை மகிழ்ச்சியாக நடந்து வந்த நிகழ்ச்சிகள் அதன் பின்னர் சோகமாக மாறின.

நான் வெளியே வந்தபோது சில பிராமணர்கள் கூடி நின்று பிராமணர் சங்கத் தலைவரைத் திட்டிக் கொண்டிருந்ததை நான் கேட்க நேரிட்டது.

“பார்த்தேளா? ‘ஐயரே, பெண் கொடு’ என்று **பறையன்களெல்லாம் நம்மிடத்தில் கேட்கும்படியான நிலையை** இவாள் ஏற்படுத்திட்டாளே” என்று மிகவும் சோகமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

தமிழ்நாடு பிராமணர் சங்கத்தைப் பாராட்டும் நான் அந்த மாநாட்டையும் அங்கு நடந்த நிகழ்ச்சிகளையும் மறந்து விடமுடியுமா? இணைப்பு மாநாடு நடத்தியது எதற்கு? ஆதித்திராவிட மக்களை அடியாட்களாகப் பயன்படுத்துவதற்கு மட்டும்தானா? அன்று ஆதித்திராவிட மக்கள் இன்று மீனவ மக்களா?

மீனவ மக்களுக்கும் சேர்த்துக் கிடைக்க வேண்டிய 69% இட ஒதுக்கீட்டை உறுதிப்படுத்துவதற்கு ‘இந்தியக் குடியரசு தலைவர் கையெழுத்திடக் கூடாது’ என்று மீனவ மக்களுக்கும் கிடைக்க வேண்டிய உரிமையைத் தடுத்து நிறுத்த் பாடுபட்டதுதானே பிராமணர் சங்கம்?

பிராமணர் சங்கத்தின் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளாமல் தள்ளிவிட்டு, குடியரசுத் தலைவர் கையொப்பமிட்ட பின்னர் **தமிழகத்தில் இரண்டரை சதவிகிதம் மட்டுமே உள்ள பிராமணர்களுக்கு 20% இட ஒதுக்கீடு கேட்டதுதானே பிராமணர் சங்கம்?** 7 மடங்கு உரிமையை மீனவர்கள் உட்பட மற்ற ஜாதியினரிடமிருந்து பிடுங்கித்தர வேண்டும் என்று பகிரங்கமாக அறிக்கை விட்டதுதானே பிராமணர் சங்கம்?

திராவிடர்கள் உலகுக்கு வெளிப்படுத்திய முழுமுதல் கடவுளான சிவனை ஏற்றுக் கொள்ளாமல், பிறப்பால் ஏற்றத்தாழ்வு கூறும் ஆரிய வருணாசிரமக் கொள்கையின் ஊற்றுக்கண்ணாக விளங்கும் பிரமனைச் சிறப்பிப்பவர்கள்தாமே பிராமணர்கள். திராவிடர்களின் சமயத்தையும் அடிமைப்படுத்தி திராவிடக் கோவில்களில் திராவிடக் கடவுளின் கருவறையில் மீனவர் உட்பட திராவிடர்கள் எவருமே நுழையத் தகுதியற்ற கீழ்ச்சாதியினர் என்று இன்றுவரை தடுத்துக் கொண்டிருக்கின்றவர்கள்தாமே பிராமணர்கள்?

இப்படிபட்டவர்களின் அமைப்பான பிராமணர் சங்கம் மீனவர்களை “எங்களது அன்புச் சகோதரர்கள்” என்று அரவணைத்துக் கொள்வதற்கு உள்நோக்கம் என்ன? என்று எண்ணிப்பார்க்க வேண்டிய கடமை திராவிடர்களாகிய எங்களைச் சார்ந்ததுதானே.

பிறப்பால் ஏற்றத்தாழ்வு கூறி, திராவிடர்களை இழிவுபடுத்தும் ஆரியப் பிராமண மதத்திற்கு எதிராகப்

“பிறப்பால் எல்லோரும் சமம்”

என்று கூறித் திராவிடர்களைச் சிந்திக்கத் தூண்டும் திராவிட மதங்களையும் திராவிடக் கொள்கைகளையும் திராவிட இயக்கங்களையும் அழிப்பதற்கு ஆரியப் பிராமணர்களுக்கு ஆள்பலம் தேவைப்படுகிறது.

அந்தத் தேவையை நிறைவு செய்வதற்கு, அப்பாவித் திராவிட மக்களைத் திராவிடக் கொள்ளைகளுக்கு எதிராகத் தூண்டிவிட்டு, திராவிடர்களின் விரலை எடுத்து திராவிடர்களின் கண்களையே குத்தும் சூழ்ச்சி அடங்கி இருக்கின்றதோ என்ற ஐயம் எங்களுக்கு ஏற்படுவது நியாயம்தானே ?

அப்படியெல்லாம் சூழ்ச்சி ஒன்றுமில்லை. எங்கள் பழைய தவறான நிலைகளிலிருந்து நாங்கள் மாறக்கூடாதா ? நாங்கள் மனமாற்றம் அடையக் கூடாதா ? மனிதர் யாவரும் சமம் எனக் கூறும் நிலையை நாங்கள் அடையக் கூடாதா ? என்றெல்லாம் எங்களை நோக்கி நீங்கள் கேள்விக் கணைகளைத் தொடுக்கலாம்.

“எங்கள் அன்புச் சகோதரர்” என்று பிராமணர்கள் மீனவர்களை அழைத்து உரிமை பாராட்டுவது உண்மையானது; சூழ்ச்சி ஒன்றும் இல்லாதது என்று நீங்கள் உங்களுடைய உண்மையான மனமாற்றத்தை வெளிப்படுத்த விரும்பினால் நாம் ஒரு உடன்பாட்டுக்கு வரலாம்.

அது என்ன உடன்பாடு ?

“இந்திய மக்கள் எல்லோரும் சமமானவர்கள். இந்தியாவைப் பாழ்படுத்தும் பிரிவினைக் கொள்கையாகிய பிறப்பால் ஏற்றத்தாழ்வு கூறும் ‘பிரமன்’ கொள்கை தவறானது. பிராமணர்களும் மீனவர்கள் உட்பட திராவிடர்கள் எல்லோரும் அன்புச் சகோதரர்கள். சாதி ஏற்றத்தாழ்வு என்பதை ஒழித்து இந்தியாவில் பிறந்த எந்த ஒரு ஆணும் எந்த ஒரு பெண்ணோடும் திருமண உறவு கொள்வதை, பிராமணர் சங்கமும் உரிமைப் பாதுகாப்புப் பேரவையும் முழுமனதுடன் வரவேற்கின்றன. அந்தத் திருமணங்களை முன்னின்று நடத்தவும் திருமண மக்களுக்குச் சமூகப் பாதுகாப்பு அளிக்கவும் முன் வருகின்றோம்.

சாதி ஏற்றத்தாழ்வு என்ற தடுப்புச் சுவரை உடைத்துத் திருமணம் செய்துகொள்ள முன்வருகின்ற மணமக்களுக்கும் மணமக்களின் பிள்ளைகளுக்கும் அரசு வேலைகளில் சிறப்புரிமையைக் கொடுப்பதை நாங்கள் முழுமனதுடன் வரவேற்கின்றோம்.

பிராமணர்கள் பிறப்பால் உயர்ந்தவர்கள் என்றோ மீனவர்கள் உட்பட மற்றவர்கள் யாவரும் பிறப்பால் தாழ்ந்தவர்கள் என்றோ இனி எண்ணப்படுவதை நாங்கள் ஒருபோதும் சகித்துக் கொள்ள மாட்டோம்” என்பதாகும்.

மேற்கண்ட ஒப்பந்ததைச் செய்து கொள்வதற்குப் பேரவை தயாராக உள்ளது. பிராமணர் சங்கம் தயாரா ?

"பிராமண வகுப்பைச் சார்ந்த ஒருவரும் மீனவ வகுப்பைச் சார்ந்த ஒருவரும் திருமணம் செய்து கொள்ள விரும்புகின்றார்கள். அவர்களுடைய விருப்பத்தை, பிராமணர் சங்கமும் உரிமைப் பாதுகாப்புப் பேரவையும் முன்னின்று நிறைவேற்றி அவர்களுடைய சமூகப் பாதுகாப்பைக் கொடுப்பதுதானே நியாயம் ? அதற்குப் பேரவை தயாராக இருக்கிறது. பிராமணர் சங்கம் தயாராக இருக்கிறதா ?" என்ற கேள்வி பிராமணர் சங்கத்தின் முன் பேரவையால் வைக்கப்படுகிறது.

பிராமணர் சங்கத்திலுள்ளவர்களின் பெண்களை மீனவர் சங்கத்திலுள்ளவர்களுக்குத் திருமணம் செய்து கொடுங்கள் என்பது எங்கள் கோரிக்கையன்று. தாங்களாக விரும்பித் திருமணம் செய்து கொள்ள இருக்கும் மணமக்களை வாழ்த்த பிராமண சங்கம் முன்வருகிறதா ? அதாவது பிறப்பால் மீனவர் கீழ்ச் சாதியினர் எனக்கூறி, பிரிவினைக் கொள்கையான 'பிரமன்' கொள்கையைப் பிராமணர் சங்கம் கைவிடத் தயாரா ? என்பதே இப்போது உங்கள் முன் வைக்கப்பட்டிருக்கும் கேள்வியாகும்.

"இது என்ன கேள்வி ? பிறப்பால் மீனவர் உட்பட திராவிடர்களைக் கீழ்ச் சாதியினர் எனக் கூறும் 'பிரமன்' கொள்கையாகிய வருணாசிரம தர்மத்தை நிலைநிறுத்தத் தானே, திராவிடரின் தெய்வமான பிள்ளையாரைப் பயன்படுத்தி 18.9.1994இல் புதுவகையான ஊர்வலம் வைத்திருக்கின்றோம். அந்த ஊர்வலத்திற்குப் பலமான ஆட்களைச் சேர்ப்பதற்குத்தானே மீனவர்களை 'எங்களது அன்புச் சகோதரர்கள்' என்று நாங்கள் சொல்ல வேண்டியதாயிற்று. **பிறப்பால் ஏற்றத்தாழ்வு கூறும் எங்கள் அடிப்படைக் கொள்கையான பிரிவினைக் கொள்கையை நாங்கள் எப்படிக் கைவிட முடியும்''** என்று நீங்கள் நினைத்தீர்களானால் உங்களால் பதில் எழுத இயலாதல்லவா ? உங்கள் சூழ்ச்சி உலகுக்கு வெளிப்பட்டு விடும் அல்லவா ?

உங்கள் பதிலை 14.9.1994க்கு முன்னர் எதிர்பார்க்கின்றோம். மனந்திருந்திய பிராமணர்களை மனமுவந்து வரவேற்கின்றோம்.

உங்கள் அன்புள்ள,
(மு. தெய்வநாயகம்)
தலைவர்.

பின்னிணைப்பு – II

சங்கரமடத்தைச் சேர்ந்த
(திரு. வே. சுகரமணனின் கடிதம்)

அன்புள்ள ஆசிரியருக்கு,

உங்கள் திராவிட சமயம் ஜூலை 1994 இதழைக் கண்டேன். திடுக்குற்றேன். சங்கராச்சாரிய சுவாமிகளைப் பற்றிய உண்மைக்குப் புறம்பான செய்திகளைச் சற்றேனும் ஆராய்ந்து பாராமல் வெளியிட்டுள்ளது என்னைப் போன்ற ஆயிரமாயிரம் உள்ளங்களைப் புண்படுத்தியது. காஞ்சிமடத்துடன் நெருங்கிய தொடர்புள்ளதனாலும் பலமுறை சுவாமிகளை அருகில் சென்று தரிசிக்கும் வாய்ப்பு கிட்டியதனாலும் உங்கள் வினாக்களுக்கு விடை சொல்ல முன் வந்துள்ளேன்.

சுவாமிகளுடைய படத்தை அட்டையில் போட்டதோடு நின்றுவிடாமல் அதில் அவர் ஆசீர்வாதம் செய்யும் வகையில் வெளியிட்டுள்ளது, தங்களின் நல்ல உள்ளத்தைக் காட்டுவதோடு மக்களுக்கு உங்கள் பத்திரிக்கையின் மூலம் சுவாமிகளின் அருளாசி கிடைக்கும் வண்ணம் செய்துள்ளீர். நன்றி.

ஆரியர் யார் ? திராவிடர் யார் ? என்ற கேள்விக்கான விடையை இதுவரை தெளிவாக எவரும் சொல்லவில்லை. மத்திய ஆசியாவிலிருந்து வந்தவர்கள் என ஒரு சாரார் சொல்ல அதை மறுத்து இந்த நாட்டின் பூர்வீகர்கள் என்று ஒரு அறிஞர் குழாம் ஆராய்ச்சி செய்து கட்டுரை வெளியிட்டுள்ளது.

ஆரியர்களின் வருணாசிரம தர்மப்படி பிராமணர்கள், சத்திரியர்கள், வைசியர்கள், சூத்திரர்கள் என்ற நால்வகை உண்டு. நீங்கள் குறிப்பிடும் ஆரியன் பிராமணனெனில் மற்ற பிரிவினர் ஆரியர் இல்லையா ? அவர்களெல்லாம் திராவிடர்களா ? ஏன் இந்த முரண்பாடு.

88% திராவிடர் உள்ளனர் என்ற புள்ளி விவரம் எங்ஙனம் சரியாகும் ? பிராமணர் அல்லாதவர் அனைவரும் திராவிடர் என நிரூபிக்க இயலுமா ? அதற்கு ஏதேனும் ஆதாரங்கள், பிரமாணங்கள் தங்களிடம் உள்ளனவா ?

ஆரியன் என்ற சொல்லே உயர்ந்தவர்களைக் குறிக்கப் பயன்படும் சிறப்புச் சொல் (Adjective). இதற்கான சான்றுகள் எல்லா இலக்கியங்களிலும் விரவிக்கிடக்கின்றன. 'ஆரியராவது, திராவிடராவது'

என்ற பேரறிஞர் நூலைப் பாருங்கள். உண்மை புரியும். ஆரியனைப் பற்றிய விளக்கத்தை நான் வேண்டுமெனில் தனிக் கட்டுரையாகத் தருகின்றேன்.

'திராவிட இந்தியாவை மீட்போம்'

என்ற வாசகம் நகைச்சுவை உணர்வூட்டுவதற்காகச் சொல்லப்பட்டதென்று கருதுகின்றேன். திராவிட இந்தியா ஒன்றுள்ளதா, அப்படியெனில் அதன் எல்லைகள், குடிமக்கள் யாரென்பதை நிரூபிக்க ஆதாரங்கள் உள்ளனவா தங்களிடம்.

தமிழில் திருமணம் செய்வோம் என்பதும் இந்தப் பட்டியலில் சேர்க்கப்பட வேண்டியதுதான். தமிழ் மந்திரம் சொன்னால் தெலுங்கர், மலையாளிகள், கன்னடர், மராட்டியர், குஜராத்திகள், வங்காளி இன்ன பிற மாநிலத்தவருக்கு என்ன மொழியில் சொல்லுவது, தமிழில் சொன்னால் புரியுமா, பொருந்துமா? பொருந்தாது என்பது தெளிவு எனில் 88% திராவிடர் உள்ளனர் என்ற வாதம் உள்ளீடற்றதாகப் புலனாகவில்லையா? ஏன் இந்த முரண்பாடு?

பிரிவினைவாதம் வளர்ப்பவர் சுவாமிகள் என்பதும் ஆதாரமற்ற பழிச்சொல்லே ஆகும். ஓட்டு வாங்க முயற்சிக்கும் அரசியல் போலிகளே பிரிவினை பேசி சுயலாபம் தேட எண்ணுவர். ஜயேந்திர சுவாமிகள் ஜனகல்யாண் இயக்கத்தின் வாயிலாக ஆட்டோரிக்ஷா - ரிக்ஷாகளெல்லாம் வங்கியின் மூலம் இளைஞர்களுக்கு வழங்கி அவர்கள் வாழ்வில் மறுமலர்ச்சியும் புத்துணர்ச்சியும் ஏற்பட வழிவகுத்துள்ளார். இத்துடன் இளைஞர்களுக்கு நாட்டுப்பற்றும் இறைப்பற்றும் பொதுப்பணியில் ஆர்வமும் கொள்ள இந்து திராவிட இளைஞர் இயக்கத்தைத் தோற்றுவித்துள்ளார்.

தமிழின் மீதுள்ள அபிமானத்தால் இந்து தமிழ்க்கவிஞர் மன்றம் நிறுவி தமிழ் வளர்ப்பதோடு புலவர்களையும் கவிஞர்களையும் ஆதரித்து வருகின்றனர் என்பது தங்களுக்குத் தெரியாது போலும்.

இந்து ஆதிதிராவிட இளைஞர் இயக்கத்தின் போஷகரும் சுவாமிகளே. இவ்வியக்கங்கள் தோன்றி, வளர்ந்து, மலர்ந்து சமுதாயப் பணியில் ஈடுபட்டுள்ளதற்கும் காரணம் சுவாமிகள். அனைவரையும் அரவணைத்துச் செல்லவேண்டும் என்னும் பரந்த நோக்கே (Cosmopolitan outlook). சுவாமிகளுக்கு, பிரிவினை என்ற வார்த்தை கூட பிடிக்காது. ஒரு கவிஞர் சொன்னார்;

"ஆதி சங்கர பீடம் –
சாதுக்கள் கூடும் மடம் – அன்று
இன்றோ
சாமான்யரும் அருள் பெறும் இடம்"

ஸ்ரீ மடத்திற்கு வருகின்ற முஸ்லீம்கள், கிருத்தவர்களைக் கேட்டாலே சுவாமிகளின் பரந்த நோக்கைப் பற்றிச் சொல்லுவர்.

பெயரில் தெய்வநாயகத்தை வைத்துள்ளீர்கள், தெய்வக் கலப்பில்லாமல் திராவிட சமயமேது.

வியாபார நோக்கமெனில் சுவாமிகளின் படம் வெளியிட்டதை வரவேற்கிறேன். ஆனால் உண்மையை உணர்ந்து செயல்படுங்கள். திராவிட பாரம்பரியத்திற்கென அறிவும் அனுபவ ஞானமும் நிறைந்த நல்லறிஞர்கள் பலர் உள்ளனர் என்று நீங்களே குறிப்பிட்டுவிட்டு பின், தழுவல் (Alive, April 1994) கட்டுரையை வெளியிடும் வழுவில் போக்கு ஏன் ? தப்பிப்பதா (Escapism). இது மிகுந்த வருத்தத்தை அளிக்கிறது.

மேலும் சுவாமிகளின் மறுபக்கம் பகுதியில் வெளியிட்டுள்ள எல்லா செய்திகளையும் பொய்யென நிரூபிக்க தகுந்த ஆதாரங்கள் என்னிடம் உள்ளன.

பேனாவில் மை நிரப்பி எழுதுங்கள்.
பொய் நிரப்பி எழுத வேண்டாம்.

அன்புடன்,
வே. குகரமணன்,
மாநில அமைப்பாளர்.
இந்து திராவிட இளைஞர் இயக்கம்.

பின்னிணைப்பு – III

(திரு. கி. பாலகங்காதரனின் பதில் கடிதம்)

அன்புள்ள திரு. குகரமணன் அவர்களுக்கு,

'திராவிட சமயம்' ஜூலை மாத இதழில் 'சங்கர மடத்தில் குரு–சீடன் மோதல்' என்ற கட்டுரையை எழுதிய பாலகங்காதரன் மிகுந்த வணக்கத்துடன் எழுதிக் கொள்வது.

'திராவிட சமயம்' பத்திரிகையின் ஆசிரியருக்குத் தாங்கள் எழுதிய கடிதத்தை அவர் என்னிடம் படிக்கக் கொடுத்தார். அவர் சங்கரமடத்துக்கு ஜூலை மாத 'திராவிட சமயம்' இதழையும், ஒரு கடிதத்தையும் ஏற்கனவே பதிவுத் தபாலில் அனுப்பியும் இதுநாள் வரை அங்கிருந்து எந்தப் பதிலும் வரவில்லை. என்றாலும் சங்கரமடத்துடன் நெருங்கிய தொடர்பு உள்ளவரென எழுதிக்கொள்ளும் தங்களிடமிருந்து ஆசிரியருக்குக் கடிதம் வந்துள்ளதைக் காணும்போது சங்கரமடத்து ஸ்வாமிகள் தனக்குப் பதிலாக உங்களை எழுதச் சொல்லியுள்ளாரெனக் கருத வேண்டியுள்ளது. சுவாமிகள் சார்பாகத் தாங்கள் எழுதும்போது எங்கள் ஆசிரியர் சார்பாக நான் எழுதுவது தவறல்ல என்றே கருதுகின்றேன்.

இத்துடன் திராவிட சமயம் ஆகஸ்டு மாத இதழ் அனுப்பியுள்ளோம். அதைப் படித்தீர்களானால் தங்களின் பல ஐயங்கள் நீங்குமென நினைக்கிறேன்.

அன்பரே!

தாங்கள் பிராமணக் குலத்தில் பிறந்தவர் என்றாலும் தாங்கள் ஒரு 'சூத்திர'ப் பெண்ணை மணம் செய்து உங்கள் ஊரில் பெரும் புரட்சியே செய்து இருக்கின்றீர்கள். முதலில் உங்களைத் தலைமுழுகி விட்டதாகக் கூறிய உங்கள் தந்தையார், தங்களுக்கு ஒரு குழந்தை பிறந்ததும் கோபம் தணிந்து உங்களை ஏற்றுக் கொண்டுள்ளார். உங்கள் இருவருக்கும் என் மனமுவந்த பாராட்டுக்கள். என் சகோதரியான தங்கள் மனைவிக்கும் உங்கள் குழந்தைக்கும் என் ஆசீர்வாதங்கள்.

சுவாமிகளுடைய படத்தை அட்டையில் போட்டதோடு நின்று விடாமல் அதில் அவர் ஆசீர்வாதம் செய்யும் வகையில் வெளியிட்டுள்ளது ஆசிரியரின் நல்ல உள்ளத்தைக் காட்டுவதாக நல்ல உள்ளத்தோடு

எழுதிய தங்களுக்கு எங்கள் நன்றி. அதன் மூலம் மக்களுக்குச் சுவாமிகளின் அருளாசி கிடைத்தது என்றால் அருள்பாலித்த சுவாமிகளுக்கும் எங்கள் நன்றி.

சுவாமிகள் இந்து திராவிட இளைஞர் இயக்கத்தைத் தோற்றுவித்துள்ளார் என்பதை உங்கள் கடித வாயிலாகத்தான் அறிந்தேன். அதற்குப் பிராமணரான தங்களை மாநில அமைப்பாளராக அமர்த்தியுள்ள காரணமே தாங்கள் சூத்திர ஜாதிப் பெண்ணை மணம் செய்து கொண்டதால்தான் என்றே கருதுகிறேன். அதேபோல, பிராமண ஜாதிப் பெண்ணை மணம் செய்து கொண்ட 'சூத்திர' ஜாதி இளைஞன் யாராவது கிடைத்தால், அவரை, சுவாமிகள் இந்து ஆரிய இளைஞர் இயக்கத்துக்கு மாநில அமைப்பாளராக நியமிப்பாரென எதிர்பார்ப்பது தவறில்லையே!

"ஆரியர் யார், திராவிடர் யார் ?" என்ற கேள்விக்கான விடையை இதுவரை தெளிவாக எவரும் சொல்லவில்லை என்று தாங்களே எழுதியுள்ளீர்கள். ஆனாலும் இந்து திராவிட இளைஞர் இயக்கத்திற்குத் தாங்கள்தான் மாநில அமைப்பாளர் என்கின்றீர்கள். நான் கேட்கிறேன், இந்து திராவிட இளைஞர் யார் ? உங்கள் கடிதத்தில், 'ஆரியன்' என்ற சொல்லே உயர்ந்தவரைக் குறிக்கப் பயன்படும் சிறப்புச் சொல் என்றும் இதற்கான சான்றுகள் எல்லா இலக்கியங்களிலும் விரவிக் கிடக்கின்றன என்றும் எழுதி இருக்கின்றீர்கள். அவ்வாறானால் 'இந்து ஆரிய இளைஞர்' என்பவர் 'உயர்ந்த இந்து இளைஞர்' என்றும் 'இந்து திராவிட இளைஞர்' என்பவர் 'தாழ்ந்த இந்து இளைஞர்' என்றும் தானே கொள்ள வேண்டும் ? இது உயர்வு, தாழ்வு கற்பிக்கும் மிக மோசமான பிரிவினைவாதம் அல்லவா ? இதற்குத்தான் சுவாமிகள் இந்துக்களில் தாழ்ந்தவர் என்று காட்ட 'இந்து திராவிட இளைஞர் இயக்கம்' என்று தோற்றுவித்தும், இந்துக்களில் மிக மிகத் தாழ்ந்தவர் என்பதைக் குறிக்க 'இந்து ஆதி திராவிடர் இளைஞர் இயக்கம்' என்பதைப் போஷித்தும் வருகிறாரா ?

மேலும் எழுதுகின்றீர்கள் :– "ஆரியர்களின் வர்ணாசிரம தர்மப்படி பிராமணர்கள், சத்திரியர்கள், வைசியர்கள், சூத்திரர்கள் என்று நால்வகை உண்டு. நீங்கள் குறிப்பிடும் ஆரியன் பிராமணனெனில் மற்ற பிரிவினர் ஆரியர் இல்லையா ? அவர்களெல்லாம் திராவிடர்களா ? ஏன் இந்த முரண்பாடு ?" என்றிவ்வாறு கேள்விக்கணைகளாகத் தொகுத்து இருக்கின்றீர்கள். நான் கேட்கிறேன் சூத்திரர்களும் ஆரியர்களே என்பது உண்மையானால், சுவாமிகள் தோற்றுவித்ததும், தாங்கள் மாநில அமைப்பாளராகப் பணியாற்ற வருவதுமான இயக்கம் 'இந்து ஆரிய

இளைஞர் இயக்கம் ' என்றுதானே சொல்லப்பட வேண்டும்? எதற்காக 'இந்து திராவிட இளைஞர் இயக்கம்' என்று சொல்லப்பட்டுள்ளது? ஏன் இந்த முரண்பாடு? இது யாரை ஏமாற்ற? ஆரிய, திராவிட பேதம் இல்லை என்று சொல்வதாலேயே இல்லை என்றாகிவிடுமா?

இந்த இலட்சணத்தில் , 88% திராவிடர் உள்ளனர் என்ற புள்ளிவிவரம் எங்ஙனம் சரியாகும் என்றும், பிராமணர் அல்லாதவர் அனைவரும் திராவிடர் என நிரூபிக்க இயலுமா என்றும், அதற்கு ஏதேனும் ஆதாரங்கள், பிராமணங்கள் தங்களிடம் உள்ளனவா என்றும் கேள்விகளாக அடுக்கிக் கொண்டே போனால் போதுமா? அதே போன்று எழும்பும் எதிர் கேள்விகளுக்கும் தாங்கள் பதில் சொல்ல வேண்டுமல்லவா? நான் கேட்கிறேன் – பிராமணர் அல்லாதவர் அனைவருமே ஆரியர் என நிரூபிக்கத் தங்களால் இயலுமா? அதற்கு ஏதேனும் ஆதாரங்கள் பிரமாணங்கள் தங்களிடம் உள்ளனவா? ஆரியர் – திராவிட இனவாதத்தை நீர்த்துப் போகச் செய்யவும், பிராமண – சூத்திர வர்ண பேதத்தைத் தூக்கி நிறுத்தி, ஜாதி ஏற்றத்தாழ்வை நிலைநாட்டவும் சமீப காலமாகச் செய்யப்பட்டு வரும் சூழ்ச்சியின் தொடர்ச்சிதான் உங்களது வாதம் என்பதை நாங்கள் அறிவோம். இதை அறிய வேண்டியவர்கள் அறிந்தால், அதுதான் அவர்களுக்கு நல்லது!

ஆகஸ்டு மாத 'திராவிட சமயம்' இதழில் 'ஆரிய திராவிடப்போர்' என்ற தலைப்பின் கீழ் 'திராவிட மொழிகளைப் பேசும் திராவிடர்கள்', திராவிட மொழிகளை மறந்த திராவிடர்கள் ஆகிய திராவிட இனத்தைச் சேர்ந்த இந்தியர்கள் (சூத்திரர், பஞ்சமர், மதம் மாறியவர்) இந்தியாவில் 88% இருக்கிறார்கள் என்று ஆதாரங்கள் இல்லாமல் எழுதப்படவில்லை. **திராவிட சமய ஆய்வு இயக்கத்தைச் சார்ந்தவர்கள் ஜாதகம் பார்த்து ஜோஸ்யம் சொல்பவர்கள் அல்லர். இந்தியாவெங்கும் தேடித்தேடிப் போய் கல்வெட்டுகள், செப்பேடுகள், தொல்பொருள்கள் போன்ற வரலாற்று ஆதாரங்களை ஆய்வு செய்து வரலாற்று உண்மைகைளைக் கண்டுபிடித்து எழுதி டாக்டர் பட்டம் பெற்றவர்கள்.** எந்தப் பெரிய சதஸானாலும் தங்களுடைய புதிய கண்டுபிடிப்புகளை நிலைநாட்ட வேண்டும் என்ற பெரும் நம்பிக்கை கொண்ட பேரறிஞர்கள்! அவர்களிடம் தாங்கள், "ஆரியராவது திராவிடராவது என்ற பேரறிஞர் நூலைப் பாருங்கள் உண்மை புரியும்" என்று ஊரும் பேரும் தெரியாத ஒரு பேரறிஞர் பற்றி குறிப்பிட்டுள்ளீர்கள். அது மட்டுமல்ல. "ஆரியனைப் பற்றிய விளக்கத்தை நான் வேண்டுமெனில்

தனிக்கட்டுரையாகத் தருகிறேன்" என்று எழுதுகின்றீர்கள். தாங்கள் எழுதுவதை அசாத்தியத் துணிச்சல் என்பதா? அல்லது அசட்டுத் துணிச்சல் என்பதா? என்றாலும் உங்களது ஏதோ ஓர் அந்தத் துணிச்சலைப் பாராட்டுகின்றேன். பேரும் ஊரும் தெரியாதவரும் உங்கள் பெரும் நம்பிக்கைக்கு உரியவருமான அந்தப் பேரறிஞரின் நூலை அனுப்புங்கள்; உங்கள் கட்டுரையையும் அனுப்புங்கள். அவை நம்பிக்கையின் அடிப்படையில் அல்லாமல், வரலாற்றின் அடிப்படையில் ஆதாரத்துடன் அமைந்து இருக்குமானால், திராவிட சமயம் இதழில் வெளியிடப்பட்டு விவாதிக்கப்படும் என்று உறுதி கூறுகிறேன்.

'திராவிட இந்தியாவை மீட்போம்' என்ற வாசகம் நகைச்சுவை உணர்வு ஊட்டுவதற்காகச் சொல்லப்பட்டதென்று கருதுவதாக எழுதியுள்ளீர்கள். **இது பிராமணருக்கே உரிய கேலியும் கிண்டலும்தானே? திமிரும் அகம்பாவமும் தானே?**

உரிமையுள்ள பெரும்பான்மை திராவிட இன மக்கள், தாங்கள் இழந்து விட்ட உரிமையை மீண்டும் மீட்போம் என்பது தங்களுக்கு நகைச்சுவை உணர்வு ஊட்டுகிறதோ? அப்படியானால், பாகிஸ்தான், பங்களாதேஷ் உள்ளிட்ட 'அகண்ட இந்துஸ்தானத்தை அமைத்தே தீருவோம்' என்று சிறுபான்மை பிராமணர்கள் இராம. கோபாலன் வாயிலாகக் கோஷம் போடுகிறார்களே இது – பெரும்பான்மையினரான எங்களுக்கு என்ன உணர்வினை ஊட்டும் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். **இந்துஸ்தானம் என்பது வர்ணாசிரம தர்மத்தைப் போற்றும் பிராமணஸ்தானம்** என்பது எங்களுக்குப் புரியாமல் இல்லை. முஸ்லீம் எதிர்ப்புணர்ச்சியை உருவாக்கும் நோக்கமே, இன்று இந்தியாவெங்கும் பொங்கி எழும் திராவிட இன உணர்ச்சியை அடக்கவே என்பதும் எங்களுக்கும் புரியாமல் இல்லை. நாங்கள் புரிந்து கொண்டோம் என்பதைப் பிராமணர்கள் புரிந்து கொண்டால் சரி!

அடுத்து, தமிழ் மந்திரம் சொன்னால் பிற மொழியினருக்குப் புரியுமா என்று மேதாவித்தனமாக ஒரு கேள்வி கேட்டு இருக்கின்றீர்கள். என்னமோ இப்போது சமஸ்கிருதத்தில் மந்திரம் சொல்ல எல்லோருக்கும் புரிகிறது என்பது போல அல்லவா இருக்கிறது உங்கள் கேள்வி. கல்யாணத்தில் கருமாதி மந்திரம் சொல்லி மாட்டிக் கொண்ட பிராமணன் வரலாறு தெரியுமா உங்களுக்கு? என்னைப் பொறுத்தவரை கடவுள் வழிபாடும் மந்திரங்களும் அவரவர் தாய் மொழியிலோ அவர்கள் அறிந்த மொழியிலோ இருக்க வேண்டும் என்ற கொள்கை கொண்டவன் நான்.

என்றாலும் பல்வேறு மொழிகள் பேசும் மக்களிடையே ஆன்மீக ஒருமைப்பாட்டுக்காக மந்திரங்கள் ஒரு மொழியில்தான் இருக்க வேண்டும் என்றால், நமது தேசிய கீதம் வங்க மொழியில் இருப்பது போல, மந்திர மொழியும் உங்கள் மொழியாகவே(?) இருக்கட்டும். ஆனால் அம்மொழியை இன, ஜாதி, வர்ண வேறுபாடின்றி எல்லோருமே கற்று அனைவருமே கோயில் அர்ச்சகர்களாக வரவேண்டும். இந்திய தேசிய கீதம் வங்க மொழியில் இருப்பதால், இந்தியாவை வங்காளிகள் மட்டுமே ஆள வேண்டும் என்று கூறினால் எவ்வாறு ஏற்புடையது இல்லையோ அதேபோன்றதுதான் பிராமணர்கள் மட்டுமே அர்ச்சகர்களாக இருக்க வேண்டும் என்பதும்!

தங்கள் கடிதத்தை முடிக்கும்போது 'பேனாவில் மை நிரப்பி எழுதுங்கள். பொய் நிரப்பி எழுத வேண்டாம்' என்று வெகு அழகாகவே முடித்து இருக்கின்றீர்கள். தாங்கள் பேனாவில் மை நிரப்பி, கடிதம் எழுதியது உண்மையானால், பிரிவினைவாதம் வளர்ப்பவர் சுவாமிகள் என்பது ஆதாரமற்ற பழிச் சொல்லேயாகும் என்று தாங்கள் கருதுவது உண்மையானால், இந்து திராவிட இளைஞர் இயக்கம் என்றும் இந்து ஆதிதிராவிட இளைஞர் இயக்கம் என்றும் இரு வேறு திராவிட இயக்கங்களைத் தோற்றுவித்தது பிரிவினைவாதமே அல்ல என்பது உண்மையானால், அவ்வியக்கங்களை நல்ல நோக்கத்தில் தான் சுவாமிகள் தோற்றுவித்துப் போஷகராய் இருக்கின்றார் என்பதும் உண்மையானால் அதே **சுவாமிகள் எந்தவொரு திராவிடச் சிறுவனையாவது ஸ்ரீபீடத்து இளவரசாக அங்கீகரித்து, முறைப்படி ஸ்ரீமடத்தின் பால பெரியவாளாக ஏன் கொண்டு வரக்கூடாது?** பிராமணர் என்பவர் துவிஜர் தானே? அதாவது பல்லைப் போல் பறவையைப் போல் இரு பிறப்பாளர்தானே? **பிறக்கும்போது பிராமணக் குழந்தையும் சூத்திரக் குழந்தைதானே? பூணூல் போடுகிறவரை குழந்தை** இஷ்டமானப்படி உண்ணலாம்; உடுக்கலாம்; உறங்கலாம் என்றால் அது சூத்திர வாழ்க்கைதானே? **உபநயனமான பிறகுதானே பிராமணனாகிறான்?**

பல ஆண்களிடம் உடலுறவு கொண்ட ஜபாலி என்ற பணிப்பெண்ணுக்குப் பிறந்த சத்தியகாமன் தன் தந்தை யாரென அறியமுடியாத நிலையிலும் பிராமணனானான் என்ற கதையை, சாந்தோக்கிய உபநிஷதம் கூறுகிறதே! **பிறப்பால், அறிவால், உடலால், ஜீவனால், சமயச் சடங்குகள் புரிவதால் யாரும் பிராமணன்**

என்றாகிவிட முடியாது என்று வஜ்ர சூசிக உபநிஷதம் கூறுகிறதே! கோட்சேயைப் போன்ற சண்டாளர்களைப் பிராமணர் என்று கூறுவதும் அம்பேத்கர் போன்ற பிராமணர்களைச் சண்டாளர் என்று கருதுவதும் என்ன நியாயம்?

அனைவரையும் அரவணைத்துச் செல்ல வேண்டும் என்ற பரந்த நோக்கு கொண்டவரே சுவாமிகள் என்று உங்கள் கடிதம் கூறுவது உண்மையானால் **பிராமண சங்கம்போல் திகழும் சங்கரமடத்தை இந்து திராவிடர்களுக்கும் பொதுவுடைமை ஆக்குவாரா?** ஒரு **திராவிடச் சிறுவனை மடத்தின் பால பெரியவாளாக ஏற்றுக் கொள்வாரா?**

அன்பரே!

உங்கள் கடிதத்தில், "ஆதி சங்கரமடம் சாதுக்கள் கூடும் மடம் அன்று; இன்றோ சாமான்யரும் அருள் பெறும் இடம் என்று ஒரு கவிஞர் சொன்னதாகக் குறிப்பிட்டு இருக்கின்றீர்கள். 'மடத்திற்கு வருகின்ற முஸ்லீம்கள், கிருத்துவர்களைக் கேட்டாலே சுவாமிகளின் பரந்த நோக்கைப் பற்றிச் சொல்லுவார்' என்று பெருமிதத்துடன் எழுதுகின்றீர்கள். இதில் சுவாமிகளின் பரந்த நோக்கு இருக்கிறதோ இல்லையோ. மடத்துக்கு வருகிற முஸ்லீம்கள், கிருத்துவர்களின் பரந்த நோக்கு வெகு நன்றாகவே புரிகிறது. சுவாமிகளுக்கும் அதே போன்ற பரந்த நோக்கு இருக்கின்றது என்பதை என் போன்றோர் ஏற்றுக் கொள்ள வேண்டுமானால் சுவாமிகள் மசூதிக்கும், சர்ச்சுக்கும் ஒரு சாமான்யராகச் சென்று, அங்குள்ள முல்லா, பாதிரிகளிடம் அருள்பெற வேண்டும். அல்லது முஸ்லீம் கிருத்துவப் பெரியார்களைத் தேடிச் சென்று அவர்களிடம் ஆசிர்வாதம் பெறவேண்டும். பெறுவாரா? அல்லது நாங்கள் ஆசீர்வாதம் தரவேண்டியவர்கள், பெறவேண்டியவர்கள் கிடையாது என்று கூறுவாரா?

ஆதிசங்கரரின் வாழ்க்கையில் நடந்ததாகக் கூறப்படும் ஒரு நிகழ்ச்சி என் நினைவுக்கு வருகிறது. ஆதிசங்கரர் நடந்து வரும்போது எதிரே ஒரு சண்டாளன் அவரை நெருங்கி வந்து கொண்டிருந்தானாம். அவன் அவர் அருகே வர, "என்கிட்டே வராதே, அப்பாலே போ சண்டாளனே" என்று ஆதிசங்கரர் கூறினாராம். அதற்கு அச்சண்டாளன், "யாரை அப்பால் போகச் சொல்கிறீர்? என் உடலையா? என் ஜீவனையா?" என்று அமைதியுடன் கேட்க, ஆதிசங்கரருக்கு ஞானம் வந்ததாம், அகந்தை அழிந்ததாம், அவர் அச்சண்டாளனைக் கைகூப்பித் தொழ, சண்டாளன் சிவனாகக் காட்சி தந்தாராம்! கையில் பிடித்திருந்த நான்கு நாய்களும்

நான்கு வேதங்களாக மாறினவாம்! அன்று சண்டாளனாகக் காட்சி தந்த சிவன், இன்று ஒரு முஸ்லீமாக, ஒரு கிருத்துவனாகக் கூட காட்சி தரலாம் அல்லவா?

ஆதிசங்கரரின் அகந்தையை அழித்த, ஞானத்தைத் தந்த சிவன் திராவிடக் கடவுள் அல்லவா? அக்கடவுளை ஆரியக் கடவுளாக மாற்றத்தானே, "சிவனின் அவதாரமாக ஆதிசங்கரர் ஒருவரைத்தான் புராணங்களும், சரித்திரங்களும் கூறுகின்றன" என்று பொறுப்புமிக்க ஒரு பெரியவர் எழுதியுள்ளார். இது புராணத்தில் செருகிய புளுகு அல்லவா? சரித்திரத்தில் விட்ட சரடு அல்லவா? இது போன்ற ஒரு புளுகுதானே –ஒரு சரடுதானே – திராவிட இன உணர்வு அடங்கிவிடாது. **உண்மையான திராவிட இனம் விடுதலை அடையும்வரை, திராவிட இன உணர்வு மங்காது! உறங்காது! ஓயாது!**

எண்ணத்தால் அடிமைப்பட்டிருக்கும் எங்கள் இன மக்களை ஒன்றுபடுத்தி அனைவரையும் இன விடுதலைப் போராட்டக்களத்தில் நிறுத்துவதே எங்களது தலையாயப் பணியாகும்.

'திராவிட சமயம்' இதழில் எழுதியவை ஆதாரமற்றதென்றோ, பழிச்சொல் என்றோ நீங்கள் கருதுவீர்களானால், அதேபோல சுவாமிகளும் கருதுவாரானால், அவரையோ அல்லது அவரைச் சார்ந்த பண்டிதர்களையோ தகுந்த ஆதாரத்துடன் மறுப்பு எழுதச் சொல்லுங்கள். அதை அப்படியே திராவிட சமயத்தில் வெளியிட்டு பயனுள்ள ஒரு விவாதத்தைத் துவக்கி வைப்போம். அதற்கு, திராவிட சமய ஆய்வு இயக்கம் ஆயத்தமாக இருக்கிறது. சங்கரமடம் ஆயத்தம்தானா என்று கேட்டு எழுதுங்கள். எதுவாயினும் தங்கள் அன்பான பதிலை எதிர்நோக்குகின்றேன்.

உங்கள் கடிதத்தில் தாங்கள் எழுதி இருந்த அழகான ஒரு வாசகத்தை உங்கள் அன்பான அனுமதியுடன் பயன்படுத்த விரும்புகிறேன்.

பேனாவில் மை நிரப்பி எழுதுங்கள்,
பொய் நிரப்பி எழுத வேண்டாம்.

உறவு கலந்த அன்புடன்,
கி. பாலகங்காதரன்.

பின்னிணைப்பு – IV

(ஜூலை 2005 திராவிட சமயத்தின் பகுதிகள்)

வருத்தம் தெரிவிக்காவிட்டால். . . .

தமிழ்நாடு பிராமணர் அமைப்புகளுக்கு ஓர் எச்சரிக்கை!

40 நாட்களுக்குள் வருத்தம் தெரிவிக்க வேண்டும் என்று காஞ்சி சங்கரமடத்திற்கும், தமிழ்நாடு பிராமணர் சங்கத்திற்கும் 13–6–2005 அன்று பேரவை சார்பாகக் கடிதம் எழுதியிருந்தோம்.

எதற்காக ? தமிழ் இனம் என்னும் திராவிட இனத்திற்கு எதிராக எழுதியுள்ளமைக்காக;

இந்த இரு அமைப்புகளும் வருத்தம் தெரிவிக்கவும் செய்யலாம். வருத்தம் தெரிவிக்காமலும் இருக்கலாம்.

வருத்தம் தெரிவித்தாலும், மனம் திருந்தியும் வருத்தம் தெரிவிக்கலாம். மனம் திருந்தாமலும் வருத்தம் தெரிவிக்கலாம்.

வருத்தம் தெரிவித்தால் அது நமக்குக் கிடைத்த வெற்றியாகக் காணப்பட்டபோதிலும் மனம் திருந்தாமல் கேட்ட 'வருத்தம்' உண்மையான வெற்றியாக இருக்காது.

"இந்தத் தடவை எழுதியதில் மாட்டிக் கொண்டோம். இனி மாட்டிக் கொள்ளாமல் எழுதுவது எவ்வாறு ?" என்ற நோக்கிலேயே அவர்களுடைய சிந்தனை செல்வது இயல்பு.

இந்த இயல்பின்படி அவர்கள் மனக்கடினம் கொண்டு, மேலும் மேலும் தவறு செய்வதையே நாடிச் செல்லுவர். இதன் விளைவு இரு சாராருக்கும் துன்பத்தையே கொடுக்கும்.

இதனால் நம்மைப் பொறுத்த அளவில் 40 நாட்களுக்குள் 'வருத்தம்' தெரிவிக்காமல் இருப்பதும், மனம் திருந்தாமல் வருத்தம் தெரிவிப்பதும் ஒன்றேயாகும். இரண்டு நிலைகளும் பின்விளைவுகளை ஏற்படுத்தும்.

அதனால் பிராமணர் மனம் திருந்துதலே நமக்கு முதன்மையானது ஆகும்.

மனம் திருந்தாவிட்டால் என்ன நடக்கும்?

பிராமணர்களுடைய வாழ்க்கை முறை, மன்னர் ஆட்சி நடைபெறும் நாட்டிலோ, சர்வாதிகாரி ஆட்சி நடைபெறும் நாட்டிலோ எளிதாக இருக்கும்.

மன்னரையோ, சர்வாதிகாரியையோ, கைக்குள் போட்டுக் கொண்டு, பொது மக்களை ஆட்டிப் படைக்கலாம்.

மக்களாட்சி நடைபெறும் நாட்டில் பிராமணர்களுடைய வாழ்க்கை முறை, மக்கள் விழிப்புணர்வு பெறும் வரை எளிதாக நடைபெறும்.

ஆனால் பொதுமக்கள் விழிப்புணர்வு பெற்றுள்ள மக்களாட்சி நாட்டில், பிராமணர்களுடைய வாழ்க்கை முறை செல்லுபடி ஆகாது.

பிராமணர்கள், தங்கள் வாழ்க்கை முறையைக் கைவிட்டுத் திருந்த வேண்டும். அல்லது மக்களால் திருத்தப்படுவார்கள்.

திருந்துவது அவர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தாது. ஆனால் திருத்தப்படுவது பிராமணர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும்.

அப்படியானால் பிராமணர்கள் பாதிக்கப் படுவதை விரும்பாதவர்கள் செய்ய வேண்டியது என்ன ?

பிராமணர்கள் மனம் திருந்த அந்த நோக்கில் செயல்பட வேண்டும்.

எவ்வாறு செயல்படுவது ?

நேரடியாக பிராமணர்கள் புரிந்து ஏற்றுக்கொள்ளும் முறையில் எடுத்துக் கூறினால் திருந்தி விடுவார்களா ?

தாங்கள் செய்வது தவறு என்று தெரியாமல் செய்கிறவர்கள், தங்கள் உள்ளத்தில் தீமை இல்லாத காரணத்தால் தவறைப் புரிந்து கொண்டால், திருந்தி விடுவார்கள்.

ஆனால், வேண்டுமென்றே திட்டமிட்டுத் தீமை செய்கின்றவர்கள், தங்கள் தவறை உணரவும் முடியாது; திருந்தவும் முடியாது.

இப்படிப்பட்டவர்களை மனிதர்களால் உணர்த்தவும் முடியாது; திருத்தவும் முடியாது.

அப்படியானால் அவர்கள் அழிவை நோக்கிப் போய்த்தான் ஆவார்களா ? அழிக்கப்பட்டுப் போய்விடுவார்களா ?

மனிதர் முயற்சி தோல்வி அடையும் இடத்தில் கடவுளின் முயற்சி தொடங்குகிறது. இதைத்தான் பாரதியாரின் கண்ணன் பாட்டு உலகுக்கு உணர்த்துகிறது.

பிராமணர்களின் சதிவேலை :

இந்தியாவில் பிராமணர்கள் மிகமிகச் சிறுபான்மையினர். இதனால் பிராமணர்கள் வன்முறையைக் கருவியாகப் பயன்படுத்தினால், பெரும்பான்மையான இந்தியர்கள் இவர்களை மிக எளிதில் அழித்து விடுவார்கள். சிறுபான்மையினரின் வன்முறையைப் பெரும்பான்மையினரின் வன்முறை அழித்துவிடும். இதனால் பிராமணர்கள் நேரடி வன்முறையில் ஈடுபடல் இயலாது. எனவே, பெரும்பான்மை மக்களாகிய திராவிட இந்தியர்களை பல ஜாதிகளாக உடைத்து, திராவிடர்களில் ஜாதி மோதல்களை உருவாக்கி, திராவிடர்களின் விரலை எடுத்தே திராவிடர்களின் கண்களைக் குத்தும் சதிவேலையில் ஈடுபட்டு, பெரும்பான்மையினரான திராவிடர்களை மிகமிகச் சிறுபான்மையினரான பிராமணர்கள் அடிமைப்படுத்தியுள்ளனர்.

ஜாதிப் பிரிவுகளைத் தாண்டி, திராவிடர்கள் ஒன்றிணைந்துவிடாதவாறு, ஜாதி ஏற்றத்தாழ்வுக் கொள்கைக்கு, ஆன்மீக முலாம் பூசி, அதை திராவிடர்களின் மத நம்பிக்கைக்கு உள்ளாக்கி, திராவிடர்களின் மதத் தலைமை இடத்தில் பிராமணர்கள் அமர்ந்துள்ளனர்.

இந்துத்துவா - இந்துமதம் :

'இந்துத்துவா' – என்பது 'இந்தியப் பிராமணர்களின் வாழ்க்கை முறை'.

அதாவது, இந்தியப் பிராமணர்களின் ஜாதி ஏற்றத்தாழ்வுக் கொள்கையாகிய வாழ்க்கை முறை.

இதன் மறுபெயர்களே, பிராமணீயம், வருணாசிரமம், சனாதனம், மனுதர்மம் முதலியன ஆகும்.

'இந்துத்துவா' ஆகிய பிராமணீயத்திற்கு உட்படுத்தப்பட்டிருப்பதே இந்து மதம் ஆகும்.

சைவ மதம், வைணவ மதம் ஆகிய இரண்டு மதங்களுக்கும், ஆங்கிலேயர் காலத்தில் உருவான ஒரு பொதுப்பெயரே 'இந்துமதம்' என்பது ஆகும்.

'இந்துமதம்' – என்னும் சைவமும் வைணவமும், வேதாந்தக் கொள்கையுடைய திராவிட இனத்தவரால், தமிழ்நாட்டில் தோன்றிய பக்தி இயக்கத்தால் வளர்க்கப்பட்டு, பின்னர் இந்தியா முழுவதும் பரப்பப்பட்டது. தமிழ்நாட்டில் உருவான பக்தி இயக்கத்தால் வளர்க்கப்பட்ட 'இந்துமதம்' என்பதில் அடங்கும் சைவமும் வைணவமும் கி.பி. 9 ஆம் நூற்றாண்டிலிருந்து, தமிழ்நாட்டில் வாழ்ந்த ஆரியப் பிராமணர்களின்,

வருணாசிரமக் கொள்கையாகிய இந்துத்துவாவுக்கு அடிமைப்படுத்தப்பட்டது.

இன்று நாம் காணும் 'இந்துமதம்' என்பது பிராமணர்களின் 'இந்துத்துவா'க் கொள்கையாகிய ஜாதி ஏற்றத்தாழ்வுக் கொள்கைக்கு அடிமைப்பட்டுக் கிடக்கிறது. தமிழர்களாகிய திராவிடர்களின் சமயமாகிய இந்துமதம், பிராமணர்களின் இந்துத்துவாவாகிய ஜாதி ஏற்றத்தாழ்வுக் கொள்கைக்கு அடிமைப்பட்டுக் கிடப்பதால், இந்துமதத்தின் பெயரால் திராவிட இனத்தினர், ஆரியப் பிராமணர்களிடம் அடிமை வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

இரண்டு வழிகள் :

அடிமை வாழ்விலிருந்து திராவிட இனத்தவர்களை விடுவிக்க 20ஆம் நூற்றாண்டில் இருபெரும் தலைவர்கள் இருவேறு வழிகளைப் பயன்படுத்தினர்.

1. டாக்டர் அம்பேத்காரின் 'மதம் மாறுதல்' – என்னும் வழி :

"இந்துமதம் என்னைப் பிறப்பால் இழிவுபடுத்துகிறது. நான் விரும்பி இந்துமதத்தில் பிறக்கவில்லை. ஆனால் இறக்கும்பொழுது இந்து மதத்தைச் சேர்ந்தவனாக இறக்க மாட்டேன்" என்ற சபதத்தை மேற்கொண்டார் பாபாசாகேப் டாக்டர் அம்பேத்கார். அவர் எடுத்த சபதத்தின்படியே அவர், இறக்கும் முன்னர் இந்து மதத்திலிருந்து பௌத்த மதத்திற்கு மதம் மாறினார். அவரோடு பல லட்சம் பேர் மதம் மாறினர்.

ஆகவே, திராவிட இனத்தினரின் இழிவைத் துடைப்பதற்கு "மதம் மாறுதல்" என்னும் வழியை டாக்டர் அம்பேத்கார் பயன்படுத்தினார்.

2. தந்தை பெரியாரின் "கடவுள் மறுப்பு" – என்னும் வழி:

பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார், திராவிட இனத்தினரின் அடிமைத்தளையை அகற்ற 'கடவுள் மறுப்பு' என்னும் கருவியைப் பயன்படுத்தினார். கடவுள் நம்பிக்கை திராவிட இனத்தவரை ஆரியப் பிராமணர்களுக்கு அடிமைப்படுத்தி வருகிற காரணத்தால், கடவுள் நம்பிக்கையிலிருந்து திராவிட இனத்தினர் விடுபட்டால், ஆரியப் பிராமண அடிமைத் தளையிலிருந்து விடுதலை அடைந்துவிடலாம் என்பது தந்தை பெரியாரின் கொள்கை.

வேறுபாடு வெளிப்படவில்லை :

டாக்டர் அம்பேத்கார், தந்தை பெரியார் ஆகிய இப்பெரியவர்கள் இருவரும் வாழ்ந்த காலத்தில் 'இந்துத்துவா' (Hinduism) என்பதற்கும் 'இந்துமதம்' (Hindu Religion) என்பதற்கும் உள்ள வேறுபாடு வெளிக்கொண்டு வரப்படவில்லை.

'இந்துத்துவா' – என்பது ஆரியப் பிராமணர்களின் வாழ்க்கை முறை என்பதும்,

'இந்துமதம்' – என்பது திராவிடர்களின் வேதாந்தக் கொள்கையை அடிப்படையாகக் கொண்ட சைவ வைணவ மதங்களின் பொதுப் பெயர் என்பதும் வெளிப்படவில்லை.

புதிய ஆராய்ச்சி உண்மைகள் :

அப்பெரியவர்கள் இருவரும் வாழ்ந்த காலத்திற்குப் பின்னர் நாம் வாழுகின்ற காரணத்தால், அவர்கள் காலத்திற்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டுள்ள புதிய ஆராய்ச்சி உண்மைகள் நமக்குப் பயன்படுகின்றன. அதனால், திராவிட இன விடுதலைக்கு அவர்கள் காட்டியுள்ள மதம் மாறுதல், கடவுள் மறுப்பு ஆகிய இருவழிகளுடன், மூன்றாவது வழியையும் நாம் எண்ணிப்பார்க்கலாம்.

மூன்றாவது வழி என்ன?

'இந்து மதம்' என்று கூறப்படுகின்ற சைவமும் வைணவமும் திராவிடர்களாகிய நமக்குச் சொந்தமான நம்முடைய மதங்கள் என்னும் வரலாற்று உண்மையை நாம் அறிந்து கொள்ளும் வாய்ப்பு நமக்குக் கிடைத்துள்ளது. இதனால், நம்முடைய சொந்த மதமாகிய இந்துமதத்தை, ஆரியப் பிராமணர்களின் இந்துத்துவாவாகிய சாதி ஏற்றத்தாழ்வுக் கொள்கையின் பிடியிலிருந்து விடுவிக்க வேண்டிய கடமை நமக்கு ஏற்பட்டுள்ளது.

இந்து மதத்தை விடுவிக்கும் பணி :

அதனால் ஆரியப் பிராமணர்களின் இந்துத்துவாவின் பிடியிலிருந்து, திராவிட மதங்களாகிய சைவத்தையும் வைணவத்தையும் அடக்கியுள்ள இந்துமதத்தை விடுவிக்கும் பணியில் ஈடுபட வேண்டிய கடமை திராவிட இனத்தில் பிறந்துள்ள ஒவ்வொரு திராவிடருக்கும் உரிய பிறவிக் கடமை என்பதை உணர்த்த வேண்டிய பொறுப்பு நமக்கு ஏற்பட்டுள்ளது.

இதற்காக முழு அளவில் பாடுபடக் கூடிய

"இந்து மத விடுதலை முன்னணி"

என்னும் அமைப்பை உருவாக்கி இந்துமத விடுதலைக்குப் பாடுபடலாம்.

மத விடுதலை :

'மத விடுதலை' என்று இறங்கும் பொழுது அந்த மதத்தால் சுட்டிக் காட்டப்படும் கடவுள் கொள்கையை நாம் மதித்து ஆகவேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றோம்.

கடவுள் கொள்கை :

'கடவுள் கொள்கை' என்பது எல்லா மதங்களுக்கும் பொதுவான கொள்கையே ஆகும்.

எல்லா மதங்களுக்கும் பொதுவானவரே கடவுள். மதங்களைக் கடந்தவர் கடவுள். இந்த உண்மை திராவிட இனத்தில் தோன்றிய திராவிட மதங்களால் சுட்டிக் காட்டப்படுகிறது.

தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி

என்பது மணிவாசகப் பெருமானின் திருவாக்கு.

கடவுள் இருந்தால் :

'கடவுள்' என்று ஒருவர் இருந்தால், அவரை, திராவிட இனத்திலிருந்து தோன்றியுள்ள திராவிட சமயங்கள் சுட்டிக்காட்டியிருப்பது உண்மையாயிருந்தால், அந்தக் கடவுள், திராவிட இனத்தையும், திராவிட சமயங்களையும் விடுவிக்க முன்வர வேண்டுமல்லவா ? எப்பொழுது ?

திராவிடராகிய நாம் அவரை அறிந்து, உணர்ந்து, அனுபவித்து, அவரிடத்தில் கேட்கும்பொழுது நம்மை விடுவிக்க அவர் முன்வர வேண்டும். அவ்வாறு அவர் முன்வந்துள்ளாரா ? இதற்குமுன் நீங்கள் அவரிடத்தில் கேட்டதுண்டா ? என்னும் கேள்விகள் இப்பொழுது நம்மைப் பார்த்து எழுகின்றன.

முழுஇரவுப் பிரார்த்தனை :

நாம் பிராமணர்களின் தலைமை இடமாகிய, சங்கரமடத்துடன் 1994 முதல் பல்வேறு முறைகளில் போராடி வருகின்றோம். சங்கரமடம், ஆட்சியாளர்களைக் கையில் வைத்துக் கொண்டு, திராவிட இனத்தை நசுக்கி அடிமைப்படுத்துவதையே கொள்கையாகக் கொண்டு செயல்பட்டு

வருகின்றது. அதனால் எந்த நியாயமான, நேர்மையான தீர்வுக்கும் அது முன்வரவில்லை. அந்த நிலையில் 31–3–2003 அன்று நாம் சங்கரமடத்திற்கு எழுதி அனுப்பிய கடிதத்தின் பிற்பகுதி வருமாறு:–

சங்கரமடங்களிலுள்ள உங்களுக்கு எந்தச் சேதமும் ஏற்படாமல், இந்தியாவிலுள்ள சங்கரமடங்களைச் சேர்ந்தவர்கள் அத்தனை பேரும் மனம் திருந்தி, இந்திய மக்களைச் சீரழிக்கும் சாதி ஏற்றத்தாழ்வுக் கொள்கையை இந்தியாவிலிருந்து நீக்குவதற்குத் துணையாகச் செயல்பட வைக்குமாறு இறைவனை நோக்கிப் பிரார்த்தனை செய்ய ஒழுங்கு செய்துகொண்டிருக்கிறோம்.

இந்தியத் திராவிட மக்களை இழிவுபடுத்தும் சாதி ஏற்றத்தாழ்வுக் கொள்கையை இந்தியாவை விட்டு நீக்குமாறு இறைவனை நோக்கி, முழு இரவு பிரார்த்தனை ஒவ்வொரு மாதமும் இரண்டாம் வெள்ளிக்கிழமைதோறும் இரவு 10 முதல் காலை 5 வரை மே மாதம் 9–ஆம் தேதிமுதல் (கி.பி. 2003) நடைபெற இருக்கிறது என்னும் செய்தியை உங்களுக்குத் தெரிவிக்கின்றோம்.

இந்தச் செய்தி உங்களுக்கு அற்பமானதாகத் தோன்றலாம். ஆனால் இந்திய திராவிட மக்களை சாதி ஏற்றத்தாழ்வுக் கொள்கையால் இழிவுபடுத்தும் சங்கரமடங்கள், இந்தியாவில் இருந்து முற்றிலும் நீக்கப்படும் காலத்தை இறைவன் உருவாக்குவார் என்பதில் எங்களுக்கு எவ்வித ஐயப்பாடும் இல்லை என்பதை இதன் வழி உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இறுதியாக

1. "சங்கராச்சாரியாருக்கு ஒரு சவால்" என்ற தலைப்பில் எங்களால் வெளியிடப்பட்ட துண்டு வெளியீட்டில் கூறப்பட்டுள்ள வரலாற்று உண்மைகள் உங்களால் மறுக்க இயலாமல் ஏற்றுக் கொள்ளப் பட்டிருக்கின்றன.

2. சங்கரமடம் ஆரிய பிராமணக் கொள்ளைக் கூட்டத்தின் தலைமை இடம் என்பது 1996 முதல் எங்களால் நடத்தப்பட்ட பல்வேறு போராட்டங்கள், மற்றும் "சங்கரமடத்துக்கு 108 கேள்விகள்" முதலியவற்றின் வழியாகவும் நிலைநாட்டப்பட்டுள்ளன.

3. ஆன்மீக வேடத்தில் நீங்கள் இருந்தபோதிலும் கொள்ளைக் கூட்டம் வழக்கமாகக் கையாளும் முறைகளைக் கையாளும் நடைமுறையை உடையவர்கள் நீங்கள் என்பது உங்களால் மறுக்க முடியாத உண்மையாகிறது.

4. இந்த உலக அரசுகளை உங்கள் காலடியில் நீங்கள் வைத்துக் கொண்டு, எவ்வளவுதான் நீங்கள் செயல்பட்டபோதிலும், இப்பேரண்டத்தை ஆளும் இறைவனுடைய ஆட்சிக்கு எதிராக "நானே கடவுள்" என்ற கொள்கையில் செயல்படும் உங்கள் மடங்களை, இறைவன் தம்முடைய நாசியின் சுவாசத்தால் அழிக்க வல்லவராய் இருக்கின்றார், என்பதை உங்களால் மறுக்க இயலாது என்பதே இப்பொழுது நாங்கள் உங்கள் முன் வைக்கும் சவாலாகும்.

5. இந்த சவாலின் முன் உங்களால் நிற்க இயலாது என்பதை நாங்கள் அறிவோம். அதனால் இந்திய திராவிட மக்களை, சாதி ஏற்றத்தாழ்வுக் கொள்கையால் இழிவுபடுத்தி, சீரழித்து, கொள்ளையடிக்கும் உங்கள் தவறான வழியிலிருந்து சைவ சித்தாந்தம் கூறுகின்றபடி மனம் திருந்தி, இறைவனிடம் மன்னிப்புக் கேட்டு வாழ்வடையுங்கள் என்பதே இப்பொழுது உங்கள் முன் நாங்கள் வைக்கும் வேண்டுகோள் ஆகும்.

இந்த வேண்டுகோளில் உங்களுக்குச் சந்தேகம் இருந்தால், தோமா வழி திராவிடக் கிறிஸ்தவத்தால் பாராட்டப்படும் திருநீற்றை நெற்றியில் அணிந்திருக்கும் நீங்கள், தோமா வழி திராவிடக் கிறிஸ்தவ இலக்கிய நூலாகிய திருவிளையாடற் புராணத்திலுள்ள **"மாபாதகம் தீர்த்த படலத்தை"**ப் படிக்கவும்.

இப்படிக்கு,
(மு. தெய்வநாயகம்)

நாம் சங்கரமடத்திற்கு எழுதிய கடிதத்தின்படியே முழு இரவு பிரார்த்தனை நடைபெற்று வருகிறது.

2005 ஜுன் மாத திராவிட சமயம் இதழின் மேல் அட்டையின் 2ஆம் பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ள செய்தி வருமாறு:–

27 ஆம் முழு இரவுப் பிரார்த்தனை 8.7.2005

"நாம் சங்கர மடத்திற்கு 31–3–2003 அன்று எழுதிய இரண்டாம் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தபடி, 9.5.2003 முதல் ஒவ்வொரு மாதமும் இரண்டாம் வெள்ளிக்கிழமை இரவு 10 மணி முதல் காலை 5 மணிவரை

இந்திய திராவிட மக்களை இழிவுபடுத்தும் ஜாதி ஏற்றத்தாழ்வுக் கொள்கையை இந்தியாவை விட்டு நீக்குமாறு இறைவனை நோக்கி முழு இரவு பிரார்த்தனை செய்து வருகின்றோம். பல

மதங்களைச் சேர்ந்த தலைவர்கள் கலந்து கெண்டார்கள். நம் பிரார்த்தனைக்குப் பலன் கிடைத்து வருகிறது".

கடவுளிடம் பிரார்த்தனை செய்து வருவதால், இதுவரை கிடைத்துள்ள பலன்கள்.

சங்கரமடம் மனந்திருந்தவில்லை. அதனால்,

1. சங்கரமடத்தின் காலடியில் கிடந்த பிராமணர்களின் கையிலிருந்து இந்திய ஆட்சி பிடுங்கப்பட்டது.

2. சங்கரமடத்தின் கட்டளைப்படியெல்லாம் செயல்பட்டு வந்த தமிழக அரசுக்கும் சங்கரமடத்துக்கும் மோதல் உருவாக்கப்பட்டது.

3. பிராமணர்களின் தலைமை இடமாகிய சங்கரமடத்தால், பிராமணராகிய சங்கரராமன் கொலை செய்யப்பட்டு, பிராமணப் பெண்மணியாகிய செல்வி ஜெயலலிதாவால் சங்கரமடத்தின் மடாதிபதிகள் உட்பட சங்கரமடத்தின் பொறுப்பாளர்கள் ஆகிய பிராமணர்கள் சிறைக்கு அனுப்பப்பட்டார்கள்.

4. பிராமணர்களின் கட்சியாகிய ஆ.ஒ.ட.–யின் தலைவராகிய அத்வானியைக் கொண்டே அக்கட்சி சிதறடிக்கப்பட்டு வருகிறது.

5. தமிழ்நாடு பிராமண அமைப்புகளின் ஆணவத்தை மேலோங்கச் செய்து, திராவிட இனத்திற்கு எதிரான அவர்களின் சதி முழுவதும் திராவிட இனத்தினர் அனைவரும் எளிதில் அறிந்துகொள்ள வாய்ப்பாக "தமிழக அந்தணர் வரலாறு" என்னும் நூலாக, எழுத்து உருவத்தில் வெளியிட வைக்கப்பட்டது.

6. "தமிழ்நாடு பிராமண அமைப்புகளுக்கு ஓர் எச்சரிக்கை, 40 நாட்களுக்குள் வருத்தம் தெரிவிக்க வேண்டும்" என்னும் தலைப்பில் 13–6–2005 அன்று காஞ்சி சங்கரமடத்திற்கும், தமிழ்நாடு பிராமணர் சங்கத்திற்கும் எச்சரிக்கை கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது.

மேலே கூறப்பட்டுள்ள இந்த ஆறு செயல்பாடுகளும் மனிதர்களால், செயல்படுத்தப்படக் கூடியவைகளா? மனிதர்கள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றார்கள் என்பதில் ஐயம் இல்லை. ஆனால் மனித முயற்சிக்கு மேலான இப்பேரண்டத்தை ஆளும் இறைவனுடைய செயல்பாடு இதில் இருப்பதை இறை உணர்வாளர் எவரும் மறுத்தல் இயலாது.

ஆகவே, திராவிட இன விடுதலை நெருங்கி வந்துகொண்டிருக்கிறது. கடவுள் திராவிட இனத்தை விடுவிக்கப் போகின்றார்.

தனிப்பட்ட நேர்மையான பிராமணர்கள் செய்ய வேண்டியது என்ன?

தமிழ்நாட்டுப் பிராமணர் அமைப்புகள் பிராமணீயமாகிய கொள்கையைச் செயல்படுத்த வேண்டிய கட்டாயத்தில் இருப்பதால் இப்பொழுது அவற்றால் திடீரென்று தங்கள் கொள்கைக்கு மாறாகச் செயல்படல் இயலாது என்பதை எல்லோரும் அறிவோம்.

இந்த நிலையில் தனிப்பட்ட நேர்மையான பிராமணர்கள் செய்ய வேண்டியது என்ன?

தமிழ் இனம் என்னும் திராவிட இனத்திற்கு எதிராகச் சதி, கொலை, கொள்ளையில் ஈடுபடும் பிராமணர் அமைப்புகளிலிருந்து முதலில் வெளியேற வேண்டும்.

இரண்டாவதாக, 'தமிழக அந்தணர் வரலாறு" என்னும் நூலில் தமிழ் இனம் என்னும் திராவிட இனத்திற்கு எதிரான கருத்துகளை வெளியிட்டமையைக் கண்டித்து அறிக்கை வெளியிட்டு தங்கள் தனிப்பட்ட நிலையைத் தெளிவுபடுத்த வேண்டும். அப்பொழுது தமிழ்நாட்டில் நேர்மையான தனிப்பட்ட பிராமணர்கள் இருக்கிறார்கள் என்ற உண்மை வெளிப்படும்.

அத்துடன் கடவுள் நம்பிக்கையுள்ள தனிப்பட்ட நேர்மையான பிராமணர்கள், பிராமணீயக் கொள்கையையுடைய மற்ற பிராமணர்கள் மனம் திருந்த பிரார்த்தனையில் ஈடுபட வேண்டுவது இன்றியமையாதது ஆகும். அந்தப் பிரார்த்தனை தனிப்பட்ட பிரார்த்தனையாகவும் இருக்கலாம். கூட்டுப் பிரார்த்தனையாகவும் இருக்கலாம்.

உண்மையில் நடப்பது என்ன?

– டாக்டர் தெ. தேவகலா

சில விஷயங்கள் பார்ப்பதற்கு ஒரு விதமாய்த் தோன்றும். ஆனால், நடப்பதோ வேறு விதமாக இருக்கும். தேர்தல் முடிவுகள் எதிர்பாராத விதமாய் அமையும் போதெல்லாம் இதை நன்றாகவே நாம் உணர்கிறோம்.

நமது புத்திரிகையில் தொடர்ந்து, 'திராவிட இனம் விடுதலை அடைந்தே தீரும். இது கடவுளின் திட்டம்' என்று சொல்லிக் கொண்டே இருக்கின்றோம். பேசிக் கொண்டே இருக்கின்றோம். ஆனால், பொதுவாக, 'இது ஒரு கற்பனை. இது எப்படி நடக்கும். எங்கு பார்த்தாலும்

பிராமணீய ஆட்சியும் பிராமணீய செல்வாக்கும்தாமே களைகட்டுகிறது. திராவிடர்கள் என்றைக்கு ஒன்று சேர்ந்து என்றைக்கு விடுதலை அடைவது? இதெல்லாம் நடக்காத ஒன்று' என்று நினைப்பவர்கள்தாம் பலர்.

உண்மையில் நடப்பது என்ன?

இவ்வாறு நினைப்பது சரியாகத்தான் தோற்றம் அளிக்கிறது.

ஆனால் இது வெறும் தோற்றமே தவிர, உண்மை அல்ல. இதைக் குறித்து நம் ஆசிரியர் கூறுபவற்றை மிகச் சுருக்கமாகப் பின்வருமாறு கூறலாம்.

உண்மைக்காலங்களில் நடப்பது என்ன?

- மத்தியில் பாரதீய ஜனதா கட்சி கொடி கட்டிப் பறந்து, பிராமணீயம் தளைத்தோங்கி இருந்த நிலை தலைகீழாக மாறி, இன்றைக்கு நடப்பதோ பாரதீய ஜனதா கட்சிக்கு மாறுபட்ட வேறு ஆட்சி.

- இரண்டாவதாக, ஆரியப் பிராமணீயத்தின் ஊற்றிடமாக சங்கரமடம் ஆணவத்தோடு, தலைநிமிர்ந்து, அட்டகாசமான காரியங்களை அசாதாரண துணிச்சலுடன் செய்து கொண்டு இருந்த நிலைக்குப் பெருத்த இடிவிழுந்து இன்றைக்குச் சங்கரமடமே சங்கடமடமாக மாறிய நிலை.

- மூன்றாவதாக, மதக்கலவரத்தையும் சாதிக் கலவரத்தையும் 'இந்துத்துவா'வின் பெயரால் தூண்டி, பிழைப்பை நடத்தும் பாரதீய ஜனதாக் கட்சிக்குள்ளேயே பெரும் பிளவும் போராட்டமும் நடக்கும் நிலை..........

  இவையெல்லாம் எதைக் காட்டுகின்றன. வெளியில் பார்ப்பதற்குத் திராவிட இனமும் திராவிட இந்தியாவும் அடிமைப்பட்டு இருப்பது போன்ற ஒரு தோற்றம். ஆனால், உண்மையில் நடப்பதோ திராவிட இனத்திற்கு எதிரான சக்திகள் – பிராமணீய அஸ்திவாரங்கள் கலகலத்து, வெலவெலத்து, அசைந்து கொண்டிருக்கும் பரிதாபநிலை.

  அதிலும் நான்காவதாக நமது ஆசிரியர் கூறும் பரிதாப நிலை என்ன?

- இப்படியே சென்று கொண்டு இருந்தால், திராவிட இனத்திற்கு எதிராகச் செயல்படும் பிராமணீய சக்தியை அடையாளம் கண்டு கொண்ட, துடிப்புமிக்க திராவிட இளைஞர் கூட்டம், அதனால்

உணர்வு மேலோங்கி, பிராமணருக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் நிலை ஏற்படாமல் தடுப்பது எப்படி? என்பதே இன்றைக்கு நம் முன் இருக்கும் கேள்வி ஆகும்.

இதற்காகத்தான் பிராமணர் மனம் திருந்த அனைத்து சமயப் பிரார்த்தனைக் கூட்டம் நடைபெற உள்ளது. இதுவரை நாம் தொடர்ந்து செய்து வரும் முழு இரவு பிரார்த்தனைக்கு, நல்ல பலனைக் கண்டு வருகிறோம். காரணம் நமது பிரார்த்தனையால் மட்டும் அல்ல. திராவிட இன விடுதலை என்பது கடவுளின் திட்டமாக இருப்பதால், அத்திட்டம் நிறைவேறும் வண்ணமாக நாம் பிரார்த்தனை செய்ய கடவுள் நம்மைத் தூண்டியுள்ளார் என்பதே துல்லியமான உண்மை.

'ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே'

என்று நம் பெரியோர் பாடிய அனுபவத்தை, அதை அனுபவிப்பவர்கள்தாம் உணர முடியும்.

ஆனால் ஒன்று!

பிராமணர் மனம் திருந்த பிரார்த்தனை செய்வது நம் கடமை. ஆனால் கடவுளின் தருமத்தின்படி, பொது நன்மைக்கு எதிராகச் செயல்படுவோர் யாராக இருந்தாலும் நீதி அரசனாகிய கடவுள், நீதியை நிலைநிறுத்தும்வண்ணம் தண்டிப்பதை, 'அசுரவதை' புராணங்கள் நமக்குத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன.

தீமை செய்வோர் தண்டிக்கப்படுவதை 'ருத்ரதாண்டவம்', 'மகிஷாசுரமர்த்தினி', முயலகனை மிதித்து, வென்று நடனமாடும் சிவநடனம்...... போன்றவை விளக்குகின்றன.

எனவே, உண்மையில் நடப்பவற்றை உணர்ந்து, திருந்தி, மனம் மாறி அன்புச் சகோதரராக ஐக்கியத்துடன் வாழ்ந்து இறை அன்பில் திளைக்கலாம்... இல்லையென்றால்............... நீதி அரசனின் தீர்ப்பிற்கே விட்டு விடவும் செய்யலாம்..............

முடிவு அவரவர் கையில்.....

பின்னிணைப்பு – V

(தமிழ்நாடு பிராமண அமைப்பினர் இயேசு கிறிஸ்துவை இழிவுபடுத்தியது ஏன்?)

வரலாற்றில், தமிழர் - திராவிடர் - திராவிட சமயம்

'தமிழர்' என்னும் தமிழ்ப்பெயர் சமஸ்கிருதத்தில் 'திராவிடர்' என்று குறிக்கப்படுகிறது. ஒரு காலத்தில் இந்தியா முழுவதும் தமிழ் மொழி பேசப்பட்டு வந்தது என்று பாபா சாகிப் டாக்டர் அம்பேத்கார் குறிப்பிடுகின்றார்.

1. இன்று தமிழ்மொழியைப் பேசும் தமிழர்கள் என்னும் திராவிடர்கள் தமிழ்நாட்டில் வாழுகின்றார்கள்.
2. தமிழிலிருந்து பிரிந்த, மலையாளம், கன்னடம், தெலுங்கு முதலிய திராவிட மொழிகளைப் பேசும் திராவிடர்கள் தென்இந்தியாவில் வாழுகின்றார்கள்.
3. திராவிட மொழிகளை மறந்த திராவிடர்கள் வடஇந்தியாவில் வாழுகின்றார்கள்.

இன்று இந்திய மக்கள் தொகையில் 90% பேர் திராவிட இனமக்கள். இவர்கள் சூத்திரர், பஞ்சமர் என்று ஆரியப் பிராமணர்களால் முத்திரை குத்தப்பட்டு, ஆரியப் பிராமணர்களிடம் அடிமை வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

ஆரிய வர்த்தம்

கி.மு.6ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.6ஆம் நூற்றாண்டு வரை இந்தியாவின் மீது படையெடுத்து வந்த, பாரசீகர், கிரேக்கர், சகர், குஷாணர், ஹூணர் ஆகிய அந்நியர்கள் 'ஆரியர்' என்ற பொதுப்பெயரால் அழைக்கப்படுகின்றார்கள். இவர்கள் கி.பி.7ஆம் நூற்றாண்டில் ராஜஸ்தானிலுள்ள மவுண்ட் அபுவில் ஆரியக் கூட்டணியை அமைத்தார்கள். ஆரியக் கூட்டணி வடஇந்தியாவின் பெரும் பகுதியைப் பிடித்து 'ஆரியவர்த்தம்' என்ற பெயரால் அதை கி.பி.7ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.12ஆம் நூற்றாண்டு வரை ஆட்சி செய்தது.

சதுர்வர்ணம்

அப்பொழுது, பிராமணர், சத்திரியர், வைசியர் என்று ஆரியர்கள்

தங்களை மூன்று பிரிவுகளாகப் பிரித்துக் கொண்டு திராவிடர்களை நசுக்கி ஆட்சி செய்தார்கள்.

திராவிடர்களில், ஆரியருக்கு அடிபணிந்த பொதுமக்கள் 'அடிமைகள்' என்னும் பொருளில் 'சூத்திரர்' என்று முத்திரை குத்தப்பட்டு, ஆரிய ஆட்சியில் குடியுரிமை பெற்றார்கள்.

ஆகவே, ஆரிய வர்த்தத்தில் குடியுரிமையுடைய பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் ஆகிய நான்கு பிரிவினரும் சதுர்வருணத்தார் என்று பெயர் பெற்றார்கள்.

பஞ்சமர்

ஆரியர்களை எதிர்த்த திராவிடத் தலைவர்கள், திராவிட ஞானிகள், உடைமைகள் பறிக்கப்பட்டு, ஊருக்கு வெளியே துரத்தப்பட்டார்கள். ஆரிய வர்த்தத்தில் இவர்களுக்குக் குடியுரிமை கிடையாது. யார் வேண்டுமானாலும் இவர்களைக் கொடுமைப்படுத்தலாம். தட்டிக் கேட்க ஆள் கிடையாது. இவர்கள் 'ஐந்தாவது பிரிவினர்' என்னும் பொருளில் 'பஞ்சமர்' என்று அழைக்கப்பட்டனர்.

அந்நியர்களின் ஒற்றுமை

கி.பி. 12 ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர் இந்தியாவை ஆண்ட இஸ்லாமியர்களும், ஐரோப்பியர்களும் வெளிநாட்டிலிருந்து வந்த அந்நியர்களாய் இருந்தபடியால், அந்நியர்களாகிய ஆரியர்கள், இவர்களோடு சேர்ந்து கொண்டு திராவிடர்களை நசுக்கினார்கள். ஆரியர்கள் அந்நியர் ஆட்சியில் பங்கு கொண்டனர்.

கடைசியாக இந்தியாவை ஆட்சி செய்த அந்நியர்களாகிய ஐரோப்பியர்களை 1947இல் இந்தியாவை விட்டு வெளியேற்றி இந்தியா சுதந்திரம் அடைந்தது.

பிராமணர்களின் அச்சம்

அந்நியர்களாகிய ஐரோப்பியர்களுடன் சேர்ந்து கொண்டு, தங்களுக்கு 'இந்திய ஐரோப்பியர்கள்' (Indo Europeans) என்னும் பெயரைச் சூட்டிக் கொண்டு ஐரோப்பியர்களாகிய ஆங்கிலேயர் ஆட்சியில் பங்கு கொண்டிருந்த ஆரியப் பிராமணர்களுக்கு, ஆங்கிலேயர் வெளியேற்றப்பட்ட பின்னர் உள்ளத்தில் அச்சம் வந்தது. என்ன அச்சம்?

மக்களாட்சி மலர்ந்துள்ள இந்தியாவில், திராவிட இனமக்கள் 90% இருக்கின்றார்கள். இவர்கள் தங்களை உணர்ந்து ஒன்று சேர்ந்து

விட்டால், பிராமணர்களாகிய தங்களையும் இந்தியாவை விட்டு விரட்டி விடுவார்களோ ? என்ற அச்சம் பிராமணர்கள் உள்ளத்தில் உருவாயிற்று.

ஏனென்றால் பிராமணர் இந்திய மக்கள் தொகையில் ஏறத்தாழ 4% மட்டுமே இருக்கின்றார்கள். மிக மிகச் சிறுபான்மையினர் பிராமணர்கள்.

சதித் திட்டம்

ஆரியப் பிராமணர்கள் இந்தியாவின் ஆதிக்குடிமக்கள் என்று இந்திய மக்களாகிய திராவிடர்களைக் கபடமாக ஏமாற்றி நம்ப வைத்து விட்டால், தாங்கள் இந்தியாவில் நிம்மதியாக இந்திய ஆட்சியின் தலைமை இடத்தில் இருக்கலாம் என்று சதித் திட்டம் போட்டார்கள்.

அந்தச் சதித் திட்டத்தை நிறைவேற்ற பிராமணர்களால் உருவாக்கப்பட்ட B.J.P. இந்திய ஆட்சியைப் பிடித்து ஆளும் நேரமே தகுந்த நேரம் என்று முடிவு செய்தார்கள். தங்கள் விருப்பத்திற்கு ஏற்ப இந்திய வரலாற்றை மாற்றி எழுதி அதைக் கல்வி நிலையங்களில் இந்திய மாணவர் உள்ளங்களில் திணித்தார்கள்.

திராவிட மக்களின் தலைமை இடம்

இந்திய மக்களில் 90% இருக்கும் திராவிட இன மக்களின் தலைமை இடம் தமிழ்நாடு. இங்குதான் 'திராவிடர்' என்ற பெயருக்கு அடிப்படைக் காரணமான தமிழ்மொழி பேசப்பட்டு வருகிறது.

இன்று இந்தியாவில் பேச்சு வழக்கில் இருக்கும் மொழிகளில், தமிழ் மொழியில் மட்டுமே, 2000 ஆண்டுகளுக்கு மேற்பட்ட இந்தியத் திராவிடர்களின் வரலாறு இருக்கிறது. தமிழ் இனம் என்றும் திராவிட இனத்தின் சிறப்பு தமிழ் மொழியில் மட்டுமே இருக்கிறது.

நடுங்க வைக்கும் ஒன்று

இதனால் ஆரியப் பிராமணர்களுக்கு, 'தமிழ்மொழி' என்றாலே அது ஆரியப் பகைவரின் மொழி என்ற உணர்வு அவர்கள் உள்ளத்தில் தோன்றி அவர்களை நடுங்க வைக்கும் ஒன்றாக இருக்கிறது.

மிக அதிகம் நடுங்க வைக்கும் பெயர்

ஆரியப் பிராமணர்களை மிகவும் அதிகமாக நடுங்க வைக்கும் பெயர் 'திராவிடர்' என்பது ஆகும் . 'திராவிடர்' என்ற பெயரைக் கேட்டவுடன், ஆரிய–திராவிடப் போர் நினைவு அவர்கள் உள்ளத்தில்

வந்து, அவர்களை மிக அதிகமாக நடுங்க வைத்து விடுகிறது. அதனால் இந்திய மொழிகளில் 'திராவிடர்' என்னும் பெயர் எங்குமே இல்லாதபடி ஆரியப் பிராமணர்கள் திட்டமிட்டு நீக்கி வந்துள்ளதை இந்திய வரலாறு தெளிவாகக் காட்டுகிறது.

பிராமணத் தந்திரம்

'தமிழர்' என்று வேண்டுமானால் கூறிக்கொள், 'திராவிடர்'–என்று கூறிவிடாதே என்பதே ஆரியப் பிராமணர்கள், தங்களுக்கு நெருக்கமான தமிழர்களிடம் கொடுக்கும் ஆலோசனை ஆகும்.

'தமிழர் யார் ?' என்றால் "தமிழ்மொழி பேசுகின்றவர்கள் எல்லோரும் தமிழர்களே" என்ற விளக்கத்தைக் கொடுத்து 'தமிழ்நாட்டுப் பிராமணர்களும் தமிழ் மொழியைப் பேசி வருகின்ற காரணத்தால், பிராமணர்களும் தமிழர்களே' என்று கூற வைத்து விடலாம் என்பது பிராமணர்களின் தந்திரம்.

'பிராமணர்களும் தமிழர்களே' என்று தமிழ் மக்களை நம்ப வைத்துவிட்டால், பிராமணர்களாகிய ஆரியர்களை எதிர்க்கும் திராவிட இன உணர்வு மறைந்து, ஆரியப் பிராமணர்களிடம், திராவிட இன மக்கள் என்றென்றும் அடிமைகளாக வாழ்வார்கள் என்பது ஆரியப் பிராமணர்களின் சதித் திட்டம்.

தேர்ந்தெடுக்கப்பட்ட நேரம்

பிராமணர்கள் தங்களை ஆரிய இனத்தினர் என்று உரிமை பாராட்டினால், கேட்பவர்களுக்கு 'ஆரியர்' என்பதற்கு எதிரான 'திராவிடர்' என்னும் இன உணர்வு வந்து விடும் என்று எண்ணினர்.

அதனால், ஆரியர், திராவிடர் என்று இரண்டு இனங்கள் இல்லை என்று நம்ப வைத்து விட்டால், பிராமணர்களுடைய தலைமைப் பதவிக்கு எந்தச் சிக்கலும் இல்லாமல் தமிழ்நாட்டில் நீடிக்கலாம். பிராமணர்களே தமிழகத்தின், இந்தியாவின் ஆதிக்குடி மக்கள் என்று நம்ப வைத்து விடலாம் என்னும் தமிழ்நாட்டுப் பிராமணர்களின் திட்டத்தை நிறைவேற்ற, மத்தியில் B.J.P. யும் மாநிலத்தில் பிராமணப் பெண்மணியாகிய செல்வி ஜெயலலிதாவும் ஆளும் நேரத்தைத் தேர்ந்தெடுத்தார்கள்.

பிராமண அமைப்புகளின் திட்டம்

பிராமணர்களின், ஜாதி ஏற்றத்தாழ்வுக் கொள்கைக்குத் தமிழ்நாட்டிலுள்ள தலைமை இடம் காஞ்சி சங்கரமடம். தமிழ்நாட்டுப்

பிராமண ஜாதியினரின் ஜாதிச் சங்கம், தமிழ்நாடு பிராமணர் சங்கம். இந்த இரண்டு பிராமண அமைப்புகளும் சேர்ந்து, தங்கள் திட்டத்தை நிறைவேற்ற திரு. கே.சி. லட்சுமி நாராயணன் என்பவரை, பிரதம ஆசிரியராகத் தேர்ந்தெடுத்து,

1. அருந்தொண்டாற்றிய தமிழக அந்தணர்கள்

2. தமிழக அந்தணர் வரலாறு

என்னும் இரண்டு நூல்களை, சதிமுறையில் திராவிட இனத்திற்கு எதிராக எழுதியுள்ளனர். தமிழ் அந்தணர்கள் பிராமணர்களே என இந்த நூல்கள் சாதிக்க முயலுகின்றன.

ஜாதி ஏற்றத்தாழ்வை எதிர்ப்பவர்கள்

பிராமணர்களின் ஜாதி ஏற்றத்தாழ்வுக் கொள்கையை எதிர்க்கும் கொள்கையையுடையவர்கள் இந்தியாவில் மூன்று பிரிவினர். அவர்கள்

1. இஸ்லாமியர்கள்
2. கிறிஸ்தவர்கள்
3. கம்யூனிஸ்டுகள்

இந்த மூன்று பிரிவினரும் 'தமிழக அந்தணர் வரலாறு' என்னும் நூல் முழுவதும் கண்டிக்கப்பட்டுள்ளார்கள்.

அதிகம் இழிவுபடுத்தப்பட்டிருப்பவர்கள்

இந்த மூன்று பிரிவினரில் அதிகம், கண்டிக்கப்பட்டிருப்பதுடன் இழிவுபடுத்தப்பட்டுமிருப்பவர்கள் கிறிஸ்தவர்கள்.

கிறிஸ்தவத் திருச்சபையும், கிறிஸ்தவ நற்செய்தியாளரும் இழிவுபடுத்தப்பட்டிருப்பதுடன், இயேசு கிறிஸ்து பயங்கரமான முறையில் இழிவுபடுத்தப்பட்டிருக்கின்றார். அதுவும் சதி முறையில்.

இந்தப் பகுதியை (பக்கம் 650) வாசிக்கும் கிறிஸ்தவர்களின் உள்ளம் துன்பத்தால் துடிக்கும் நிலையில் இப்பகுதி சதிமுறையில் அமைக்கப்பட்டுள்ளது.

பிராமணர்கள் கிறிஸ்தவ நற்செய்தியாளரையும் கிறிஸ்தவத் திருச்சபையையும் இயேசு கிறிஸ்துவையும் இந்த அளவுக்கு இழிவுபடுத்தக் காரணம் என்ன? என்னும் கேள்வியைக் கேட்டால், இக்கேள்விக்குத் 'தமிழக அந்தணர் வரலாறு' என்னும் நூல் காரணங்களைச் சதிமுறையில் அடுக்குகிறது,

காரணம் என்ன?

கிறிஸ்தவப் பாதிரியார்கள் தமிழகத்தில் பணி ஆற்றுவதற்கு முன்னர், தமிழ் மொழியும் தமிழ் இனம் என்னும் திராவிட இனமும் ஆரியப் பிராமணர்களிடம் முழு அளவில் அடிமைப்பட்டுக் கிடந்தன. ஆனால் கிறிஸ்தவப் பாதிரியார்கள் தமிழகத்தில் கால் வைத்த பின்னர் நிலைமை மாறி விட்டது.

1967 முதல் இன்று வரை 38 ஆண்டுகள் திராவிட இயக்கங்கள் தமிழ்நாட்டின் ஆட்சியில் அமர்ந்து, ஆரிய பிராமண எதிர்ப்பை இந்தியா முழுவதும் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றார்கள் என்றால், அதற்குக் காரணம் கிறிஸ்தவப் பாதிரியார்களே. எவ்வாறு?

18ஆம் நூற்றாண்டு

இந்தியாவில் தோன்றிய அறிஞர்கள் அத்தனை பேரிலும், புகழால் மட்டுமல்லாமல் சிலையாலும் உயர்ந்து நிற்பவர் திருவள்ளுவர். 133 அடி உயரத்தில் இந்தியாவின் தென்முனையாகிய கன்னியாகுமரியில் இந்தியச் சிலைகள் அத்தனையிலும் உயரமான சிலை வடிவில் நின்று கொண்டிருக்கின்றார் திருவள்ளுவர்.

இந்தியாவின் தேசிய நூலாக, திருக்குறள் அறிவிக்கப்படவேண்டும் என்னும் தீர்மானம் தமிழக சட்டசபையில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

இன்று திருக்குறள் 80க்கும் மேற்பட்ட உலக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு, அதன் பெருமையை உலகம் முழுவதும் அறிந்து கொண்டிருக்கிறது.

இதற்குக் காரணமானவர்கள் கிறிஸ்தவப் பாதிரியார்களே. 20ஆம் நூற்றாண்டில் கூட, திருக்குறளைத் **'தீக்குறள்'** என்று இகழ்ந்து கூறியவர் மறைந்த காஞ்சி சங்கராச்சாரியார். காரணம் பிராமணர்களின் கொள்கைகளுக்கு எதிரான கொள்கையுடைய தமிழராகிய திராவிடர் திருவள்ளுவர்.

திருவள்ளுவருடைய கொள்கை உலகம் முழுவதும் பரவ வேண்டும் என்னும் நோக்கில், அப்பொழுது உலகம் முழுவதும் கிறிஸ்தவர்களின் வழிபாட்டு மொழியாக இருந்த, இலத்தீன் மொழியில் திருக்குறளை முதன்முதலாக, தமிழ் அல்லாத மொழிக்கு மொழிபெயர்த்தவர் வீரமாமுனிவர் என்று தமிழர்களால் அறியப்பட்ட, **கான்ஸ்டன்டைன் ஜோஸப் பெஸ்க்கி என்னும் கிறிஸ்தவப் பாதிரியார் ஆவார்.**

இது தமிழ்மொழிக்கும் தமிழர்களுக்கும் ஓர் உயர்வை ஏற்படுத்தியது.

19ஆம் நூற்றாண்டு

இந்தியாவில் ஆங்கிலேயர் ஆண்டு கொண்டிருந்த காலத்தில், ஆங்கிலம் உலகம் முழுவதும் பொதுமொழியாகப் பரவிக் கொண்டிருந்தது. திருக்குறள் முழுவதையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்ததுடன், திருவாசகம், திருவருட்பயன் முதலிய தமிழர் சமய நூல்களையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து தமிழ்மொழி, தமிழ் இலக்கியம், தமிழர் ஆன்மீகம் இவற்றின் சிறப்பை உலகம் அறியுமாறு செய்ததுடன், தன்னை ஒரு தமிழ் மாணவன் என்றும் அறிவித்தவர் **ஜி.யு.போப் என்னும் கிறிஸ்தவப் பாதிரியார்.**

தமிழ்மொழி சமஸ்கிருத மொழியிலிருந்து தோன்றிய மொழி என்று தமிழர்களும் நம்பிக் கொண்டிருந்த காலத்தில், திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் தலைப்பில் ஓர் ஆராய்ச்சி நூலை எழுதி, தமிழ்மொழி சமஸ்கிருதத்திலிருந்து தோன்றிய மொழி இல்லை என்றும், தமிழ் தனித்து இயங்கக்கூடிய மிகப்பழமையான செம்மொழி என்றும், தமிழ்மொழியிலிருந்து பிரிந்தவையே மற்ற திராவிட மொழிகள் என்றும் நிரூபித்துக் காட்டியவர் **கால்டுவெல் என்னும் கிறிஸ்தவப் பாதிரியார்.**

கால்டுவெல்லின் ஆய்வின் பயனாகவே தமிழ் மறுமலர்ச்சி இயக்கங்களும் திராவிட இயக்கங்களும் தோன்றி வளந்துள்ளன என்பது வரலாறு.

20ஆம் நூற்றாண்டு

1921க்குப் பின்னர் ஹரப்பா, மொஹஞ்சோதரா முதலிய இடங்களில் நடைபெற்ற அகழ்வாராய்ச்சிகளின் பயனாக, சிந்துவெளி நாகரிகம் வெளிப்பட்டது. சிந்துவெளி நாகரிகம் ஆரிய நாகரிகம் என்று காட்ட ஆரிய பிராமணர்கள் இன்று வரை கடும் முயற்சி, சதிமுறையில் எடுத்து வருகின்றனர். சிந்துவெளி நாகரிகம், திராவிட நாகரிகமே என்பதை நேர்மையான ஆராய்ச்சியாளர் எவரும் மறுக்க இயலாவண்ணம் தக்க ஆராய்ச்சியின்வழி நிலைநாட்டியவர் **ஹீராஸ் என்னும் கிறிஸ்தவப் பாதிரியார் ஆவார்.**

சிந்துவெளி திராவிடர்களின் நாகரிகத்திலிருந்தே, சுமேரிய, எகிப்திய நாகரிகங்கள் பிறந்தன என்பதை, ஹீராஸ் பாதிரியார் தகுந்த காரணங்களுடன் விளக்கியுள்ளார்.

21ஆம் நூற்றாண்டு

தமிழ்மொழி, தமிழ் இலக்கியம், திராவிட மொழிகள், திராவிட நாகரிகம் திராவிட இனம் இவற்றின் சிறப்புகள் கிறிஸ்தவப் பாதிரியார்களால் வெளிக்கொண்டு வரப்பட்டு உலகத்தின் கவனத்தை ஈர்த்துள்ளன.

20ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 21 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும், திராவிடர்களின் ஆன்மீகக் கொள்கைகளிலிருந்து உருவானவைகளே உலக சமயங்கள் என்றும், உலக சமயங்கள் அனைத்திற்கும் ஒருபொதுப் பெயர் கொடுத்தால் அது ‘திராவிட சமயம்’ என்ற பெயரில் அடங்கி விடுகிறது என்றும், தக்க வரலாற்று ஆய்வுகளின் வழி **திராவிட ஆன்மீக இயக்கம்** நிறுவியுள்ளது.

சவால்

இந்த அடிப்படையில் ‘இந்தியா ஒரு தோமாவழி திராவிடக் கிறிஸ்தவ நாடே’ என்று தக்க ஆய்வு அடிப்படையில் அறிவித்ததுடன், இந்த வரலாற்று உண்மையை, சங்கரமடத்தால் மறுக்க இயலுமா ? என்று கேட்டு காஞ்சி சங்கராச்சாரியாருக்கும், சங்கரமடத்திற்கும் சவால் கடிதம் 12–2–2003இல் அனுப்பப்பட்டது.

ஒப்பாரி

அக்கடிதத்தின் விளைவே, நேர்மையற்ற சதிமுறையில் ‘தமிழ்நாடு பிராமணர் சங்கம்’, ‘காஞ்சி சங்கரமடம்’ ஆகிய இரண்டு பிராமண அமைப்புகளாலும் வெளியிடப்பட்டிருக்கும், “தமிழக அந்தணர் வரலாறு” என்னும் சதிநூல் ஆகும். இந்த நூலில் தோமா வழி திராவிடக் கிறிஸ்தவம் பற்றிய நமது கருத்து தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. ஆனால் மறுப்பு இல்லை. ஒப்பாரிதான் இருக்கிறது.

ஓடி ஒளிந்து கொண்டனர்

காஞ்சி சங்கரமடத்திற்கும், தமிழ்நாடு பிராமணர் சங்கத்திற்கும், “இந்தியா தோமா வழி திராவிடக் கிறிஸ்தவ நாடே – எவ்வாறு ?” என்னும் தலைப்பிலுள்ள நூல் 13–6–2005இல் அனுப்பி வைக்கப்பட்டது. நேர்மையான ஆராய்ச்சி இந்த அமைப்புகள் அறியாதவை. அதனால் நாம் ஆராய்ச்சி விவாதத்திற்கு அழைத்தபோது ஓடி ஒளிந்து கொண்டார்கள்.

எச்சரிக்கை

ஒளிந்து கொண்டவர்கள் வருத்தம் தெரிவிக்க வேண்டும் என்னும் எச்சரிக்கை கொடுக்கப்பட்டுள்ளது.

விடுதலை நாயகன்

ஆரியப் பிராமண அமைப்புகளிடம் அடிமைப்பட்டுக் கிடக்கும், தோமா வழி திராவிடக் கிறிஸ்தவத்தை விடுவிக்கும் பணி கிறிஸ்துவின் உண்மைத் தொண்டர் ஒவ்வொருவருக்கும் உரியது ஆகும். இப்பணியில் எங்களோடு இணைந்து தொண்டாற்ற விரும்பும், தியாக உள்ளம் கொண்டுள்ள தொண்டர்களை அன்புடன் வரவேற்கின்றோம்.

தமிழ்நாடு பிராமண அமைப்புகள், கட்டுண்டவர்களை விடுவிக்கச் சொல்லும் விடுதலை நாயகனாகிய இயேசு கிறிஸ்துவை இழிவுபடுத்தியது ஏன் என்பதற்கான காரணம் இப்பொழுது விளங்குகிறது அல்லவா ?

பிரார்த்தனை

இயேசு கிறிஸ்து தம்மைச் சிலுவையில் அறைந்து கொலை செய்தவர்களுக்காகவும் கடவுளிடம் பிரார்த்தனை செய்தார்; அவர் வழியைப் பின்பற்றும் கிறிஸ்தவர்களுக்கும், பிராமண அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் மனம் திருந்த பிரார்த்தனை செய்ய வேண்டிய கடமை இருக்கிறது.

30–7–2005 அன்று தொடங்கும் பிராமண அமைப்பினர் மனம் திருந்தப் பிரார்த்தனை, பின்னரும் தனிப் பிரார்த்தனையாகவும் கூட்டுப் பிரார்த்தனையாகவும் தொடர வேண்டும். எல்லாம் வல்ல இறைவன் பிரார்த்தனைக்கு நிச்சயம் பதில் கொடுப்பார். கொடுக்கின்றார்.

“கேளுங்கள், உங்களுக்குக் கொடுக்கப்படும்”

இலக்குவனார் இலக்கியப் பேரவை
நாள்.................
அம்பத்தூர், சென்னை-53

தமிழ் இனத்தின் மீது பிராமண சங்கத்தார் தொடுத்துள்ள போர் :

அறிஞர் மு. தெய்வநாயகம் அவர்களின் அறைகூவல்

தமிழ்நாடு பிராமணர் சங்கமும், காஞ்சி சங்கரமடமும் தமிழ் இலக்கியம் கூறும் தெய்வீகக் குணமுடைய அந்தணர்கள் தங்கள் பிராமண ஜாதியினரே என்று உரிமை பாராட்டி

- *அருந்தொண்டாற்றிய தமிழக அந்தணர்கள்*
- *தமிழக அந்தணர் வரலாறு*

என்னும் தலைப்புகளில் இரண்டு நூல்களை அண்மையில் வெளியிட்டுள்ளார்கள். இரண்டாம் நூலின் மேலட்டையில் கீழ்க்கண்ட வாசகங்களை அவர்கள் அச்சிட்டுள்ளார்கள்.

- ஆரியர் எனப்படுவோர் படையெடுத்து, இந்தியாவுக்குள் வந்தார்கள் என்ற கூற்று சுத்தப் பொய் என்று, இந்த நூல் நிறுவுகிறது.
- தமிழ்நாடு உள்ளிட்ட இந்தியாவின் ஆதிக்குடி மக்கள் பிராமணர்கள் என்று, இந்த நூல் நிரூபிக்கிறது.
- ஆரியர் - திராவிடர் வேற்றுமை என்ற வாதம் வெறும் கற்பனை என்று, இந்த நூல் தெரிவிக்கிறது.
- வேத கால நாகரிகமாகிய பண்டைய பிராமணர் நாகரிகமே, உலகமே புகழும் இந்தியாவின் நாகரிகம் என்று, இந்த நூல் நிலைநிறுத்துகிறது.

காஞ்சி மடத்தின் ஆசியோடும், ஆதரவோடும் பிராமண சங்கத்தார் தமிழ் இனத்தின் மீது தொடுத்துள்ள இந்தப் போரை எதிர்த்து முறியடிப்பது, திராவிட இயக்கம் / தமிழ் இயக்கத்தின் முதன்மையான கடமை. காஞ்சி சங்கரமடத்திற்கு எதிராக பல்லாண்டுகளாக போராடி வருபவரும், இந்தியாவில் திராவிட சமயத்தை மறு உருவாக்கம் செய்யும் நோக்கில் செயல்பட்டு வரும் "திராவிட சமயம்" இதழின் ஆசிரியரும் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர், ஷெட்யூல்டு வகுப்பினர், சமயச் சிறுபான்மையினர் உரிமைப் பாதுகாப்பு பேரவையின் நிறுவனத் தலைவருமாகிய அறிஞர் மு. தெய்வநாயகம் அவர்கள், தமிழ்நாடு பிராமண சங்கத்தோடு மாபெரும் விவாதம் ஒன்றைத் தொடங்கியுள்ளார். இந்த விவாதத்தில் அவரோடு கைகோத்துக் கொள்வது தமிழுணர்வாளர்களாகிய நம் கடமை.

அறிஞர் மு. தெய்வநாயகம் அவர்களோடு உடனடியாகத் தொடர்பு கொள்ளுமாறு தமிழ்நேயம் சார்பில் நண்பர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

–ஞாநி, ஆசிரியர், தமிழ்நேயம் – கோவை

முகவரி : அறிஞர் மு. தெய்வநாயகம், 278, கொன்னூர் நெடுஞ்சாலை, அயன்புரம், சென்னை - 600 023. தொலைபேசி : 91-44-2644 9032